Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் – 40 | விலை – 40 ரூபா    செய்தி : 021 493 0000    விளம்பரம் : 021 493 1111

சுடர் :35    கதிர் :47    மார்கழி 27 ஆம் நாள்    ஞாயிற்றுக்கிழமை    12 ஜனவரி 2020    வள்ளுவர் ஆண்டு 2050



# இந்தியாவின் பாதுகாப்பு ஈழத்தமிழர்களின் கையில்!

## இந்தியாவில் வைத்து விக்கி இடித்துரைப்பு

**சென்னை, ஜனவரி 12**

இலங்கையில் தமிழ் மக்கள் எந்தளவுக்கு உயர் அதிகாரத்துடன் இருக்கின்றார்களோ அந்தளவுக்கு இந்தியாவின் தென்கோடியும் பாதுகாப்பாக இருக்கும் என்று இந்தியக் கொள்கை வகுப்பாளர்களிடம் எடுத்துச் சொல்லுங்கள். எமக்கு கிடைக்கக்கூடிய உயர் அதிகாரங்கள் எந்தவிதத்திலும் இந்தியாவின் மாநில சுயாட்சிக்கு அச்சுறுத்தலாக அமையாது. இலங்கையில் எந்தளவுக்கு தமிழ் மக்கள் ஒடுக்கப்படுகின்றார்களோ, எந்தளவுக்கு அவர்களின் பூர்வீக வடக்குகிழக்கு தாயகம் ஆக்கிரமிக்கப்படுகின்றதோ அந்தளவுக்கு அது இந்தியாவின் பாதுகாப்புக்கு ஆபத்தானது என்பதை மறந்து விடாதீர்கள். இவ்வாறு வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும், தமிழ் மக்கள் கூட்டணியின் செயலருமான சி.வி.விக்னேஸ்வரன் தமிழகத்தில் வைத்துத் தெரிவித்திருக்கின்றார்.

37 ➤

## புலிகளின் வெற்றிக்காக ஒன்றிணைவு

*முன்னாள் போராளிகள் கூட்டாகத் தெரிவிப்பு*

வவுனியா, ஜன. 12

தமிழ் மக்களின் நன்மை கருதி, தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் போராளிகளை உள்ளடக்கிய பல்வேறு கட்சிகள் மற்றும் அமைப்புக்கள்

33 ➤

## இன்னொரு கூட்டமைப்பு தமிழருக்குத் தேவையில்லை

### ஐங்கரநேசன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 12

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு மாற்றீடாகவோ,அதைப்போலவோ இன்னொரு கூட்டமைப்புத் தேவையில்லை. அதைவிட மேலான கூட்டமைப்புத்தான் தமிழ் மக்களின் தற்போதைய தேவை. அதில் எந்தக் கட்சியும் பெரியண்ணன் மனோ பாவத்தில் நடக்க முடியாது. இவ்வாறு வடக்கு மாகாண முன்னாள் விவசாய அமைச்சரும், தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவரு

36 ➤

## தமிழர்களுக்கு சோறுதான் முக்கியம் தீர்வு தேவையில்லை

### கோத்தா அரசு எள்ளல் பேச்சு

கொழும்பு, ஜன. 12

தமிழர்களுக்கு அரசியல் தீர்வுதான் முக்கியம் என்று தமிழ்த் தலைமைகள் பொய் கூறுகின்றார்கள். உண்மையில் அவர்களுக்குச் சாப்பாடுதான் முக்கியம். அதாவது சோறுதான் மிக முக்கியம். அது கிடைக்காமல் அங்குள்ள மக்கள் மிகவும் கஷ்டப்படுகின்றார்கள். இவ்வாறு

37 ➤

## தீயில் எரிந்து தாய் சாவு!

யாழ்ப்பாணம் ஜன.13

மகள் தற்கொலை செய்துகொண்ட துயரம் தாளாது தனக்குத்தானே தீமூட்டிய தாயாரும் நேற்று உயிரிழந்தார். கொக்குவில்

36 ➤

## காய்ச்சல் காவு வாங்கியது குடும்பஸ்தரை!

யாழ்ப்பாணம் ஜன.13

காய்ச்சல் மற்றும் வயிற்றோட்டம் காரணமாக குடும்பத்தலைவர் ஒருவர் நேற்று உயிரிழந்தார். யாழ்ப்பா

37 ➤

## சம்பந்தன், மாவை. போட்டியிடவேண்டும்

### வலியுறுத்துகிறார் சி.வி.கே.

யாழ்ப்பாணம், ஜன. 12

இரா.சம்பந்தன், மாவை சேனாதிராசா ஆகியோர் கட்டாயம் அடுத்த நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட வேண்டும் என்று இலங்கை

34 ➤

### முச்சந்தி முரளி



**ஆட்டையைப் போட்ட' ஐடியா'**

இப்ப யாழ்ப்பாணத்தில பெற்றோல் செற் எம்.பிக்குத்தான் ' காத்து' கூடியிருக்கு. ஆனா ஆருக்கோ பவிசு வந்தால் அர்த்த ராத்திரியில குடை பிடிக்கிற மாதிரி உந்தாள் ஆடுற ஆட்டமும் கொஞ்ச நஞ்சமில்லப்

36 ➤

## கோத்தா சீனாவுக்கு மஹிந்த இந்தியாவுக்கு

கொழும்பு, ஜன. 12

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ நாளை மறுதினம் 14ஆம் திகதி சீனாவுக்கு உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொள்ளவுள்ளார். அதே வேளை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அடுத்த மாதம் 8ஆம் திகதி இந்தியாவுக்குப் பயணமாகவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சீன ஜனாதிபதி ஷி ஜின் பிங்கின் அழைப்பை ஏற்று ஜனாதி

36 ➤

## கடற்படை வாகனம் மோதி குடும்பத் தலைவர் சாவு!!!

### மனைவி படுகாயம்: திருமணமாகி மூன்று மாதங்களில் சோகம்



முல்லைத்தீவு, ஜன. 12

முல்லைத்தீவு வட்டுவாகலில் நேற்றுக் காலை இடம்பெற்ற விபத்

36 ➤

## குட்டி 'யானைகள்' மொட்டோடு 'டீல்'!

### மனோ பொதுவெளியில் பகிரங்கக் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன. 12

ஐக்கிய தேசியக் கட்சியில் சிலர், ராஜபக் ஷாக்களுடன் இரகசியமாக உறவாடி அவர்களுக்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மையைப் பெற்றுக் கொடுக்கத் திட்டமிட்டுச் செயற்படுவதுபோன்று தெரிகின்றது.

37 ➤

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## ஓய்வூதியர்களுக்கு முக்கிய அறிவிப்பு

வரணி, ஜன.12

2020ஆம் ஆண்டுக்குரிய ஓய்வூதியர் வதிவிடச் சான்றிதழ்கள் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 15 ஆம் திகதிக்கு முன்பு கிடைக்கக் கூடியதாக உரிய பிரிவு கிராம அலுவலர் மூலம் அனுப்பி வைக்குமாறு தென்மராட்சி பிரதேச செயலர் சகல பிரதேசஓய்வூதியர்களுக்கும் அறிவித்துள்ளார்.

இது தொடர்பான சான்றிதழ்கள் உரிய பிரதேச செயலரால், சகல ஓய்வூதியர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளன. அத்துடன் 2019ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்துக்குரிய ஓய்வூதியர்களின் ஓய்வூதியக் கட்டண விவரப் பட்டியல்களும் அனுப்பப்பட்டுள்ளன. (க-122)

## ஷாபியை இணைக்க கோத்தாபய எதிர்ப்பு

கொழும்பு, ஜன. 12

குருநாகல் மருத்துவமனை மகப்பேற்று மருத்துவர் மொஹம்மட் ஷாபியை மீண்டும் சேவையில் அமர்த்த நடவடிக்கைளை எடுத்துவரும் அரச சேவைகள் ஆணைக் குழு, அவர் தொடர்பில் உரிய பரிந்துரைகளை தருமாறு சுகாதார அமைச்சைக் கேட்டுள்ளது.

அதேசமயம் மகப்பேற்று விவகாரங்களால் சர்ச்சையில் சிக்கிய மருத்துவர் ஷாபி தொடர்பான வழக்கு நீதிமன்றத்தில் இருப்பதால் இந்த விடயத்தை மீள்பரிசீலனை செய்யுமாறு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ அரச சேவைகள் ஆணைக்குழுவிடம் கேட்டிருப்பதாக சொல்லப்படுகிறது. மகப்பேற்று சர்ச்சையில் சிக்கிய சந்தேகநபரான ஷாபி மீண்டும் அரச சேவையில் இணைத்துக் கொள்ளப்பட அரச சேவைகள் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ள நிலையில் பல்வேறு மட்டத்தில் உள்ள பௌத்த பிக்குமார் அதற்கு கடும் எதிர்ப்பு வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ.5)

# உக்ரைன் விமானத்தை வீழ்த்தியது ஈரான்தான்

## மனிதத் தவறால் நடந்தது என பகிரங்க மன்னிப்புக் கோரியது

*தெஹ்ரோன், ஜன. 12*

*ஈரானின் மிகச் சமீபத்தில் வீழ்ந்து நொறுங்கிய உக்ரைன் விமானத்தை தாமே சுட்டு வீழ்த்தினோம் என்று அறிவித்தது ஈரான். மனிதத் தவறால் இது அசம்பாவிதம் நடந்தது என்றும் அந்த நாடு தெரிவித்தது.*





ஈரானின் இமாம் கொமேனி சர்வதேச விமான நிலையத்திலிருந்து புறப்பட்ட உக்ரைன் விமானம் டெஹ்ரான் அருகே விபத்தில் சிக்கியது. இதனைத் தொடர்ந்து விமானம் தனது தொடர்பை இழந்தது. விபத்துக்குள்ளான விமானத்தில் 180 பேர் பயணம் செய்தனர். விமானத்தில் பயணித்த அனைவரும் பலியாயினர். பலியானவர்களில் 147 பேர் ஈரானைச் சேர்ந்தவர்கள்.

விபத்துக்குள்ளான விமானத்தின் கறுப்புப் பெட்டி கண்டுபிடிக்கப்பட்ட நிலையில், விமானம் விபத்தில் சிக்குவதற்கு முன்னர் தீப்பிடித்து எரிந்ததாக ஈரான் விசாரணைக் குழு தெரிவித்துள்ளது. இந்த விபத்து நடைபெறுவதற்கு சற்று முன்பு இராக்கில் உள்ள அமெரிக்க ராணுவத் தளத்தின் மீது ஈரான் ஏவுகணைத் தாக்குதல் நடத்தியது எனவே விமானத்தின் மீது ஈரான் தவறுதலாக தாக்குதல் நடத்தியுள்ளது என்று அமெரிக்கா, ஆஸ்திரேலியா, கனடா ஆகிய நாடுகள் தெரிவித்தன.

மேலும் ஈரானின் தாக்குதலில் உள்நோக்கம் ஏதும் இல்லை என்றும் மனித தவறால் இந்த விமான விபத்து நடந்துள்ளதாகவும் இந்நாடுகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் தவறுதலாக உக்ரைன் விமானத்தை நடுவானில் ஏவுகணையை பயன்படுத்தி சுட்டு வீழ்த்தியதை ஈரான் ஒப்புக்கொண்டுள்ளது. திட்டமிட்டு இந்த தாக்குதலை நடத்தவில்லை என்றும் மனித தவறு களால் இது நடந்துள்ளதாக ஈரான் வருத்தம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து ஈரான் அதிபர் ஹசன் ரவ்ஹானி கூறும்போது, '176 அப்பாவி மக்கள் இறந்த இந்த பேரழிவான தவறுக்கு ஈரான் தனது ஆழ்ந்த வருத்தத்தை தெரிவித்து கொள்கிறது. எனது எண்ணங்களும், பிரார்த்தனை களும் இறந்தவர்களின் குடும்பத்திற்கு உடனிருக்கும்.

என ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்து கொள்கிறேன். இந்த விபத்து குறித்து தொடர்ந்து விசாரணை நடந்து வருகிறது - என்றார். (ம)

## அதிகாரப் பகிர்வு வாயே திறக்கவில்லை

### தினேஸ் திட்டவட்டம்

கொழும்பு, ஜன. 12

தேசிய பிரச்சினைக்கான அதிகாரப்பகிர்வு குறித்து இந்தியத் தலைவர்களுடனான சந்திப்பின் போது கலந்துரையாடவில்லை என்று வெளிவிவகார அமைச்சர் தினேஸ் குணவர்தன தெரிவித்தார்.

இந்தியாவுக்குப் பயணம் மேற்கொண்டிருந்த வெளிவிவகார அமைச்சர் தினேஸ் குணவர்தன இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் உள்ளிட்ட பல தலைவர்க்ளையும் சந்தித்து கலந்துரையாடியிருந்தார்.

இந்தச் சந்திப்புக்கள் குறித்து கருத்து வெளியிட்டுள்ள வெளிவிவகார அமைச்சர் தினேஸ் குணவர்தன, இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவை மேலும் வலுப்படுத்துவது குறித்தே இந்தியத் தலைவர்களுடனான சந்திப்பில் கலந்துரையாடப்பட்டதாக குறிப்பிட்டார். சந்திப்புக்கள் ஆக்கபூர்வமாக அமைந்தன என்றும் அவர் கூறினார்.

இந்தப் பயணத்தின் போது, அதிகாரப் பகிர்வு குறித்து எதுவும் பேசப்படவில்லை என்றும் தனது சந்திப்புக்கள் மற்றும் கலந்துரையாடல்கள் அனைத்தும் வெளிவிவகார அமைச்சுக்குரிய விடயதானங்களுக்குட்பட்டதாகவே காணப்பட்டன என்றும் அவர் குறிப்பிட்டார். (ஒ.5)

## ரஞ்சனின் கட்டிப்பிடி வைத்தியத்தால் பொலிஸ் அதிகாரிக்கு சிக்கல்

கொழும்பு, ஜன. 12

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க கைது செய்யப்பட்டபோது, பொலிஸார் நடந்து கொண்ட விதம் குறித்து விசாரணை நடத்த பதில் பொலிஸ்மா அதிபர் சி.டி.விக்ரமரத்ன உத்தரவு பிறப்பித்துள்ளார். மேல் மாகாணத்தின் பொறுப்பான மூத்த டி.ஐ.ஜி.தேசபந்து தென்னக்கோனுக்கு இந்த உத்தர பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ரஞ்சன் ராமநாயக்க கைது செய்யப்பட்டபோது பொலிஸார் சரியான முறையில் செயல்பட்டார்களா என்பது குறித்து விசாரணை நடத்த வேண்டும் என்று உத்தரவிடப்பட்டுள்ளது. ரஞ்சன் ராமநாயக்க கைது நடந்தபோது, பொலிஸ் அதிகாரியை கட்டியணைத்ததாக ஊடகங்களில் செய்தி வெளியாகியிருந்தது. கைது செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினரை இப்படி நடந்து கொள்ள அனுமதித்த பொலிஸ் அதிகாரி மீது நடவடிக்கை எடுக்கவும் திணைக்களம் நடவடிக்கையெடுக்க தயாராகி வருவதாக தெரிவிக்கப்படுகிறது. (ஒ.5)

## 9பேரை கடித்தது நாய்

பருத்தித்துறை, ஜன. 12

பருத்தித்துறை நகரப் பகுதியில் கடந்த இரண்டு தினங்களில் மாத்திரம் 9பேர் நாய்க் கடிக்கு இலக்காகியுள்ளனர். இந்தச் சம்பவம் நேற்றும், நேற்றுமுன்தினமும் இடம் பெற்றுள்ளது.

பருத்தித்துறை பேருந்து நிலையத்திலிருந்து இறங்கிச் சென்றவர்களே இவ்வாறு நாய்க் கடிக்கு இலக்காகியுள்ளனர். நேற்று முன்தினம் 3 பேருக்கும், நேற்று 6 பேருக்கும் நாய் கடித்துள்ளது. இதனையடுத்து நகர சபையினரும், பொதுச் சுகாதார பரிசோதகரும் இணைந்து நாயைப் பிடித்து மிருக மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தக் கையளித்துள்ளனர். (ந.26)

## துப்பாக்கியுடன் முன்னாள் போராளி கைது

வாழைச்சேனை, ஜன. 12

மட்டக்களப்பு வாழைச்சேனை விநாயகபுரம் பகுதியில் ரி56 ரக துப்பாக்கி மற்றும் ரவைகளுடன் இரண்டு சந்தேகநபர்கள் நேற்றுமுன்தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளதாக வாழைச்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

வாழைச்சேனை கல்மடு விநாயகபுரம் பகுதியில் ஒருவரிடம் துப்பாக்கி இருப்பதாக ஒருவர் கைது செய்யப்பட்டு வாழைச்சேனை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். பொலிஸாரின் விசாரணையில் மற்றுமொருவர் கிரான் பிரதேச செயலர் பிரிவில் திகிலிவெட்டை பிரதேசத்தில் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் வாழைச்சேனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

இவர்களிடமிருந்து ரி56 ரக துப்பாக்கியும் அதற்கு பயன்படுத்தும் 27 துப்பாக்கி ரவைகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்டவர்களுள் ஒருவர் முன்னாள் போராளி எனவும் தெரியவருகிறது. (ஒ.5)



# அச்சுவேலிவாசியின் புதிய கண்டுபிடிப்பு

## விவசாயத்தில் மறுமலர்ச்சி

அச்சுவேலி,ஜன.12

அச்சுவேலி தெற்கைச் சேர்ந்த விவசாயி கிருஷ்ணராஜாவின் புதிய கண்டுபிடிப்பு விவசாயத் திணைக்களத்தினரால் யாழ்ப்பாணத்தில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

இவர் தனது தந்தையின் விவசாயத்தை மீண்டும் தொடங்க வேண்டும் என்ற எண்ணத்தில், சுவிஸ் நாட்டிலிருந்து மீளவும் தாயகம் திரும்பி, தற்போது நவீன முறை யுக்தி களைப் பயன்படுத்தி விவசாயத்தில் ஈடுபட்டு வருகிறார்.

அவர் கண்டுபிடித்த இலகு இயந்திரம் வட மாகாண விவசாய பணிப்பாளர் சிவகுமார் தலைமையில் அறிமுகம் செய்யப்பட்டது.

உழவு இயந்திரம் மூலம் நவீன யுக்திகளைப் பயன்படுத்தி ஒரு சில மணித்தியாலத்தில் கன்றுகளை நடுகை செய்யக் கூடிய இயந்திரத்தை அவர் கண்டு பிடித்துள்ளார்.

சொட்டுநீர் பாசனத்தின் ஊடாக அதிக விளைச்சலைப் பெறக்கூடிய வகையில்இயந்திரம் மூலம் மரக் கன்றுகளை நடுகை செய்ய முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

"இளைஞர்களுக்கு வெளிநாடுகளுக்குச் சென்று பணம் சம்பாதிக்க வேண்டும் என்ற எண்ணம் அவர்களின்மனதில்குடிகொண்டுள்ளது. இங்குள்ள இளைஞர்கள் விவசாயத்தில் அதிகம் ஈடுபட வேண்டும். விவசாயம் மூலம், வெளிநாட்டில் உழைப்பதை விட இங்கு அதிகளவான பணத்தைச் சம்பாதிக்க முடியும். அதற்காகவே முன்னுதாரணமாக நவீன விவசாய யுக்திகளைக் கண்டுபிடித்து அதனை தற்போதுள்ள விவசாயிகளுக்கும் அறிமுகம் செய்துள்ளேன்.

இந்த இயந்திரம் மூலம் வெங்காயம், தக்காளி, பீட்ரூட், கரட், பச்சை மிளகாய் போன்ற, மரக்கறிக் கன்றுகளை நடுகை செய்ய முடியும். இதற்கு கூலி ஆள்களும் தேவையில்லை.

நேரம் மிகுதி, பணவிரயம் தவிர்க்கப்படும்.

அத்துடன் சிறந்தவிளைச்சலையும் பெற்றுக் கொள்ளலாம். நீரையும் மிச்சப்படுத்திக் கொள்ள முடியும்" என்று கிருஷ்ணராஜா தெரிவித்தார்.

அறிமுக நிகழ்வில், மாவட்ட விவசாய பிரதிப் பணிப்பாளர் ஸ்ரீரங்கன் அஞ்சனாதேவி, கோப்பாய் பிரதேசத்துக்குப் பொறுப்பான விவசாய கண்காணிப்பாளர் எஸ். சாருஜன், வலி கிழக்குப் பிரதேச சபையின் உப தவிசாளர் எம்.கபிலன் உட்பட விவசாயிகள் பலரும் கலந்து கொண்டனர். (க)

# யூபிலிதினத்தில் நடைபயணம்







மன்னார்,ஜன.12

மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியின் 150 ஆவது ஆண்டு யூபிலி தினத்தைமுன்னிட்டு, மாதாந்தம் நடத்தப்படும், பாடசாலையை சார்ந்தவர்களின் நடைபயணம் நேற்று இடம்பெற்றது. பாடசாலையின் பழைய மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள் மற்றும் நலன் விரும்பிகள் உட்பட சுமார் 2500 க்கும் மேற்பட்டோர் பாடசாலையில் ஒன்று கூடி, வழிபாட்டைத் தொடர்ந்து நடைபயணத்தை ஆரம்பித்தனர்.

புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையிலிருந்து ஆரம்பமான நடைபயணம், எழுத்தூர் சந்தி தாழ்வுபாடு மன்னார் வீதி, புனித செபஸ்தியார் வீதி, மன்னார் நுழை வாயில் பாலம், மன்னார் - தலைமன்னார் வீதி மாதா ஆலயம் வரை சென்று கல்லூரியை அடைந்தது. நடைபயணத்தில் பாடசாலை மாணவர்களின் களியாட்ட நிகழ்வுகள், விநோத நிகழ்வுகள் இடம்பெற்றன. (க-60)

# வேலிக்கு தீயிட்ட விசமிகள்



கொடிகாமம்,ஜன.12

மறவன்புலவு மத்திப் பகுதியில் குடியிருப்பாளர் ஒருவரின் வீட்டு வேலிக்குத் தீ வைக்கப்பட்டுள்ளது. விசமிகள் சிலர் தீ வைத்து விட்டு, மக்கள் நடமாட்டத்தை அடுத்து அங்கிருந்து தப்பியோடியுள்ளனர்.

இந்தச் சம்பவம் கடந்த வியாழக்கிழமை இரவு 11 மணிக்கு இடம் பெற்றுள்ளது.

வீட்டின் உரிமையாளர் அயலவர்களின் உதவியுடன் தீயை அணைத்துள்ளார். சம்பவம் தொடர்பாக சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (க-159)

# ஒன்றுகூடலும் விருது வழங்கலும்

முல்லைத்தீவு,ஜன.12

மாந்தை கிழக்குப் பிரதேச செயலக வருடாந்த ஒன்றுகூடலும், விருதுகள் வழங்கும் நிகழ்வும் கடந்த வியாழக்கிழமை பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெற்றன.

நிகழ்வில் சிவப்பு அடைவு மட்டத்தை வெளிக்காட்டிய சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்கள், இளைஞர் சேவைகள் அலுவலர், தையல் போதனாசிரியர், சிறந்த நலன்புரி செயற்பாட்டாளர்கள், மாவட்டச் செயலர் வெற்றிக் கிண்ணப்.

போட்டிகளில் வெற்றியீட்டியவர்கள் ஆகியோருக்கு விருதுகள் வழங்கப்பட்டன. கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன.

பிரதேச செயலர் செல்வி ரஞ்சனா நவரத்தினம் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக முல்லைத்தீவு மாவட்டச் செயலர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், சிறப்பு விருந்தினர்களாக மாவட்ட மேலதிக செயலர் க.கனகேஸ்வரன், மாவட்டச் செயலகக் கணக்காளர், மாவட்ட உள்ளகக் கணக்காய்வாளர், நீர்ப்பாசன பொறியியலாளர், துணுக்காய் பிரதேச செயலர் சுகாதார மருத்துவ அதிகாரி உட்பட பலர் கலந்து கொண்டனர். (க-6)






வவுனியாவிலுள்ள வசதியற்ற 150 குடும்பங்களுக்கு, பல்வேறு சமூக ஆர்வலர்களின் நிதிப்பங்களிப்பில், பொங்கல் பொருள்கள், தமிழ் விருட்சம் அமைப்பின் ஊடாக வழங்கப்பட்டன. (க)

# விண்ணப்பிக்க தயக்கம்

யாழ்ப்பாணம்,ஜன.12

வல்வெட்டித்துறை நகர சபைக்குட்பட்ட பிரதேசத்தில் தமிழ் மக்களின் இருப்பைப் பாதுகாப்பதற்காக 3 பிள்ளைகளுக்கு மேல் பெற்றுக்கொள்ளும் குடும்பத்துக்கு, மாதாந்தம் 10ஆயிரம் ரூபா மானியமாக வழங்கப்படும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

வல்வெட்டித்துறை நகரசபை தீர்மானத்தை நிறைவேற்றியுள்ள போதும், எவரும் பதிவுகளை மேற்கொள்ளவில்லை என்று வல்வெட்டித்துறை நகரசபைத் தலைவர் தெரிவித்துள்ளார்.

நகரசபையில் நிறைவேற்றப்பட்ட கடந்த காலத் தீர்மானங்கள் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். (க-111)



வரலாற்றுச் சிறப்புமிக்க கிளிநொச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தில் மார்கழி மாத திருவாசக முற்றோதல் நிகழ்வு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. மாணிக்கவாசகரின் திருவுருவச் சிலை வைக்கப்பட்டு, திருவாசக பதிகங்கள் பக்தி பூர்வமாகப் பாடப்பட்டன. (க)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## மீண்டும் இந்திய நிழல் தேடி..!

மக்களால் மிகவும் வெறுக்கப்பட்ட மன்னர் ஒருவர் சாவின் விளிம்பில் படுத்திருந்தார். மகனை அழைத்தார்.

" மகனே, என் பெயரை நீதான் காப்பாற்ற வேண்டும்" என்று கெஞ்சினார். மகனும் அவர் பெயரைக் காப்பாற்றுவதாக சத்தியம் செய்து கொடுத்தான். தந்தை இறந்ததும் அதே மைந்தன் முடிசூடிக் கொண்டான், தந்தையை விட மிக மோசமாக மக்களை வதைத்தான் . அப்போது எல்லாக் குடிமக்களும் " இவனை விட இவன் தந்தை எவ்வளவோ பரவாயில்லை" என்று தமக்குள் ஆதங்கப்படத் தொடங்கினர். இப்படியாக அவன் தன் தந்தையின் பெயரைக் காப்பாற்றினான்.

இந்தக் கதைக்குள் பல அரசியல் சூட்சுமங்கள் புதைந்து கிடக்கின்றன. ஒரு கட்டத்தில் எதிரியாக , வேண்டப்படாதவராக இருந்தவர்கள் பின்னொரு சூழலில் ஒன்றாகி, ஒரே கொள்கையில் பயணிப்பதும் அரசியலில், நடக்கிறது. அதேபோன்று , ஒரே கொள்கையில் ஊறித் திளைத்து, ஒரே திசையில் பாலும் தேனும் போலப் பயணித்தவர்கள் திடீரென எதிரிகளாக மாறி, ஒருவரையொருவர் கடித்துக் குதறிவிடும் வெறியோடு அலைவதும் அதே அரசியலில் சகஜம் தான்.

அதே வகையில், சில அரசியல் சூழமைவுகள் , கடந்த சில தசாப்தங்களாகத் தமிழர்களிடத்தே அவநம்பிக்கையைப் பெற்றிருந்த இந்தியாவின் பக்கம் மீண்டும் சாயவேண்டிய நிலையை ஏற்படுத்தி இருக்கின்றன. கோத்தாபய ஜனாதிபதியானவுடன், இனப்பிரச்சினை என்ற ஒன்றையே மறந்துவிட்டவர் போலவே செயற்பட்டு வருகின்றார். அத்தோடு 13 ஆம் திருத்தச் சட்டத்தில் உள்ள அதிகாரப் பரவலாக்கத்தை அனுமதிக்க முடியாது எனவும், அதற்கும் குறைவான அதிகாரப் பரவலாக்கத்தையே வழங்கப் போவதாகவும் ஊடகங்களில் சொல்லி வருகின்றார். தனிநாடு கேட்டுப் போராடிய ஒரு இனம் இப்போது குறைந்தபட்சம் 13 ஆவது திருத்தத்தையாவது ஏற்றுக் கொள்ளும் ஒரு நிலைக்கு கீழிறங்கி வந்திருக்கும் தருணத்தில் அதைப் பயன்படுத்தி, அதிகாரப் பரவலாக்கத்தை மேற்கொண்டு இனப்பிரச்சினையை அறவே இல்லாதாக்கும் பொன்னான சந்தர்ப்பம் கோத்தாபயவுக்கு வாய்த்திருக்கிறது. ஆயினும் அதைப் பயன்படுத்த அவர் தயாராகவில்லை.

இந்த நிலையில் , கோத்தாபய சமஷ்டிக்கு இணங்க மறுத்தால், சர்வதேசத்தின் மூலம் குறிப்பாக இந்தியாவின் ஒத்துழைப்போடு அதைத் தருவதற்கான சூழமை உருவாக்குவோம் என கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் திரும்பத் திரும்ப அண்மைக்காலமாகச் சொல்லி வருகின்றார். இப்போது அவரது வழிக்கு வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரனும் வந்துவிட்டார் போலும். இந்தியாவின் உதவியை வேண்டிய விக்னேஸ்வரன், இலங்கையில் தமிழர்கள் பாதுகாப்பாக இருந்தால் மாத்திரமே, இந்தியாவும் பாதுகாப்பாக இருக்க முடியும் என்ற , அரசியல் உண்மையையும் வெளிப்படுத்தியுள்ளார். இப்படி மீண்டும் தமிழர்கள், எந்த இந்தியாவை வெறுத்தார்களோ, அதே இந்தியாவின் பக்கமாகச் செல்லத் தலைப்பட்டுள்ளார்கள்.

தமிழர் தரப்பின் இரண்டு முக்கியமான தலைவர்களும் இப்படி சடாரென இந்தியாவின் பக்கம் சாய்ந்ததன் மூலகாரணமாக கோத்தாபயவைத்தான் சொல்லமுடியும். அவர் மட்டும் 13 ஆம் திருத்தத்தில் சொல்லப்பட்ட அதிகாரப் பரவலாக்கத்தை வழங்க முன்வந்திருந்தால், எதற்காகத் தமிழர்கள் மீண்டும் இந்தியாவின் நிழலைத் தேடி ஓடவேண்டும்? இப்போது பந்து இந்தியாவின் கைகளில். தமிழ்த்தலைவர்களின் கோரிக்கையை ஏற்று இந்தியா பழையபடி, இலங்கையின் அரசியல் விவகாரங்களில் மூக்கை நுழைக்குமா? அல்லது மூக்குடைபடுமா? என்பதை இனிவரும் நாட்களில் நடக்கும் அரசியல் மாற்றங்கள் தான் சொல்லப்போகின்றன.

# இராணுவத்தின் துணையோடு துயிலுமில்ல காணி அபகரிப்பு

### துயிலுமில்லப் பணிக்குழு குற்றச்சாட்டு

கிளிநொச்சி, ஜன.12

**தேராவில் மாவீரர் துயிலும் இல்லக் காணியின் ஒரு பகுதியை இராணுவத்தினரின் துணையுடன், தனிநபர் ஒருவர் அடாத்தாக அபகரிப்பு செய்து வருகிறார் என்று தேராவில் மாவீரர் துயிலும் இல்ல பணிக் குழுவினர் குற்றஞ் சாட்டியுள்ளனர்.**





எவ்வித அனுமதிகளையும் பெறாமலும், ஆவணங்கள் இல்லாமலும், இராணுவத்தினரின் ஆளுகைக்குள் உள்ள பகுதியைத் தனிநபர் ஒருவர் இராணுவத்தினரின் துணையில்லாது எவ்வாறு அபகரிக்க முடியும் என்றும் அவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

காணியைக் கனரக வாகனம்(ஜேசிபி) கொண்டு சுத்தப்படுத்தி, வீடு அமைக்கும் பணியில் குறித்த நபர் ஈடுபட்டுள்ளார். அவர் சுத்தம் செய்யப் பயன்படுத்திய கனரக வாகனம் அங்குள்ள இராணுவ முகாமில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. தனிநபர் அபகரிக்கும் பகுதி போரில் வீரச்சாவடைந்த விடுதலைப் புலி உறுப்பினர்கள் விதைக்கப்பட்ட பகுதியாகும். இவற்றைக் கருத்தில் கொண்டு பிரதேச செயலர் மற்றும் மாவட்டச் செயலர் தீர்க்கமான முடிவைப் பெற்றுத் தர வேண்டும் என்று பணிக்குழு நிர்வாகத்தினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். தேராவில் மாவீரர் துயிலும் இல்லப் பணிக் குழு நிர்வாகத்தினர், இராணுவ முகாமுக்குச் சென்று சம்பவம் தொடர்பாக வினவிய போது, இராணுவத்தினர் தமக்கும் இதற்கும் தொடர்பில்லை. பிரதேச செயலரைச் சந்திக்குமாறு பதிலளித்துள்ளனர். (க-35)

## பணியாளருக்கு சுகவீனம்: மக்கள் நீருக்கு அந்தரிப்பு

சாவகச்சேரி, ஜன. 12

பணியாளர் கடமைக்கு வராததால் மக்கள் குடிதண்ணீருக்கு தூர இடங்களுக்குச் செல்ல வேண்டிய நிலை வரணிப் பிரதேச மக்களுக்கு ஏற்பட்டுள்ளது.

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினர் வேம்பிராய் கிணற்றிலிருந்து குழாய் மூலம் வரணிப் பிரதேச மக்களுக்கு குடிதண்ணீர் வழங்கிவருகின்றனர். சில குடும்பங்களின் குடியிருப்புகளுக்கு மாதாந்தம் கட்டணம் செலுத்தும் வகையில் தண்ணீர் வழங்கி வருகின்றனர்.

வேம்பிராய்ப் பகுதியிலுள்ள ஆழ்கிணற்றிலிருந்தே குழாய் மூலமாக வரணிப் பிரதேசத்துக்குக் குடிதண்ணீர் வழங்கப்படுகின்றது.

இந்தநிலையில் அண்மைக்காலமாக குழாய்களில் தண்ணீர் வருவதில்லை. இதனால் தூர இடங்களிலுள்ள கிணறுகளில் தண்ணீர்பெற்றுப் பயன்படுத்தி வருகின்றனர் என்று தெரிவித்தனர்.

இது தொடர்பாகச் சபையிடம் கேட்டபோது, அங்கு கடமையாற்றும் மின்மோட்டார் இயக்குநர் சுகவீனம் காரணமாகக் கடமைக்குச் சமுகமளிக்கவில்லை.

அதனால்தான் மக்களுக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இந்தப் பிரச்சினைக்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று சபையினர் தெரிவித்தனர். (த-9)

## நெடுந்தீவு சேவைக்கு மரப் படகு வழங்குக!

### ஆளுநருக்குக் கடிதம்

கொழும்புத்துறை, ஜன.12

நெடுந்தீவு- குறிகாட்டுவான் கடல் பிரயாணத்துக்கு மரத்தினாலான தரமான படகை அமைத்து, பாதுகாப்பான போக்குவரத்தை உறுதி செய்து தருமாறு வடக்கு மாகாண புதிய ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. நெடுந்தீவு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் சி.வ.சங்கரப்பிள்ளை அதற்கான கோரிக்கைக் கடிதத்தை வடக்கு ஆளுநருக்கு அனுப்பி வைத்துள்ளார். அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

யாழ்ப்பாணத்திலிருந்து 32 கடல் மைல் தூரத்திலுள்ள நெடுந்தீவுக்கான கடற்பயணம் ஆபத்தாகக் காணப்படுகிறது. அந்த நேரங்களில் பிளாஸ்ரிக் இணைப்படகுகளை விட மரத்தினாலான படகுகளே பாதுகாப்பானதாக அமையும். தற்போது சேவையில் உள்ள குமுதினிப் படகு 1977 ஆம் ஆண்டு சேவைக்கு அமர்த்தப்பட்டு பலமுறை புனரமைப்புச் செய்யப்பட்டது. அது அடிக்கடி பழுதடைந்த வண்ணம் காணப்படுகிறது. அரசு பல பிளாஸ்ரிக் மோட்டார் படகுகளை சேவைக்கு அமர்த்தியுள்ள போதிலும், காற்றுக் காலத்தில் ஏற்படும் அலை எழுச்சியை தாக்குப்பிடிக்கப் போதுமான கனமின்மையால் சேவைகள் இடைநிறுத்தப்பட வேண்டிய சந்தர்ப்பங்கள் உருவாகியுள்ளன. எனவே குமுதினி மரத்தினாலான மோட்டார் படகைப் புதிதாக உருவாக்கி சேவையில் ஈடுபடுத்தி மக்களின் பாதுகாப்பான கடற்பயணத்துக்கு ஆவன செய்யுமாறு பொதுமக்கள் சார்பாக கேட்டுக் கொள்கின்றேன்- என்றுள்ளது. (க)

# முச்சக்கர வண்டி பதிவுப் பத்திரத்திற்கு

சிறந்த தொகை
குறைந்த வட்டியுடன்
ஒரே நாளில் பெற்றுக்கொள்ளலாம்



OD முறைப்படி வட்டியைச் செலுத்தல்

இன்றே தொடர்பு கொள்ளவும்

யாழ்ப்பாணம் 0777 391 449 | வவுனியா 0769 127 751

SINGER FINANCE

Web: www.singerfinance.com | Facebook: SingerFinance



HONDA

# மீண்டும் மானிப்பாயில் றஞ்சிற் மோட்டேர்ஸ்

(றஞ்சிற் றிப்பியரிங் & சேவிஸ் சென்டர்)

யாழ் மக்களுக்காக றஞ்சிற் மோட்டோர்ஸ் HONDA இணைந்து வழங்கும் பண்டிகைக்கால மாபெரும் சலுகைகள்

01.12.2019 – 15.01.2020 வரை எம்மிடம் மோட்டார் சைக்கிளினை கொள்வனவு செய்து குலுக்கல் முறையில் சோபா செற்றினை பெற்றிடும் வாய்ப்பினை பெற்றிடுங்கள்

01.12.2012 முதல் கொண்டாவுடன் சேவை முகவராக இணைகின்றார்கள் றஞ்சிற் மோட்டார்ஸ் நிறுவனத்தினர்

## எமது சேவைகள்

- HONDA மோட்டார் சைக்கிள் விற்பனை
- HONDA அசல் உதிரிப்பாக விற்பனை
- HONDA சேவிஸ் & மெக்கானிக்

[மோட்டார் சைக்கிள் விற்பனைக்குப் பிந்திய சிறப்பு சேவைகள், இலவச சேவைகள் மற்றும் உத்தரவாத சேவைகள்]



## பண்டிகைக் கால சலுகைகள்

விலைக்கழிவு தெரிவு செய்யப்பட்ட மோட்டார் சைக்கிள்களுக்கு 15000/- வரை

லீசிங் மூலம் விசேட சலுகைகள்

- SLS தலைக்கவசம்
- ஜக்கெற்
- காப்புறுதி
- பதிவுக் கட்டணம்
- இலவச சேவைகள் 05
- இரண்டு வருட உத்தரவாதம்

காசு மூலமான சலுகைகள்

- SLS தலைக்கவசம்
- காப்புறுதி (3ம் நபர் காப்புறுதி)
- இலவச சேவைகள் 05
- இரண்டு வருட உத்தரவாதம்
- சிறப்பு பரிசில்கள்

சிறப்பு சலுகைகள்
எம்மிடம் பழைய மோட்டார் சைக்கிளைக் கொடுத்து புதிய மோட்டார் சைக்கிளினைப் பெற்றிடும் வசதி
(நிபந்தனைக்குட்பட்டது)

**Ranjit Motors**
(RRSC Motors Engineers)

**Sales & Parts**
No- 311/A, Jaffna Road, Manipay.
இல- 311/A. யாழ் வீதி, மானிப்பாய்.
021 492 7627, 021 225 5228

**Service & Parts**
No- 14 Suthumalai Road, Manipay
இல- 14 சுதுமலை வீதி, மானிப்பாய்.
021 492 7337, 021 222 3111

Mobile: 077 310 7549, 076 833 9898
E.Mail: rrscmanipay@gmail.com
F.Book: Honda Ranjit Motors

AJA2272(16/17)



உதயன்
விளம்பர தொடர்புகளுக்கு advt@uthayan.com, 021 493 1111



# பரத நாட்டிய அரங்கேற்றம்

"புஸ்பாலய நடனசபா மாணவிகள்"



செல்வி வைஷ்ணவி சிவபாஸ்கரன்
செல்வி வைதேகி சிவபாஸ்கரன்

இடம்:
இலங்கை வேந்தன் கலைக் கல்லூரி
(இந்துக்கல்லூரி அருகில்)
63, நீராவியடி, யாழ்ப்பாணம்

காலம்:
12.01.2020
காலை - 9.30 மணி

**தலைமை**
செந்தமிழ்ச்சொல்லருவி
சந்திரமௌலீசன் லலீசன்
(தலைவர், யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம்)

**பிரதம விருந்தினர்**
திரு.வீரகத்தி கருணலிங்கம்
(அதிபர், கோப்பாய் ஆசிரிய கலாசாலை)

**சிறப்பு விருந்தினர்**
கலாநிதி கிருஷாந்தி இரவீந்திரா
(முன்னாள் நடனத்துணைத்தலைவர், நுண் கலைக்கழகம்)

திரு. வேலுப்பிள்ளை ஞானகாந்தன்
(ஓய்வுநிலை அதிபர்)

நடனத்திலகம் ஸ்ரீமதி.வசந்தி குஞ்சிதபாதம்
(ஓய்வுநிலை ஆசிரியர் யா/ வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை)

**கௌரவ விருந்தினர்கள்**
கலாபூஷணம்
ஸ்ரீமதி.பத்மினி செல்வேந்திரகுமார்.
(ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகர், யாழ் கல்வி வலயம்)

சிரேஷ்ட பேராசிரியர்
செல்வி வசந்தி அரசரட்ணம்
(முன்னாள் துணைவேந்தர், யாழ்பல்கலைக்கழகம்)

**அணிசேர் கலைஞர்கள்**

**நட்டுவாங்கம்**
செல்வி ரஜிதா சின்னத்துரை
(அதிபர் புஸ்பாலய நடனசபா)
விரிவுரையாளர்,
(நுண்கலைமாணி, கல்வியல் மாணி,
கோப்பாய் ஆசிரிய கலாசாலை)

**பாட்டு**
கலாவித்தகர்
திரு.அழகேசன் அமிர்தசிந்துஜன்
(விரிவுரையாளர், இராமநாதன் நுண்கலைக்கழகம்)

**மிருதங்கம்**
கலாவித்தகர்
திரு.கந்தசாமி நந்தகுமார்

**வயலின்**
முதுகத்துவமாணி
திரு.கார்த்திகேசு குகபரன்
(விரிவுரையாளர், கோப்பாய் ஆசிரிய கலாசாலை)

**ஒகன்**
நுண்கலைமாணி
திரு.சிவநாதன் ரஜீவன்
(ஆசிரியர், யாழ்.இந்து மகளிர் கல்லூரி)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

திரு.திருமதி சிவபாஸ்கரன் குடும்பம்

## களஞ்சியசாலை வாடகைக்கு

வவுனியா நகருக்கு அண்மையில் நெல் உலர விடுவதற்கும், களஞ்சியப்படுத்துவதற்கும் ஏற்ற இடம். கிழமை மற்றும் மாத அடிப்படையில் வாடகைக்கு விடப்படும்.

**077 640 3113**

## அறை வாடகைக்குண்டு

கொக்குவில் ஆடியபாதம் வீதியில் அறையொன்று வாடகைக்கு உண்டு.

**075 930 4014**

## பொதுக்கூட்ட அறிவித்தல்

**அளவெட்டி வடக்கு தவளக்கிரி முத்துமாரி அம்மன் ஆலய** வருடாந்த உபயகாரர் பொதுச்சபைக் கூட்டம் எதிர்வரும் 26.01.2020 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது என்பதையும் புதிய பரிபாலனசபை தெரிவு நடைபெற இருப்பதாலும் அனைத்து உபயகாரர்களையும் தவறாது சமுகம் அளிக்கும்படி வேண்டுகின்றோம்.

தலைவர்,
ஆலய பரிபாலனசபை

(CS/30540)(11,17)

## வேலை ஆள்கள் தேவை

வட்டுக்கோட்டையில் அமைந்துள்ள கோழிப்பண்ணைக்கு வேலையாள் தேவை. அனுபவம் உள்ளவர் விரும்பத்தக்கது.

**077 249 9841**

## வீட்டுடன் காணி விற்பனைக்கு

மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோயிலுக்கு அருகில் 4பரப்புக் காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு.

(CS 30557)(14,17)

**077 6778359/ 077 4167634**

## தேவை

யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் அமைந்துள்ள விருந்தினர் விடுதிக்கு **முகாமையாளர், வரவேற்பாளர், விடுதி சுத்திகரிப்பாளர்** இருபாலாரும் தேவையாக உள்ளது.

(CS/30548)(11,17)

**071 417 2364, 077 239 7898**

## வாடகைக்கு

மல்லாகம் தெ/புன்னாலைக்கட்டுவன். 764 Bus Route இலுள்ள வீடு உடனடியாக வாடகைக்குண்டு. இதைவிட நிறுவனாங்களுக்கும் புதிய மாடிவீடுகள் (Project Office இற்கு) இதே பகுதியிலுண்டு.

**077 344 4801**

## வீடு வாடகைக்கு உண்டு

இருபாலை ஆசிரியர் பயிற்சி கலாசாலைக்கு அருகாமையில் 3படுக்கை அறை கொண்ட வீடு வாடகைக்கு உண்டு.

**தொடர்பு:- 077 500 6769**

## வீடு வாடகைக்குத் தேவை

கொக்குவில் பகுதியில் (கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு அருகில்) வீடு வாடகைக்குத் தேவை.

**076 756 8716**

## தேவை

யாழ்நகரில் இயங்கும் பிரபல **ஹாட்வெயர் கடைக்கு கணக்காளர்** (பெண்) (21-25)
வேலையாள் (ஆண்) (22.30)

**077 507 8272**

## வீடு வாடகைக்கு

நல்லூர் சங்கிலியன் வீதியில் சகல வசதிகளுடன் 4 அறைகள் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு.

**071 220 8808, 077 129 9309**

## நாகபூசணி திருமணசேவை

மிகப்பொருத்தமான மணமக்கள் ஜாதகங்கள்உடன் தரப்படும்.

**257, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.**
**021 222 9306, 071 999 9306, 077 138 7596**

## காணி விற்பனை

உரும்பிராய் கிழக்கு
உரும்பிராய் பலாலி வீதி அருகில் 4½ நிலப்பரப்பு பூங்காவுக்கு அருகில் விற்பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை.

**077 573 6356**

## வீடு வாடகைக்கு

யாழ் நகரில் 1ஆம் குறுக்குத்தெருவில் (வேம்படி மகளிர் பாடசாலைக்கு அருகாமையில்) 1500 ச.அடி பரப்புள்ள வீடு வாடகைக்கு உண்டு. வீட்டின் முன்புறமும் பின்புறமும் வெறுமையான நிலப்பரப்பும் உண்டு. குடியிருப்பு தேவைகளுக்கு அல்லது கல்வி நிறுவனங்கள் மற்றும் வியாபார நிறுவனங்களுக்கும் பயன்படக்கூடியது. விரும்பியவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்.

(CS 30559)(14,17)

**077 479 2567**

## தேவை

**யாழ்.நகரில் இயங்கும் சுப்பர் மார்கட் ஒன்றுக்குப் பின்வரும் பணியாளர் தேவை.**
**01) பெண் - காசாளர்**
**சம்பளம் 18000 - 21000 வரை**

(CS/30560)(11,17)

**077 477 3480, 021 492 7080**
அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளவும்








# பழங்கள் பழுப்பதேன்!

ஆசி கந்தராஜா
*விவசாய பேராசிரியர், சிட்னி, ஆவுஸ்திரேலியா.*

வேகமான வாழ்க்கை முறையால், தற்போது பழங்களைப் பழுக்க வைக்க வியாபாரிகள் இரசாயன முறையைக் கையாளுகின்றார்கள். இந்தப் பழங்களை உண்பதால் வாயில் புண், வயிற்றுப் போக்கு, ஒவ்வாமை போன்ற வியாதிகள் ஏற்பட்டு நாளடைவில் குடல் புற்றுநோய் வர வாய்ப்புண்டு. இதற்குக் காரணம் காய்களைப் பழுக்க வைக்க வணிகர்களால் பயன்படுத்தப்படும் 'கல்சியம் கார்பைடு' என்னும் இரசாயனம்தான் என்று கண்டறியப்பட்டுள்ளது. அது புற்றுநோயை உண்டாக்கக் கூடியது எனவும் எச்சரிக்கப்பட்டுள்ளது.



**எதிலீன் வாயு**


இயற்கையில் காய் பிஞ்சுகளை முற்றச் செய்வதும் பழுக்கச் செய்வதும் எதிலீன் என்னும் வாயு நிலை ஹோர்மோனே. இது எல்லாக் காய்களிலிருந்தும் இயற்கையாக வெளியேறும். இருந்தாலும் இது அப்பிள், எலுமிச்சை மற்றும் தோடங்காய்களிலிருந்து பெருமளவில் வெளியேறுவது விஞ்ஞான ரீதியாக நிரூபிக்கப்பட்டுள்ளது. இதை எமது அன்றாட நடைமுறை வாழ்க்கையுடன் இணைத்துப் பார்த்து விளங்கிக் கொள்ளலாம். பெட்டிக்குள் வைக்கோல் போட்டு அடைத்து வைத்த மாங்காய்களும், நிலத்தில் தாட்டுப் புகையடித்த வாழைக் குலைகளும் விரைவில் பழுப்பதை நீங்கள் அவதானித்திருப்பீர்கள். புகையினாலும் வைக்கோலினாலும் வெப்பம் அதிகரிக்க காய்களிலிருந்து இயற்கையாக வெளியேறும் எதிலீன் வாயு, காய்களைப் பழுக்கச் செய்யும்.

வெளிநாடுகளில் வாழும் நம்மவர்கள் பலர் அழகுக்காக தோடை, பேரை, அப்பிள் பழங்களை தட்டங்களில் அடுக்கி, அதன்மேல் வாழைப்பழச் சீப்பை வைத்துவிடுவார்கள். இதனால் வாழைப் பழங்கள் மேலும் கனிந்துவிடும். இதேபோல, ஒரு பையில் எலுமிச்சங் காய்களையும் பிஞ்சு வெண்டிக் காயையும் போட்டுக் கட்டி வைத்தால் பிஞ்சு வெண்டிக்காய் முற்றிவிடும்.

இவை அனைத்துக்கும் காரணம், காய்களில் இருந்து இயற்கையாக வெளியேறும் எதிலீன் வாயுவே!

**எதிலீனுக்குப் பதில் கல்சியம் கார்பைட்**

வசதியுள்ள நாடுகளில் வாழும் மக்கள் பெருமளவு பழங்கள் சாப்பிடுவார்கள். இவர்களது உணவில் வாழைப்பழம் முக்கியமானது. இதனால் தினம் தோறும் பல்லாயிரம் தொன் வாழைப் பழங்கள் சந்தைக்கு வரவேண்டும். இவற்றை ஒரே சீராகப் பழுக்கச்செய்ய, மூடிய கூடாரங்களுள் காய்களை அடுக்கி, சந்தைப் படுத்தலுக்கு முதல் நாள் எதிலீன் வாயு செலுத்தப்படும். காய்களிலிருந்து இயற்கையாக வெளியேறும் எதிலீன் வாயு பெரும்தொகையான காய்களை விரைவில் பழுக்கச் செய்யப் போதுமானதல்ல. இதனால், தேவைப்படும் பெருமளவு எதிலீன் வாயுவைச் செலுத்தி இந்தப் பழங்களைப் பழுக்கச் செய்வார்கள். எதிலீன் வாயு எத்ரெலுடன் சுண்ணாம்பைக் கலப்பதன் மூலம் பெறப்படுகிறது. இந்தத் தொழில் நுட்பத்தின் வேறொரு வடிவமே, கிராமங்களில் வாழைக் குலைக்கு சுண்ணாம்பு தெளித்து, வாழைச் சருகுகளால் மூடிக் கட்டிப் பழுக்க வைக்கும் முறை.



செயற்கையாக தயாரிக்கப்பட்ட எதிலீன் வாயுவும், காய்களிலிருந்து இயற்கையாக வெளியேறும் எதிலீன் வாயு போன்று சௌக்கியத்துக்கு ஒருபோதும் கேடுவிளைவிப்பதில்லை. எதிலீன் வாயு தயாரிப்பதற்கு ஓரளவு தொழில் நுட்பம் தேவை. இதற்குப் பணம் செலவு செய்ய சிறு வணிகர்கள் விரும்புவதில்லை. இதனால் இலங்கை இந்தியா போன்ற வளர்முக நாடுகளில் இப்பொழுது காய்களைக் கனிய வைக்க 'கல்சியம் கார்பைட்' என்னும் இரசாயனப் பொருளைப் பாவிக்கிறார்கள். இதை இரும்பு ஒட்டப் பாவிப்பதால் இரும்புப் பட்டறைகளில் மலிவாகப் பெற்றுக் கொள்ளலாம். இதில் ஆர்செனிக் மற்றும் பொஸ்பரஸ் போன்ற நச்சு இரசாயனங்கள் கலந்திருக்க வாய்ப்புண்டு. மாமரங்களை வணிகர்கள் மரத்துடன் தீர்த்து, வாங்குவதை அறிந்திருப்பீர்கள். இதன்மூலம் அவர்கள் விரைவாகப் பணம் சம்பாதிக்க முனையும் போதுதான் எமக்கான பிரச்சினையும் ஆரம்பிக்கிறது. மொத்த வியாபாரிகள் பிஞ்சு, அரைமுத்தல், முத்தல் என மாங்காய்களைப் பறித்து மூடிய அறைக்குள் குவித்துவிடுவார்கள். பின்னர் கல்சியம் கார்பைட் கற்களை பொட்டனியாகக் கட்டி மாங்காய் குவியலுக்குள் ஆங்காங்கே தாட்டு, மாங்காய்க் குவியலுக்கு தண்ணீர் தெளித்து விடுவார்கள். மாற்றாக கல்சியம் கார்பைட்டை மாவாக்கி தண்ணீரில் கலந்தும் தெளிப்பார்கள். கல்சியம் கார்பைட் நீருடன் சேரும்போது, அசற்றலீன் என்னும் வாயு வெளியேறி காய்களைக் கனிபோன்று தோற்றம் தரும் வகையில் நிறம் மாற்றும்.

கல்சியம் கார்பைட்டும் அதிலிருந்து வெளியேறும் அசற்றலீனும் மனித சௌக்கியத்துக்கு பெரிதும் தீங்கானவை. இந்தப் பழங்களைச் சாப்பிட்டால் அடிக்கடி வயிற்றுப் போக்கு, வயிறு மந்தம், சருமப் பிரச்சினைகள், அல்சர் போன்ற பாதிப்புகள் உண்டாகும். கல்சியம் கார்பைட் கலந்த உணவுகளைத் தொடர்ந்து சாப்பிட்டால் புற்றுநோய் உண்டாகும். எனவே, பழங்களை வாங்கும்போது கவனமாகப் பார்த்து வாங்க வேண்டியது மிக அவசியமாகிறது.

**அவதானம் அவசியம்**

பழங்கள் இயற்கையாகப் பழுத்தவையா அல்லது செயற்கையாகப் பழுக்க வைக்கப்பட்டவையா என்று எப்படிக் கண்டறிவது?

செயற்கையாக பழுத்த பழங்கள் பளபளப்பாக மெல்லிய மஞ்சள் நிறத்தில் இருக்கும். காம்புப் பகுதியை கீறி மணந்தால் புளிப்புத் தன்மைக்கான மணம் வீசும்.

இயற்கையாகப் பழுத்த பழம் மெதுமையாக இருக்கும். ஆனால், செயற்கையாகப் பழுக்கவைக்கப்பட்ட பழங்கள் திடமாகவும் கனமாகவும் இருக்கும்.

கல்சியம் கார்பைட் மூலமாகப் பழுக்கும் பழங்கள் முறையான வடிவத்தில் பழுக்காமல் திட்டு திட்டாக, பழுத்த தோற்றத்தில் நிறம் மாறி இருக்கும். வெட்டிப்பார்த்தால் உள்ளே மினுமினுப்பாக இருக்கும் பழத்தில் குறிப்பிட்ட ஓரிடத்தில் மட்டும் தீப்பட்டதுபோல கறுப்பாக இருந்தால், அது கண்டிப்பாக கார்பைட் கல்லால் பழுக்க வைக்கப்பட்டது. முக்கியமாக, பழங்களை உண்ட பின் வாயில் அரிப்பெடுத்தால் அந்தப் பழங்களைத் தொடர்ந்து உண்ணாதீர்கள்.

> மாமரங்களை வணிகர்கள் மரத்துடன் தீர்த்து, வாங்குவதை அறிந்திருப்பீர்கள். இதன்மூலம் அவர்கள் விரைவாகப் பணம் சம்பாதிக்க முனையும் போதுதான் எமக்கான பிரச்சினையும் ஆரம்பிக்கிறது. மொத்த வியாபாரிகள் பிஞ்சு, அரைமுத்தல், முத்தல் என மாங்காய்களைப் பறித்து மூடிய அறைக்குள் குவித்துவிடுவார்கள். பின்னர் கல்சியம் கார்பைட் கற்களை பொட்டனியாகக் கட்டி மாங்காய் குவியலுக்குள் ஆங்காங்கே தாட்டு, மாங்காய்க் குவியலுக்கு தண்ணீர் தெளித்து விடுவார்கள். மாற்றாக கல்சியம் கார்பைட்டை மாவாக்கி தண்ணீரில் கலந்தும் தெளிப்பார்கள். கல்சியம் கார்பைட் நீருடன் சேரும்போது, அசற்றலீன் என்னும் வாயு வெளியேறி காய்களைக் கனிபோன்று தோற்றம் தரும் வகையில் நிறம் மாற்றும்.

# ‘சப்ரிகம’ செயற்றிட்டம் ஜனவரி 16இல் ஆரம்பம்

**யாழ்ப்பாணம், ஜன.12**

**புதிய அரசின் கிராமங்களை மேம்படுத்தும் ‘சப்ரிகம’ எனப் பெயரிடப்பட்டுள்ள வேலைத்திட்டம் ஜனவரி 16ஆம் திகதி தொடக்கம் ஆரம்பிக்கப்படல் வேண்டும் என்று நிதி மற்றும் பொருளாதார கொள்கைகள் அமைச்சு அறிவித்துள்ளது. நாட்டில் உள்ள 14 ஆயிரத்து 21 கிராம அலுவலர் பிரிவுகளிலும் இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று அமைச்சு தெரிவித்துள்ளது.**

ஒவ்வொரு கிராமத்துக்கும் தலா 20 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. ஒரு திட்டம் ஆகக் குறைந்தது 5 லட்சத்துக்குள் உள்வாங்கப்படல் வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

முன்னுரிமைப்படும் வேலைத் திட்டங்களாக கிராமியப் பாதைகள் புனரமைப்பு, மதகுகள், சிறிய பாலங்கள், வடிகால் அமைப்பு, விவசாய உற்பத்திகள், களஞ்சிய வசதிகள் ஏற்படுத்தல், வாராந்த சந்தைகள், கடைகள், கிராமியப் பொருளாதார நிலையங்கள் ஒருங்கமைப்பு, வாய்க்கால்கள், தோட்ட நீர் துரவுகள் , விவசாயக் கிணறுகள் போன்றவற்றுக்கும் இந்த நிதி பயன்படுத்தப்படலாம்.

அத்துடன் குடிதண்ணீர் திட்டங்கள், கிராமிய சுகாதார நிலையங்கள் அபிவிருத்தி, பாடசாலைகளுக்கான மின்சார வசதிகள் ஏற்படுத்தல், கழிப்பறை வசதிகள் என்பனவும் இந்தத் திட்டத்தில் உள்வாங்கப்பட வேண்டும். பிரதேச அரசியல் பிரதிநிதிகள் மற்றும் கிராமியப் பிரஜைகள் குழு மூலம் வேலைத் திட்டம் செயற்படுத்தப்படுவதுடன், கிராமிய அலுவலர் பிரிவிலுள்ள அரச உத்தியோகத்தர்களின் பங்களிப்பும் உள்வாங்கப்படல் வேண்டும்.

இந்தத் திட்டத்தின் அமைப்பாளராக பிரிவு பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் செயற்படுவார்.

இந்தத் திட்டத்தில் கடந்த அரசில் கம்பெரலிய என்ற பெயரில் அழைக்கப்பட்டு வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

அத்துடன் கிராமிய ரீதியில் கிராம அபிருத்திச் சங்கம் மற்றும் சனசமூக நிலையங்கள், பாடசாலைகளுக்கான கட்டுமான வசதிகள் உள்வாங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (க-122)

## பல்கலை மாணவருக்கு மறியல்

கொழும்பு, ஜன.12

கொழும்பு பல்கலைக்கழகத்தின் இரு மாணவர் குழுக்களுக்கு இடையில் ஏற்பட்ட மோதல் காரணமாகக் கைது செய்யப்பட்ட 12 மாணவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

இவர்கள் நேற்று சனிக்கிழமை புதுக்கடை நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர். அவர்களை எதிர்வரும் 13ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டது.

கடந்த 8ஆம் திகதி கொழும்பு பல்கலைக்கழகத்தின் இரு மாணவர் குழுக்களுக்கு இடையில் ஏற்பட்ட மோதலில் இருவர் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

அவர்கள் இருவரும் தற்போது கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்று வருகின்றனர்.

மோதல் தொடர்பாக கருவாத்தோட்ட பொலிஸ் நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் இந்த மாணவர்கள் கைது செய்யப்பட்டனர். (எ)

## முதலாவது திட்டத்தால் குழம்பித் தெளிந்த சபை

யாழ்ப்பாணம், ஜன. 12

யாழ்ப்பாணத்தில் முன்னெடுக்கப்படும் 2ஆம் கட்ட நெல்சிப் திட்டத்தின் மூலம் மாநகர சபை எல்லைக்குள் அனுமதிக்கப்பட்ட திட்டம் மக்களால் முதலாவதாகப் பிரேரிக்கப்பட்ட திட்டம் இல்லை. இதனை அனுமதிக்க முடியாது என்று த.தே.ம. முன்னணி உறுப்பினர்கள் சபையில் போர்க்கொடி தூக்கினர்.

யாழ்ப்பாண மாநகர சபையின் மாதாந்த அமர்வு கடந்த 9ஆம் திகதி சபையில் இடம்பெற்றபோது இந்த விடயம் பேசப்பட்டது.

மக்கள் பங்களிப்புத் திட்டம் என்ற பெயரில் வந்த திட்டத்தில் மக்களால் பிரேரிக்கப்பட்ட முதலாவது திட்டம் அரியாலை விளையாட்டு மைதானம். ஆனால் குருநகர் கடற்கரையோரம் தடுப்பணை அமைக்கவே தற்போது சிபார்சு செய்யப்பட்டுள்ளது. இதனால் அந்தத் திட்டத்தை முன்மொழிந்த மக்கள் திட்டம் வரும் என நம்பி ஏமாந்துள்ளனர். அதனால் அவர்களுக்குப் பதிலளித்த பின்னர் இவற்றை முன்கொண்டு செல்லுங்கள் என்று உறுப்பினர் கிருபாகரன் தெரிவித்தார்.

இதற்குப் பதிலளித்த முதல்வர் ஆனல்ட், “இந்தத் திட்டத்துக்கான அனுமதியை எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் உள்ளூராட்சித் திணைக்களத்துக்கு வழங்கினால் மட்டுமே அங்கிருந்து பிரதம செயலர் அலுவலகம் சென்று பின்னர் ஆசிய அபிவிருத்தி வங்கியின் அலுவலகம் வரை சென்று திட்ட அனுமதி கிடைக்கும். முன்னுரிமை செய்த முதல் 15 திட்டங்களும் வழங்கிய நிலையில் அதில் இருந்த 5ஆவது திட்டம் மக்களுக்கு மிகப் பயனுள்ளது என்ற அடிப்படையில் தேர்வு செய்துள்ளனர். இதில் எனது பங்கு ஏதும் கிடையாது. இதேநேரம் இரண்டாவது திட்டம் பொதுக் கிணறு அமைத்தலும் 3ஆம் 4ஆம் திட்டங்கள் சன சமூக நிலையங்களுடன் தொடர்புபட்டது என்ற அடிப்படையில் விலகியே 5ஆவது திட்டம் வந்தது. குறித்த திட்டத்துக்கு மட்டும் 11.6 மில்லியன் ரூபா கிடைக்கும் அதேநேரம் சபைக்கு 70 மில்லியனுக்குத் திட்டங்கள் கிடைக்கவுள்ளன. அதனால் மேலும் திட்டங்கள் கிடைக்கப்பெறும். எனவே இதனை அனுமதித்து வழங்குவோம்" என்று தெரிவித்தார்.

இருப்பினும் அதற்கான விளக்கங்கள் மற்றும் வரையறைகள் தெரியும் வரையில் அதனை நிறுத்தி மீண்டும் தொடர்பு கொண்டு பட்டியலின் பிரகாரமே நிறைவேற்ற வேண்டும் என்று உறுப்பினர்களான கிருபாகரன், பத்மமுரளி, மயூரன் ஆகியோர் நீண்ட கருத்துக்களை முன்வைத்தனர்.

“எவ்வாறு இருப்பினும் எமது முரண்பாடு காரணமாக கைக்கெட்டிய ஒரு திட்டம் திரும்பியதாக எமது காலத்தில் இருக்கக் கூடாது. கிடைத்த திட்டத்துக்கு முதலில் அனுமதி வழங்கி அடுத்த திட்டங்கள் தொடர்பில் எமது ஐயங்களை நேரிலோ கடிதம் மூலமாகவோ தீர்ப்பதே சிறப்பானது. ஏனெனில் குறித்த திட்டங்கள் எம்முடனான அனுமதியுடன் இடம்பெறும் பணியல்ல. அது ஆசிய அபிவிருத்தி வங்கி வரைக்கும் செல்லும் விடயம். அதனால் இதனை அனுமதிக்க வேண்டும்" என்று உறுப்பினர் ந.லோகதயாளன் கோரிக்கை விடுத்தார்.

இந்த விடயம் தொடர்பில் உறுப்பினர் வ.பார்த்தீபன் கருத்துரைக்கையில் “குறித்த விடயத்தில் உறுப்பினர் லோகதயாளனின் கருத்துடன் உடன்படுகின்றேன். அதாவது எமது மக்களுக்கு வந்த திட்டம் எம்மால் திரும்பியதாக இருக்கக் கூடாது. அதேநேரம் ஐயங்கள் தொடர்பில் நேரில் கதைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். எனவே அதனை நான் வழிமொழிகின்றேன்.” என்றார்.


இதனையடுத்து குறித்த திட்டம் ஏற்றுக் கொள்ளப்பட்டது. அதேநேரம் இந்த விடயம் தொடர்பில் கதைப்பதற்குச் சந்தர்ப்பம் கோரி ஒரு கடிதம் அனுப்பப்படும் என்று மாநகர முதல்வர் இ.ஆனல்ட் தெரிவித்தார். (கு-105)

## இரண்டு கால்கள் இன்றி கரையொதுங்கிய ஆமை

யாழ்ப்பாணம், ஜன. 12

யாழ்ப்பாணம் அச்சுவேலி அக்கரைக் கடற்பகுதியில் இரண்டு கால்களை இழந்த நிலையில் சுமார் 25 கிலோகிராம் எடை கொண்ட கடல் ஆமை ஒன்று நேற்றுக் கரை ஒதுங்கியுள்ளது.

கடற்றொழிலுக்குச் சென்ற மீனவர்கள் சிலர் அந்த ஆமையைக் கண்டு அச்சுவேலி பொலிஸாருக்குத் தகவல் தெரிவித்தனர். பின்னர் தமது படகில் ஏற்றி நடுக் கடலில் விட்டனர். (கு-26)



## 15ஆம் திகதி மஹாபொல

கொழும்பு, ஜன.12

பல்கலைக்கழக மாணவர்களுக்கு மஹாபொல புலமைப்பரிசில் கொடுப்பனவை ஒவ்வொரு மாதமும் 15ஆம் திகதி வழங்க அரசு தீர்மானித்துள்ளது.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்றுச் சனிக்கிழமை காலை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தன இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மஹாபொல மற்றும் புலமைப்பரிசில் நிலுவைப் பணம் எதிர்வரும் வாரத்தில் வழங்கப்படும். அதேபோன்று பல்கலைக்கழக மாணவர்களுக்கு மஹாபொல புலமைப்பரிசில் கொடுப்பனவை ஒவ்வொரு மாதமும் 15ஆம் திகதி வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஜனாதிபதி செயலகத்துக்கு வந்த மாணவப் பிரதிநிதிகளுடன் அதிகாரிகள் அண்மையில் நடத்திய பேச்சில் இது தொடர்பாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மஹாபொலப் புலமைப்பரிசில் தொகை 10 ஆயிரம் ரூபா வரையில் அதிகரிக்குமாறு மாணவர்கள் கோரியிருந்தனர். இது தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

மஹாபொல நிதியத்துக்கு மேலதிகமாக அரசு ஒவ்வொரு மாதமும் மஹாபொல புலமைப் பரிசிலுக்காக 20 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்கின்றது- என்றார். (எ)

சூரியகாந்தி
உதயன்
12.01.2020
ஞாயிறு சிறப்பம்சம்




# போர் முனை!

ஆர்.பிரகாஷ்

உலக வரலாற்றில் மத்திய கிழக்கு என்பது பதற்ற பூமி என்றே அடையாளப் படுத்தப்பட்டுவிட்டது. யேமன், சிரியா, ஈராக், லெபனான், இஸ்ரேல் என்று எங்கும் போர்மேகம் மாறிமாறி சூழ்ந்துகொண்டேதான் உள்ளது. அங்கு உள்ள அள்ளஅள்ளக் குறையாத மசகு எண்ணெய் வளம் மத்திய கிழக்கு மீதான அன்னிய மோதல்களுக்கும், படையெடுப்புக்களுக்கும், வான் தாக்குதல்களுக்கும், திட்டமிட்ட அரசி யல் குழப்பங்களுக்கும் காரணமாகியுள்ளது என்றால் அதில் இரண்டாம் கருத்தில்லை. இந்த நீண்டதும் நெடியதுமான வேட்டையின் நிகழ்கால இரை ஈரான். தளபதி சுலைமானியின் கொலை ஈரான் இரையாக்கப்படுவதற்கான வலுவான அடித்தளம். எனினும் ஈராக், சிரியாவில் நிகழ்ந்ததைப் போன்று அவ்வளவு இலகுவானதல்ல ஈரான் மீதான போர்.



**அமெரிக்காவுக்கும் ஈரானுக்கும் இடையிலான மோதல் இந்த அளவுக்கு முற்றியதற்கு அமெரிக்க அதிபர் ட்ரம்ப் மட்டுமே முக்கிய காரணம். அமெரிக்கா ஈரான் இடையே நிலவிய 'விரோதமற்ற நிலை'யைத் தனியாளாக அழித்தவர் ட்ரம்ப்.**

அண்மையில் ஒரு நகைச்சுவையொன்று இணையத்தளங்களில் வைரலாகியது. அமெரிக்க அதிபர்களுக்கும் அமெரிக்கக் குடிமகனும் உரையாடுவதாக அமைந்திருந்தது அந்த நகைச்சுவை. அந்த அமெரிக்கக் குடிமகன் தனது அதிபரிடம், ஏன் ஈராக் மீது போர் தொடுத்தீர்கள்? என்று கேட்பார். அதற்கு அதிபரோ 'ஈராக் அணுவாயுதம் வைத்திருந்தது என்று சந்தேகித்தோம்' என்பார். பின்னர் குடிமகன், 'ஏன் வியட்நாமைத் தாக்கினீர்கள்?' என்பார். 'வியட்நாம் அணுவாயுதம் வைத்திருந்தது என்று சந்தேகித்தோம்' என்பார் அமெரிக்க அதிபர். பின்னர் குடிமகன் 'ஏன் வடகொரியாவைத் தாக்கவில்லை?' என்று கேட்பார். அதற்கு அதிபரோ 'வடகொரியா உண்மையில் அணுவாயுதம் வைத்துள்ளது' என்று பதில் வழங்குவார். அமெரிக்காவின் அணுவாயுதப் பலத்தையும், எதிர் நாடுகள் மீதான நோட்டத்தையும் 'புட்டுக்காட்டும்' வகையில் அமைந்த இந்த நகைச்சுவையே தற்போது ஈரான் விடயத்திலும் மெய்ப்பட்டுள்ளது.

**மத்திய கிழக்கில்**
**அமெரிக்கத் தாக்கம்**

மத்திய கிழக்கில் பல தசாப்தங்களாகவே தொடர்ச்சியான ஆதிக்கம் செலுத்தி வருகின்றது அமெரிக்கா. அணுவாயுதம் வைத்திருக்கின்றது என்ற சந்தேகத்தில் ஈராக் மீது போர் தொடுத்த அமெரிக்கா அந்த நாட்டைச் சல்லடை சல்லடையாக ஆக்கியது. பின்னர் சிரியாவில் ஆயுதக் குழுக்களை வளர்த்துவிட்டு உள்நாட்டுப்போரை நடத்தியது. மட்டுமல்லாமல் ஐ.எஸ்ஸுக்கு எதிரான போர் என்ற போர்வையில் சிரியாவில் பரவலாக தாக்குதல்களை நடத்தியது. இந்த இரண்டு நாடுகளையும் வழித்துத்துடைத்த பின்னர் தற்போது ஈரானைக் குறிவைத்துத் திரும்பி நிற்கின்றது அமெரிக்கா.



ஆனால் அமெரிக்காவின் 'பூச்சாண்டி விளையாட்டு' ஈரான் விடயத்தில் எடுபடவில்லை, எடுபடவேயில்லை. ஈராக், சிரியாவில் தனது சித்து வேலைகளை அமெரிக்கா காட்டிக் கொண்டிருக்கையிலேயே ஈரான் உஷாரடைந்துவிட்டது. அமெரிக்காவுக்கு அமெரிக்காவின் பாணியிலேயே பதில் வழங்குவது சாத்தியம் என்று மிகமிக இரகசியமாக யுரேனியச் செறிவூட்டலை மேற்கொண்டது. இந்த யுரேனியம்தான் இன்று ஈரானின் இருப்பு, பாதுகாப்பு, எதிர்காலம் எல்லாமுமாக மாறிவிட்டது என்பதுதான் கசப்பான உண்மை.

**ஈரான் மீதான போரே**
**அமெரிக்காவின் நோக்கம்**

ஈரான் மீது முழுமையான போரை மேற்கொள்வது அமெரிக்காவின் மிகச் சமீபத்திய நோக்கமான இருந்திருக்கின்றது. இதற்குதக்க எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது ஈரானின் இராணுவத் தளபதி சுலைமானியின் கொலை. ஈரானியர்களால் மிகவும் மதிக்கப்பட்ட சுலைமானி சிரியாவிலும் ஈராக்கிலும் சமீபத்தில் நடந்த இராணுவத் தாக்குதல்களின் மூளையாகச் செயல்பட்டவர். சிரியாவில் பஷார்அல்அசாத்தின் ஆட்சியைக் காப்பதில் முக்கியப் பங்கு வகித்தவர். ஐஎஸ் அமைப்பினர் சிரியா, ஈராக் நாடுகளில் தோல்வி அடைவதற்கு முக்கிய காரணமாக இருந்தவரும் இவர்தான். ஷியா பிரிவைச் சேர்ந்த போராளிகளுக்குப் பயிற்சி தந்து சிரியா, ஈராக் போர்க்களங்களுக்கு அனுப்பிவைத்தார். அவர்கள் குர்து இன துணை ராணுவப் படையினருடன் இணைந்து ஈராக்கிய ராணுவம், அமெரிக்க வான்படை உதவியுடன் வடக்கு ஈராக்கில் நிலை கொண்டிருந்த ஐஎஸ் படையினருக்கு எதிராகப் போரிட்டனர். அமிர்லி நகரிலிருந்து மோசுல் வரையில் இச்சண்டை நடந்தது. ஐஎஸ் படைக்கு எதிராகப் போரிட அமெரிக்காவுக்கும் ஈராக்குக்கும் உதவியவரே ஈராக்குக்குள் அமெரிக்கர்களால் கொல்லப்பட்டிருக்கின்றமை மிகவும் பரிதாபகரமானது. இது மத்திய கிழக்கில் மீண்டும் முழுமையான போரை ஏற்படுத்த வல்லது.

**ட்ரம்ப்பே காரணம்**

அமெரிக்காவுக்கும் ஈரானுக்கும் இடையிலான மோதல் இந்த அளவுக்கு முற்றியதற்கு அமெரிக்க அதிபர் ட்ரம்ப் மட்டுமே முக்கிய காரணம். அமெரிக்கா ஈரான் இடையே நிலவிய 'விரோதமற்ற நிலை'யைத் தனியாளாக அழித்தவர் ட்ரம்ப். 2015ஆம் ஆண்டில் இரு நாடுகளுக்கும் இடையில் ஏற்பட்ட அணுசக்தி தொடர்பான ஒப்பந்தத்தை ஒருதலைப்பட்சமாக இல்லாமல் செய்ததுடன், ஈரான் மீது 2018ஆம் ஆண்டில் பொருளாதார, ராணுவத் தடைகளையும் விதித்தார். சுலைமானி கொல்லப்பட்டிருப்பதன் மூலம் இதுவரை இருந்திராத அளவுக்கு நெருக்கடி முற்றியிருக்கிறது. 1979ஆம் ஆண்டில் அமெரிக்கத் தூதரகத்தைப் புரட்சிக்காரர்கள் ஈரானில் முற்றுகையிட்டபோதுகூட இந்த அளவுக்கு நெருக்கடி ஏற்பட்டிருக்கவில்லை. ஏனெனில் சுலைமானி மீதான தாக்குதலை ஈரான் தன் மீதான தாக்குதலாகவே பார்க்கின்றது. எந்தவொரு இறைமையுள்ள நாடும் அவ்வாறுதான் பார்க்கும்.

ஈரான் மீதான தாக்குதலை அமெரிக்கா நடத்துவதற்கு தொங்குநிலையில் உள்ள ட்ரம்பின் பதவியும் ஒரு காரணமாக அமையலாம். அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் இந்த வருடம் நடைபெறவுள்ளது. பாலியல் குற்றச்சாட்டுக்கள், மெக்சிக்கோ எல்லையில் சுவர் அமைத்தமை, அளவுக்கதிகமான செலவுகள், வடகொரியாவுடனான அர்த்தமற்ற பேச்சு, குடும்ப ஆட்சி என்று ஏகப்பட்ட விடயங்களில் எதிர்ப்பைச் சம்பாதித்துள்ளார் ட்ரம்ப்.

இதேநிலையில் நீடித்தால் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனநாயகக் கட்சியின் பிடெனுக்கு எதிராக அவர் மண்கௌவும் நிலையும் ஏற்படலாம். எனவே 'உலகப்பொலிஸ்' என்ற அமெரிக்க அந்தஸ்தைக் கிளறுவதன் மூலம் மீண்டும் தனது ஆதிக்கத்தை மக்கள் மத்தியில் கொண்டுசெல்ல ட்ரம்ப் திட்டமிட்டிருந்திருக்கலாம். இதற்காக அவரின் தற்போதைய ஒரே தெரிவு ஈரானாக இருந்திருக்கலாம். எது எவ்வாறானதாக இருந்தாலும் அமெரிக்கா ஈரான் விடயத்தில் தார்மீகத் தோல்வியையே சந்தித்துள்ளது என்பது மறுக்க முடியாதது.

**சிம்ம சொப்பனங்கள்**

அமெரிக்காவுக்கு இரண்டு நாடுகள் தற்போது சிம்மசொப்பனங்களாக உருவெடுத்துள்ளன. ஏற்கனவே அணுவாயுதப் பலத்தைக் கொண்டுள்ள ரஷ்யா, பிரிட்டன், பிரான்ஸ், சீனாவைத் தவிர்த்து வடகொரியா மற்றும் ஈரான் என்பனவே அமெரிக்காவுக்குத் தற்போது பெரும் தலைவலி. வடகொரியாவுக்கு அமெரிக்கா எத்தனையோ பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளது. வடகொரியா, அமெரிக்கா இரண்டும் எத்தனையோ தடவைகள் வார்த்தை மோதல்களில் பகிரங்கமாக ஈடுபட்டுள்ளன. வடகொரியாவைத் தாக்கினால் அமெரிக்கா இருந்த இடம்கூட இல்லாமல் ஆகிவிடும் என்றெல்லாம் அமெரிக்காவைப் பகிரங்கமாக வடகொரியா விமர்சித்திருந்தது. ஆனால் வடகொரியா மீது அமெரிக்கா கைவைக்கவேயில்லை. அதேபோல் சுலைமானி தாக்கப்பட்டமைக்கு ஈரான் மிக விரைவாகவே எதிர்வினையாற்றியது. எனினும் மற்றுமொரு பதிலடியை அமெரிக்காவால் எண்ணிப்பார்க்க முடியவில்லை. 'உலக அமைதியைக் கருத்தில்கொண்டு பதில் தாக்குதலைத் தவிர்க்கின்றோம்' என்று அறிவித்துவிட்டார் ட்ரம்ப். அணுவாயுதங்களும், பொருளாதாரத் தடைகளும் அமெரிக்காவுக்கு இனியும் இலாபம் கொடுக்கப்போவதில்லை. தற்போது அமெரிக்காவிடம் எஞ்சியிருப்பது ஐ.நா சபைக்குள் அமெரிக்கா கொண்டுள்ள மறைமுக அதிகாரமும், வீட்டோ அதிகாரமும்தான். இவையும் இல்லாவிட்டால் அமெரிக்காவும் சாதா

எஸ்.சுவன்யா
ஊடகக் கற்கைகள்
யாழ்ப்பாணப் பல்கலை



# கொக்கு பறபற கோழி பறபற...

## பட்டத் திருவிழா பற்றிய வரலாற்று பார்வை இது!

இலங்கையின் வடபகுதியான யாழ்ப்பாண மாவட்டத்தில் அமைந்துள்ள ஒரு சிறிய பட்டினமே வல்வெட்டித்துறை.

கரையோரப் பிரதேசமாக அமைந்துள்ளதால் இங்கு பாரம்பரியமாக கப்பல் கட்டுவதும், திரை கடலோடித் திரவியம் தேடுவதும் இவர்களது பிரதான தொழிலாக இருந்தது. தலைசிறந்த கப்பல் கட்டும் வல்லுநர்கள் வல்வையில் வாழ்ந்தார்கள் என்பதற்கு, 1938ஆம் ஆண்டு வல்வெட்டித் துறையிலருந்து அமெரிக்கா வரை சென்றிருந்த பாய்மரக் கப்பலான 'அன்னபூரணி அம்மாளை' சிறந்த சான்றாகக் குறிப்பிடலாம். இவ்வாறு பல வரலாற்றுச் சரித்திரங்களின் வரிசையில் யாழ்ப்பாணம் மற்றும் அயல் மாவட்ட தமிழர்களாலும் விரும்பப்படும் நிகழ்வாக வல்வையின் பட்டத்திருவிழா வளர்ச்சியடைந்து வருகின்றது.

'பாய்மரக் கப்பல்கள் மூலம் வல்வெட்டித்துறை மக்கள் இந்தியாவின் நாகபட்டினம், அதிராம்பட்டினம், காக்கிநாடா, கொல்கத்தா மற்றும் மலேசியா, சிங்கப்பூர், பர்மா, சுமாத்திரா போன்ற நாடுகளுக்கு சென்று பொருட்களை கொள்வனவு செய்து வணிகத்தில் ஈடுபட்டு வந்தனர்.

இவ்வாறாக கடலோடிகள் பருவக்காற்றான வாடைக்காற்று காலத்தில் அதாவது தமிழர் திருநாளாம் தைப்பொங்கல் தினத்திற்கு முன் வல்வெட்டித்துறை வந்து ஓய்வெடுப்பார்கள். இப்பருவக்காற்று காலத்திலேயே இயற்கையாகவே கடலோடிகளிடம் இருந்த கப்பலுக்கு பாய் கட்டும் நுட்பத்தினை பயன்படுத்தியும் வாடைக்காற்றின் சாதக நிலைமையையும் பயன்படுத்தியும் பிள்ளைகளுடன் பொழுதை இனிதே கழிக்க பட்டம் கட்டுவதில் ஆர்வம் காட்டினார்கள். இவ்வாறு தான் ஆரம்பத்தில் பட்டம் கட்டும் கலை ஆரம்பமாகியது என்று திரு ந.சிவரட்ணம் (வல்வை ஜெயம்) குறிப்பிடுகின்றார்.



### தோற்றத்தின் பின்னணி

'பட்டம் ஏற்றுவதற்கு காற்றின் பங்களிப்பு மிகவும் அவசியமானது. அந்தவகையில் வாடைக காற்று ஜப்பசி மாதத்திற்கு பிறகு ஆரம்பித்தாலும் கூட அக்காலப்பகுதி மழை என்பதனால் பட்டம் ஏற்றுவதற்கு பொருத்தமான காலமாக இருக்காது. இதனால் வாடைக்காற்றின் இறுதிக் காலமான தை மாதத்தினையும் விசேட தினமாக தைப்பொங்கலையும் பட்டப் போட்டி நடத்துவதற்கு தேர்ந்தெடுத்தார்கள் என்று கனகசபாபதிப் பிள்ளை (கவிஞர் ஜயா) கூறுகின்றார். வல்வை மக்களிடத்தில் இயல்பாகவும், பாரம்பரியமாகவும் பட்டம் கட்டும் கலை இருந்தது. எந்தவொரு கலைக்குமே போட்டி என்று ஒன்று இருக்கும். அப்போதுதான் அந்தக் கலை இன்னும் வளர்ச்சியடையும்.

அந்தவகையில் ஆரம்ப காலத்தில் ஒழுங்கமைக்கப்பட்டு நிறுவன ரீதியில் பட்டப்போட்டி நடத்தப்படாவிட்டாலும் கூட சிறியளவில் இல்லமெய்வன்மைப் போட்டிகளில் நடத்தப்பட்டு வந்தது. தொடர்ந்து வல்வை சனசமூக சேவா நிலையம் என்ற ஓர் அமைப்பே இதனை ஒழுங்குபடுத்தி ஒரு நிகழ்வாக நடத்தி வந்தது. இது ஆரம்பத்தில் ரேவடி கடற்கரையிலேயே நடத்தப்பட்டது. இந்த அமைப்பினால் 1995ஆம் ஆண்டுதான் இறுதியாக இந்த பட்டப்போட்டி நடத்தப்பட்டது. 1995ஆம் ஆண்டுகளுக்குப் பின்னர் போர்க் காலங்கள், அவை தந்த இடப்பெயர்வுகள் போன்ற காரணங்களினால் இப்போட்டியை தொடர்ந்து நடத்த முடியாத சூழல். போர் முடிவடைந்த பின்னர் மீண்டும் பட்டப் போட்டி 2011ஆம் ஆண்டு ஆரம்பமானது. வல்வையின் பட்டம் கட்டும் கலை அழிந்துவிடக்கூடாதுஎன்றும், அதனை வித்தியாசமான கண்ணோட்டத்தில் வளர்க்க வேண்டும் என்று உழைத்தவர்களில் தில்லையம்பதி ஜெகதீசன் என்பவர் இங்கு முக்கியமாக சுட்டிக்காட்டப்பட வேண்டியவர். இன்றைய காலங்களில் விக்னேஷ் வரா சனசமூக சேவா நிலையமும், உதயசூரியன் விளையாட்டுக் கழகமும் இணைந்து உதய சூரியன் உல்லாசக் கடற்கரையில் இப்பட்டத் திருவிழாவினை நடத்தி வருகின்றார்கள். இவ்வாண்டுடன் இத் திருவிழா பத்தாம் ஆண்டு என்னும் மைல்கல்லை அடையவுள்ளது.

### வடிவங்கள் பல

ஆரம்பகாலத்தில் ஒருசில பட்டங்களே அறிமுகமாகியிருந்தன. வெளவால், கொக்கு, பருந்து, கட்டுக்கொடி, பெட்டிப் பட்டம் போன்றவைகள் அவற்றுள் சில. அன்றைக்கு ஆண்பாதி பெண்பாதியாக கட்டப்பட்ட ஆள் பட்டம் மக்களால் அதிகம் பேசப்பட்டது. பட்டம் கட்டும் கலையின் வளர்ச்சியின் அடுத்த கட்டமாக 'விண்' எனப்படும் ஒலி எழுப்பும் ஒரு நுட்பமும் பயன்படுத்தப்பட்டது. இந்த 'விண்' ஆரம்பத்தில் பச்சை பனம்மட்டையின் நாரினால் உடைந்த கண்ணாடி மற்றும் பாதத்தினது உதவியுடன் செய்யப்பட்டது.

தொடர்ந்து முப்பரிமாண வடிவங்களில் பட்டங்கள் அறிமுகமாகின. பின்னர் பட்டப்போட்டியின் வளர்ச்சிப் படியின் இன்னொரு கட்டமாக 'லைற் பட்டங்கள்' வானில் பறக்கத் தொடங்கின. பட்டங்களில் பல வர்ண மின்குமிழ்கள் பொருத்தப்பட்டு பட்டங்கள் அலங்கரிக்கப்பட்டு இருக்கும். பட்டத்தினையும் பட்டமேற்றும் இடத்தினையும் இணைக்கும் நூல் வழியாக வயரும் இணைக்கப்பட்டு இருக்கும். அதன் வழியாக மின் வழங்கப்படும். இவ்வாறு உருவங்களாக வளர்ச்சியடைந்த வந்த பட்டங்கள் உருவங்கக்கு உயிர் தரும் வகையில் ஒரு வேலையை வானில் செய்வது போன்று பட்டங்களாக உச்ச வளர்ச்சி பெற்றன. இவற்றுள் சமயலறை, தையல் இயந்திரம், உழவு இயந்திரம், சனிக்கிரகம், தும்பி, ட்ராகன், தாஜ்மகால், லான்ட்மாஸ்ரர், போர் விமானம், பறக்கும் தட்டு, கிறிஸ்துமஸ் வண்டி, பீரங்கி, அகதிக்குடும்பம் மாட்டுவண்டியில் இடம்பெயர்தல் (கிடைத்த தகவல்களின் அடிப்படையில்) போன்ற பட்டங்கள் தத்ரூபமான எண்ணங்களை பிரதிபலிக்கச் செய்து ரசிகர்களின் வெகுவான பாராட்டுக்களைப் பெற்றவை ஆகும்.

### வெகுவான வளர்ச்சி

2011ஆம் ஆண்டு இந்தப் பட்டத்திருவிழா மீண்டும் ஆரம்பிக்கப்பட்டபோது 17 போட்டியாளர்கள் மட்டுமே பங்குபற்றி இருந்தார்கள். இதன்போது பார்வையாளர்களாக 300க்கும் குறைவானவர்களே வந்திருந்தார்கள். 2012ஆம் ஆண்டளவில் ஆயிரம் வரையான ரசிகர்கள கூட்டம் அதிகரித்தது. தொடர்ந்து 2015ஆம் ஆண்டு ஏறக்குறைய ஐம்பதாயிரமாக ரசிகர்களின் எண்ணிக்கை கூடியிருந்நது. இற்றைக்கு இந்தப் போட்டியினை கண்டு கழிக்க ஐம்பதாயிரம் முதல் எண்பதாயிரம் வரையிலான ரசிர்கள் ஒன்று கூடும் இடமாக உதயசூரியன் உல்லாசக் கடற்கரை மாறிவிட்டது. சன நெரிசலைக் கட்டுப்படுத்த வீதிப்போக்குவரத்து அதிகாரிகளின் உதவியும் இன்று தேவைப்படுமளவிற்கு இப்போட்டி மக்களிடையே வெகுவான இடத்தினை பிடித்துக்கொண்டது. திருவிழாவைக் காண யாழ்மாவட்ட ரசிகர்கள் மட்டுமல்ல கொழும்பு, திருகோணமலை, வவுனியா போன்ற மாவட்டங்களிலிருந்தும் பல்லாயிரம் பேர் வருகை தருகின்றார்கள்.

வல்வையில் அறிமுகமான இந்தப் பட்டத் திருவிழா யாழ் மாவட்டத்தோடு மட்டும் நின்றுவிடாமல் இலங்கை முழுவதுமுள்ள ரசிகர்கள் கண்டுகழிக்க கூடியதாக 2017ஆம் ஆண்டில் கொழும்பு காலி முகத்திடலில் பட்டம் ஏற்றும் நிகழ்வொன்று நடத்தப்பட்டது விசேடமான ஒரு விடயமாகும்.


கலையோடு கலை வளர்ப்பதைப் போல் இப்பட்டத்திருவிழா நிகழ்வை ஒரு பாடலாகவும் வெளியிட்டுள்ளதனை இணையத்தில் காணலாம். இப்பாடலுக்காக வல்வை மண்ணின் இளைஞர்களே உழைத்துள்ளார்கள். 'போட்டியடா பட்டப் போட்டியடா' என்ற ஆரம்பிக்கும் அப்பாடல் தில்லையம்பதி ஜெகதீசன் தயாரிப்பில் சிவாஅறிவின் பாடல் வரிகளில் வசந்த், தயானந்த், றமணன் ஆகியோரின் குரல் வழியாக வெளிவந்திருந்தது. கலைகள் கனதியானவை. அவையே எமது பண்பாடு, பாரம்பரியம். அந்த வகையில் பட்டப்போட்டியை வடக்கின் பாரம்பரியமாக மாற்றியுள்ளவர்கள் என்றும் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

# பௌத்த பேரினவாதம்



■ விஷ்ணு

தமிழர் தாயகப் பகுதிகளில் போர் நிறைவுறும்வரையில் மிக அரிதாகவே காணப்பட்ட பௌத்த வழிபாட்டிடங்கள், பௌத்த சின்னங்கள் என்பன போரின் பின்னரான ஒரு தசாப்த காலத்தில் பல்கிப் பெருகியுள்ளன. அதற்கு எதிர்ப்புக் கிளப்பப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அரசின் பேராதரவுடன் முறியடிக்கப்பட்டு அதே அரசின் ஆதரவுடன் பௌத்த மயமாக்கல் திட்டமிட்டபடி தாயகத்தில் வேரூன்றுகின்றது. இத்தகைய செயற்பாடுகளால் மதப் பிரச்சினை, இனப் பிரச்சினையாகி சிறுபான்மைச் சமூகங்கங்களை அடக்கியாளும் போக்கை அரசு பக்குவமாகக் கையாள்கின்றது. யாழ்ப்பாணத்தில் நாவற்குழியில் விகாரை அமைக்கப்பட்டுவிட்டது. போர்க் காலத்தில் படைகள் நிலை கொண்டிருந்த வலி.வடக்கு உள்ளிட்ட பகுதிகளில் பௌத்த சின்னங்களுக்கு, வழிபாட்டு இடங்களுக்குக் குறைவில்லை. முல்லைத்தீவில் செம்மலை நீராவியடிப் பிள்ளையார் கோவில் வளவில் பிக்குவின் சடலத்தை கோவில் நிர்வாகத்தின் எதிர்ப்பை மீறியும், நீதிமன்றின் கட்டளையை மீறியும் எரித்தமையும் அரச ஆதரவுடன் செயற்படும் பேரினவாத மதவாதிகளின் சட்டத்தை மதிக்காத உத்வேகத்தையும் தெளிவாகவே புட்டுக்காட்டுகின்றது. பௌத்த சாசன அமைச்சின் மறைமுக ஆதரவிலும் தொல்பொருள் திணைக்களத்தின் நேரடியான ஆதரவுடனும் இவை இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றன.





### மேன்மேலும் பலப்படும் பௌத்த மயமாக்கல்

முல்லைத்தீவு வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் கோவிலுக்குச் செல்ல மலையில் ஏணிப்படி பொருத்திய விவகாரத்திலும் தொல்பொருள் திணைக்களம் தன்வேலையைக் காட்டத் தவறவில்லை. அந்தக் கோவிலில் நிர்வாகத்தினர் கட்டடம் கட்டியபோது தொல்பொருள் சின்னங்களை சேதப்படுத்தினர் என்று குற்றஞ்சாட்டி பொலிஸார் ஊடாக கோவில் தரப்பினருக்கு எதிராகத் தொல்பொருள் திணைக்களத்தினர் வழக்குத் தொடர்ந்தனர். அதனூடாக கோவில் தரப்பினரைத்தண்டிப்பதுதொல்பொருள்திணைக்களத்தினர் எதிர்பார்ப்பாக இருந்துள்ளது.

இவையெல்லாம் நடந்து, மக்களின் போராட்டங்களும் எதிர்ப்புக்களும் வெளிக்காட்டப்பட்ட நிலையில் கோத்தாபய அரசு ஆட்சிக்கு வந்தவுடன் தமிழர் தாயகத்தில் பௌத்த சாசன விரிவாக்கத்தை கனகச்சிதமாக மேலும் பரவலாக்கவுள்ளது.

அதன் ஆரம்பமாகவே நாடு முழுவதும் உள்ள தொல்பொருள் சின்னங்களை ஆய்வுசெய்யவுள்ளதாக பௌத்தசாசன மற்றும் பௌத்த விவகாரங்கள் அமைச்சு சர்ச்சைக்குரிய அறிவிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது. தொல்பொருள் திணைக்களத்துடன் இணைந்து ஆய்வு நடத்தவுள்ளது என்றும் பௌத்த சாசன அமைச்சு கூறியுள்ளது.

### பேராபத்து நிலை

நாடு முழுவதும் இந்த ஆய்வைச் செய்யவுள்ளதாகக் கூறுவதிலிருந்து அதன் பெருந்திட்டம் தமிழர்களின் தாயகப் பகுதிகளில் தமது அராஜகத்தை கனகச்சிதமாகச் செயற்படுத்தவுள்ளது என்றே கருதவேண்டியுள்ளது. அதிலும் கோவில்களின் வரலாறு, அமைவிடம் ஆகியவை மிகமுக்கியப்படுத்தப்பட்டு தொல்பொருள் திணைக்களத்துடன் இணைந்து ஆய்வுக்கு உட்படுத்தப்படவுள்ளன என்று அமைச்சுக் கூறுகின்றது. இதற்கான அவசியம் ஏன் ஏற்பட்டுள்ளது? என்பது பற்றிய விளக்கத்தை அமைச்சு விலாவாரியாகக் கூறாது தவிர்த்துள்ளது.

முல்லைத்தீவில் கோவில் வளாகத்தில் பிக்குவில் சடலத்தை எரித்த விடயத்தில் சட்டத்தை மீறியவர்கள், அடாவடி புரிந்தோர் இதுவரை குற்றவாளிகளாகக் காணப்படவுமில்லை, தண்டிக்கப்படவுமில்லை என்பது ஒருபுறமிருக்க, அவர்கள் என்னதான் நடந்தாலும் தமது கைங்கரியத்தை அணுவளவும் பிசகாத வாறு செயலாற்றிவருகின்றனர் என்பதை உணர்ந்துகொள்ளவேண்டும்.

இந்த அராஜகங்கள் ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சிக் காலத்திலும் நடந்தன. அந்த அரசு தமிழர்களுக்கு மறைமுகமாக துரோகம் செய்துவந்தது., முன்னேற்றத்தைத் தடுத்து வந்தது. இத்தகைய அநியாயங்கள் இடம்பெறும்போதெல்லாம் கண்டும் காணாததுமாகவே இருந்தது. இதை அந்த அரசின் நரித்தந்திரம் என்றும் கூறலாம். அவற்றைவிட மேலும் பல மடங்கு அதிகரித்ததாக தாமும் தமிழர்களுக்கு எதிரான செயற்பாடுகளில் சளைத்தவர்கள் அல்லர் என்பதை சிங்கள மக்களுக்கு மார்தட்டிக் காட்டும் நோக்கில் தற்போதைய ராஜபக்ஷ அரசு செயற்படுகின்றது.

மோதகமும் கொழுக்கொட்டையும் உருவத்தில் வேறானவையே தவிர, இரண்டுக்குள் உள்ளீடு ஒன்றுதான் என்பது புளித்துப்போன வாசகம்தான். ஆனாலும், தற்போதைய ராஜபக்ஷ அரசு தமிழர்களுக்கு எதிரான நடவடிக்கைகளை, மெல்லக் கிளறத் தொடங்குகின்றதா என்பதை வெளிக்காட்டுவதாகவே பௌத்தசாசன அமைச்சின் செயற்பாடுகள் அமைந்துள்ளன என்பதை அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

### இந்துக் கோவில்கள் முதன்மை இலக்கு

தமிழர் தாயகத்தில் இந்துக்கோவில்கள் 90 வீதமானவை உருவான காலம் எது என்பதைக் கூறமுடியாதளவுக்கு பழைமை வாய்ந்தவை. அத்தகைய இடங்கள் இன்று வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவையாகவும் உள்ளன.

எனினும் அத்தகைய இடங்களிலெல்லாம் தொல்பொருள் திணைக்களம் தொல்லை கொடுத்துக் கொண்டிருக்கின்றது. கோவில்கள் அமைந்துள்ள இடம், அவற்றை அண்மித்த பகுதிகள் தமக்குச் சொந்தமானவை என்று தொல்பொருள் திணைக்களம் விதண்டாவாதம் செய்கின்றது. கோவில்களை அபிவிருத்தி செய்யும்போது தொல்பொருள் இடங்கள் அழிக்கப்படுகின்றன அல்லது அழியும்நிலையை எட்டிவிடும் என்றுகாரணம்கூறி கோவில்களில் அபிவிருத்தியை, கட்டுமானங்களைத் தடுக்கின்றனர். அதற்காக நீதித்துறை முன்பாகநின்று நீதியைப் பெறுவதற்காகக் கடுமையாகப் போராடவேண்டிய நிலை தமிழர்களுக்கு ஏற்பட்டுள்ளது. அந்தளவுக்கு தொல்பொருள் திணைக்களம் தமிழர்களின் வரலாற்றை, வரலாற்றுத் தடங்களை, கலாசாரங்களை, பண்பாடுகளை அழிக்கும் செயலில் மிகத்தீவிரமாகவுள்ளது. இதுபோன்று பௌத்தசாசன அமைச்சும் தொல்பொருள் திணைக்களமும் இணைந்து நாட்டில் குறிப்பாக தமிழர் தாயகப் பகுதிகளில் தொல்பொருள் இடங்களை, கோவில்களின் அமைவிடம், வரலாற்றை ஆய்வுசெய்யவுள்ளமையின் நோக்கம் என்ன என்பது மர்மமாகவே யுள்ளது.

கோவில்களின் அபிவிருத்தி உள்ளிட்ட விடயங்களைக் கவனிக்கவென்று இந்து கலாசார அமைச்சு இருக்கையில், இந்த அமைச்சைப் புறந்தள்ளிவிட்டு இந்த அமைச்சுக்குரிய பணிகளை பௌத்த சாசன அமைச்சு தொல்பொருள் திணைக்களத்துடன் இணைந்து செற்படுத்தவுள்ளதன் பின்னணி என்ன? கோவில்களின் வரலாற்றை இந்துகலாசார அமைச்சும் ஆய்வு செய்யலாம். தேவையேற்படின் தொல்பொருள் திணைக்களத்தை ஆய்வுக்கு இணைத்துக் கொள்ளலாம். ஆனால் இந்து கலாசார அமைச்சு புறந்தள்ளப்பட்டதன் நோக்கம் என்ன?


தொல்பொருள் திணைக்களம் மத்திய அரசின் நேரடி நெறிப்படுத்தலில் செயற்படுகின்றது. போர் நிறைவடைந்து 10 வருடங்களாக வடக்கு கிழக்கில் அவற்றின் சீத்துவக்கேடுகளைத் தட்டிக்கேட்க முடியாத நிலைமையில் தமிழர்கள் இருக்கின்றனர்.

பௌத்தசாசன அமைச்சு மீதும் தொல்பொருள் திணைக்களம் மீதும் தமிழர்களுக்குக் கொஞ்சமும் நம்பிக்கையில்லை. அவ்வாறிருக்கையில், கோவில்களில் ஆய்வு என்ற பெயரில் அங்கு பௌத்த சின்னங்களை புதைத்துவிட்டுச் சென்று சில மாதங்களின் பின்னர் அத்தகைய இடங்கள் தொல்பொருள் இடங்கள் என்றோ அல்லது அத்தகைய இடங்களிலெல்லாம் பௌத்த அடையாளங்கள், பௌத்த சின்னங்கள் உள்ளன என்றோ கூறி அகழ்வாராய்ச்சி நடத்துவதும் இந்த அரசின் நோக்கமாக இருக்கலாம். இதைவிட இன்னும் பல நோக்கங்களையும் இந்த அரசு குறித்த அமைச்சு ஊடாகத் திட்டமிட்டிருக்கலாம். அவற்றையெல்லாம் நாடிபிடித்துப் பார்க்கவேண்டிய நிலை இந்த ஆட்சியில் தவிர்க்க முடியாததாகிவிட்டது. இவையெல்லாம் வடக்கு கிழக்கு தாயகப் பகுதிகளில் பௌத்த மத விரிவாக்கத்துக்கும் பௌத்த சாசனக் கொள்கைப் பரப்புதலுக்கும் வழியேற்படுத்தவே அரசு முயற்சிக்கின்றதா என்ற சந்தேகத்தை வலுவாக எழுப்புகின்றது. இந்த விடயங்களில் தமிழ் மக்களும் தமிழ் அரசியல்வாதிகளும் அக்கறை கொள்ளவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. எமது கலாசாரங்களைக் கட்டிக்காக்கும் பொறுப்பும் உள்ளது. ■

# இழிசெயல்களே தற்கொலைகள்!

பழனித்துரை தர்மகுமாரன்
ஆசிரியர்
உடுவில் மகளிர் கல்லூரி.

"அரிது அரிது மானிடராய்ப் பிறப்பது அரிது" என்னும் பதத்துக்கு அமைய இந்த பூமியிலே மனிதனாக பிறந்தது அவதாரமே. ஆனால் அவசரமான இந்த உலகத்தில் அந்தரமான வாழ்க்கைக் கோலத்தில் உயிரை ஊசலாட செய்யும் அளவுக்கு உளநெருக்கீடு. கைநாடிப் பொழுதில் அல்லது கண் இமைப் பொழுதில் உயிரை மாய்க்கும் அளவுக்கு உலகத்தை மறக்கவும் வெறுக்கவும் வைக்கின்றது.




**பிறப்பின் தத்துவம் மீறப்படும் செயல்**

ஏனைய உயிரினங்களைப் பார்க்கிலும் மனிதன் ஒரு சமூகமாக தனக்கென கல்வி, கலை, கலாசார பண்பாட்டு விழுமியங்களை உருவாக்கி அதற்குள் தன்னைக் கட்டுப்படுத்தி மனிதநேயத்துடனும் மனிதமாண்புடனும் வாழ்கிறான். இதற்கு மகிழ்ச்சிகரமான சூழல் அவசியமானதாகும். மனிதன் சமூகத்தில் உயர்ந்தவனாகக் காட்டுவதற்குத் தன்னை மறந்து, தன்னிலை இழந்து, தற்துணிவு அற்று குடும்ப சூழலை, சமூகச் சூழலை நேசிக்காது ஓடியோடி அவலப்படுகிறான்.


இந்த அவல வாழ்க்கையில் அன்பை மறந்து, பாசத்தைத் தொலைத்து, உறவு நிலைய உதாசீனம் செய்து வாழும் நிலையில்தான் தனக்காகவும் மற்றவர்களுக்காகவும் வாழ வேண்டும் என்ற கட்டாயத்தை மறந்து விடுகிறான். பிறப்பின் தத்துவத்தையும் உரிமையையும் மீறுகிறான் தற்கொலை செய்து கொள்ளும் தற்துணிவு அற்ற மானிடன்.

இன்றைய நிலையில் வடக்கு மாகாணத்தை ஈடாடச் செய்யும் அளவுக்கு தற்கொலை தாண்டவம் ஆடத் தொடங்கிவிட்டது. 2019ஆம் ஆண்டு மட்டும் 176 பேர் தமது உயிரை தாமே மாய்த்துக் கொண்டுள்ளனர் என்ற புள்ளிவிவரம் சாதாரண விடயமல்ல. ஒரு சமூக அமைப்புக்கு விடப்படும் சவாலாகும். இந்த உயிர்கள் ஏன் மாய்க்கப்பட்டன என்பதை ஆராய்ந்து, பிரச்சினைகளை இனம்கண்டு அதற்கான தீர்வுகளை முன்னிறுத்த வேண்டும்.

அதுமட்டுமன்றி தற்கொலை முயற்சியில் ஈடுபட்டு உயிர் தப்பியவர்களின் எண்ணிக்கை 820 ஆகக் காணப்படுகின்றது. இதில் பெண்களின் எண்ணிக்கை அதிகமாகவுள்ளது என்பது கவலைக்குரிய விடயமாகும். ஏனெனில் பெண் தலைமைத்துவத்தைக் கொண்டவர்கள் தன்னையும் தன்னை நம்பி இருப்பவர்களையும் வாழவைக்க முடியாது என்ற நம்பிக்கையை இழக்கும்போதுதீர்வாகத்தற்கொலையை நாடுகின்றனர்.

**நீளும் காரணங்கள்**

அதுமட்டுமன்றி பொருளாதாரத்தில் ஏற்பட்ட மாற்றத்தினால் வறுமை நிலையில் உள்ளவர்கள் கடன் பெறுகிறார்கள். பின்னர் அதனைச் செலுத்த முடியாது அல்லற்படுகிறார்கள். இதனால் கடன் கொடுத்தவர்கள் பாலியல் ரீதியான எமது கலாசாரத்தின் அதி உச்சமான பெண்களின் தனித்துவத்தை விட்டுக் கொடுக்கும்படி கேட்கும்போது அவர்கள் உயிரையே விடுகிறார்கள்.



மனித வாழ்க்கை என்பது தனித்துப் பணத்துடன் சம்பந்தப்பட்டது அல்ல. அதற்கு அப்பால் அன்பு, உறவுநிலை, மகிழ்ச்சி, ஐக்கியம், பரஸ்பரம் வாய்விட்டு பேசுதல், இன்பதுன்பத்தில் பங்குகொள்ளல் போன்ற பல விடயங்கள் அடங்கும். பிரச்சினை ஒன்று ஏற்படும்போது தமக்கு நெருக்கமானவர்களுக்குச் சொல்வார்கள். அதைத் தாண்டினால் இறைவனிடம் சொல்வார்கள். தீர்வினை பெறுவார்கள். இன்றைய நிலையில் பிரச்சினையை கேட்டு ஆறுதல்படுத்தும் அளவுக்கு மனிதர்களும் இல்லை. கண்ணீர் விட்டு அழுது பிரச்சினைகளை வாய்விட்டுச் சொல்வதற்கு ஆலயங்களும் அமைதியாக இல்லை என்ற நிலை உருவாகி தற்கொலை மலிந்துள்ளது.

இதற்குக் காரணம் பேராசை, பதவி மோகம், குறுகிய நோக்கில் இலாபத்தைப் பெறல், கலாசாரத்துக்கு ஒவ்வாத செயற்பாடுகளில் ஈடுபடல், முரண்பாடான கருத்துப் பரிமாற்றங்கள், சந்தேகம், ஒப்பீடு போன்றன உள நெருக்கீடு, மன உளைச்சல், மன அழுத்தம் என்பவற்றை ஏற்படுத்தி உள அமைதியற்ற நிலையில் சிந்திக்க முடியாத நிலையில் தற்கொலையை நாடும் நிலை ஏற்படுகின்றது!

**முதிர்ச்சித்தன்மை பேணப்பட வேண்டும்**

"மனிதனின் மனம் மாயக் குழி. அதனை யாராலும் நிரப்பிவிட முடியாது. நிரப்ப நிரப்ப தேவைகள் பெருகிக் கொண்டே செல்லும்" என அறிஞர் ரூசோ கூறியது போல மனிதனின் ஆசை வரையறைக்கு உட்பட்டது அல்ல. அதனை நிவர்த்தி செய்யும் பொருளாதாரம் வரையறைக்கு உட்பட்டது. எனவே நாம் வாழ்கின்ற சூழலை மகிழ்ச்சிகரமாகவும் மனிதநேயமிக்கதாகவும் வைத்திருக்க வேண்டும். எமது உணர்வுகளை சமூகச் சூழலுக்கு ஏற்ப பயன்படுத்த வேண்டும். இதில் நல்ல உணர்வுகளான மகிழ்ச்சி, அன்பு, பாசம், அரவணைப்பு, பொறுமை, தன்னம்பிக்கை, விட்டுக்கொடுத்தல், உதவி செய்தல், செவிமடுத்தல், மதித்தல் போன்றவற்றை வளர்த்தல் வேண்டும். தீய உணர்வுகளான கோபம், பொறாமை, சினம், பயம், புறம்கூறல், எரிச்சல், காட்டிக் கொடுத்தல், வஞ்சகம், பழிவாங்கல் போன்றவற்றை தூக்கி எறிந்து நல்ல சிந்தனையுடன் செயற்பட்டால் தீய சாத்தானுக்குரிய சிந்தனைகள் எழுச்சியுறமாட்டா. ஆகவே குடும்பப்பற்று, சமூகப்பற்று வலுவான நிலையில் இருக்கும்போது வாழ ஆசைப் படுவார்களே ஒழிய சாக ஆசைப்படமாட்டார்கள்.

**தீர்வல்ல**

ஆண்டவனால் படைக்கப்பட்ட உயிரை யாரும் உறவு கொண்டாடவும் முடியாது. தனது உயிர்தானே அதனை என்னவும் செய்யலாம் என நினைக்கவும் கூடாது. ஏனெனில் தற்கொலை செய்தலும் கொலைக்குச் சமனாகும். எனவே சட்டத்தில் இடமுமில்லை. அதற்கு முயற்சிப்பவர்கள், குற்றவாளிகளே என்பதை அறிந்து கொள்ளுதல் காலத்தின் தேவையாகும்.

மனித வாழ்க்கையில் ஏற்படும் பிரச்சினைகளுக்கு தற்கொலைதான் தீர்வு என்றால் யாருமே இப்பூவுலகில் வாழ்ந்துவிட முடியாது. ஏனெனில் மனிதனுக்கு பிரச்சினை இல்லை என்றால் அவன் கடவுளே. எனவே ஒவ்வொருவருக்கும் பிரச்சினை பல்வேறுபட்ட வடிவங்களில் வந்து கொண்டே இருக்கும். அதனை ஏற்று அதற்கான தீர்வை இலகுவாகச் சாதகமாக மாற்றியமைக்க வேண்டும்.

மனித மனங்களில் ஏற்படும் வக்கிரமான சிந்தனை உக்கிரம் அடையும்போது ஏன் வாழ வேண்டும் யாருக்காக வாழ வேண்டும் என்ற கேள்விகள் எழுப்பப்படும். அதில் எந்த மாற்றமும் ஏற்படாது சரிதானே என தனக்குள் தானே தீர்மானத்தை மேற்கொண்டு உயிரை மாய்க்கின்றனர். இவ்வாறான நேரங்களில் தண்ணீர் அருந்துதல், 1-10 வரை எண்ணுதல், அன்பானவர்களை நினைத்தல், ஓய்வாக இருத்தல், கடவுளை நினைத்தல் போன்ற ஆத்மார்த்த ரீதியான சிந்தனைகளை வளர்ப்பதன் மூலம் ஒரு நொடிப் பொழுதில் வரும் தீய சிந்தனை இல்லாது போய்விடும். எனவே நான் வாழ்ந்தால் மட்டும் போதும் என்று இருக்காது. எனது சமூகமும் தேசமும் சிறப்பாக இருக்க வேண்டும் என்ற நல்ல எண்ணங்கள் வளர்க்கப்பட்டால் குடும்பத்தில் முரண்பாடுகள் ஏற்பட்டாலும் வாழ வேண்டும் என்ற ஆசை எம்மை அசைக்க முடியாத அளவுக்கு வழிநடத்தும். அதுமட்டுமன்றி தற்கொலையில் ஈடுபடுவதால் சமூக சவால்களுக்கு முகம் கொடுக்க முடியாத தற்துணிவற்ற சமூக அமைப்பை உருவாக்கி வருகிறோமா என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

ஆண்டவனால் படைக்கப்பட்ட உயிரை யாரும் உறவு கொண்டாடவும் முடியாது. தனது உயிர்தானே அதனை என்னவும் செய்யலாம் என நினைக்கவும் கூடாது. ஏனெனில் தற்கொலை செய்தலும் கொலைக்கு சமனாகும். எனவே சட்டத்தில் இடமுமில்லை. அதற்கு முயற்சிப்பவர்கள், குற்றவாளிகளே என்பதை அறிந்துகொள்ளுதல் காலத்தின் தேவையாகும்.

> ஏனைய இனங்களை விட ஏனைய மதங்களை விட தங்கள் இனம், தங்கள் மதம் என்பன தான் மேம்பட்ட தெனவும் ஏனையவர்கள் அவற்றுக்கு அடங்கி நடக்க வேண்டுமென்ற சிந்தனைப் போக்கே உண்மையிலே இன, மத, அடிப்படைவாத மாகும். அந்த அடிப்படைவாதமே இன்று கோத்தாபயவை ஆட்சிபீடம் ஏற்றி வைத்துள்ளது. அவர் அதிகாரத்தில் இருந்து கொண்டு சிறுபான்மை மக்களின் நியாயபூர்வமான உரிமைக் கோரிக்கைகளை எவ்வித கூச்சமுமின்றி இனவாத நிகழ்ச்சி நிரல் எனக் கூறுகிறார்.

# சிறுபான்மையினரை இலக்கு வைக்கும் கொள்கை



■ சந்திரசேகர ஆசாத்

“இனவாதத்தை அடிப்படையாகக் கொண்ட அரசியல் நிகழ்ச்சி நிரலை மக்கள் நிராகரித்துள்ளதோடு அரசர்களை உருவாக்கும் வகிபாகத்தை மேற்கொண்டு நாட்டின் அரசியலை வழிநடத்துவதற்கு எவருக்கும் சந்தர்ப்பமளிக்கப்படமாட்டாது என்பதை ஜனாதிபதித் தேர்தல் மூலம் பெரும்பான்மை மக்கள் நிரூபித்துவிட்டனர். குறுகிய அரசியல் நோக்கத்துடன் முன்னெடுத்த அரசியலை தற்போதாவது கைவிட்டு மக்களிடையே பேதங்களை விதைப்பதற்குப் பதிலாக ஒன்றிணைந்த தேசத்தைக் கட்டியெழுப்பும் பணியில் ஒன்றுசேரச் சகல தரப்பினரும் முன்வர வேண்டும்”

இது இலங்கையின் எட்டாவது நாடாளுமன்றத்தின் நான்காவது கூட்டத் தொடர் அண்மையில் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவால் ஆரம்பித்து வைக்கப்பட்ட பின்பு, அவர் ஆற்றிய கொள்கைப் பிரகடன உரையின் ஒரு சிறு பகுதியாகும். இது ஒரு மிகச் சிறுபகுதியாகத் தோற்றமளித்த போதிலும் இதன் உள்ளடக்கம் காத்திரமான பல விடயங்களைக் கொண்டிருக்கும் அதேவேளையில் இதன் மூலம் பல வார்த்தைகளின் பாரம்பரிய அர்த்தங்கள் திரிபுபடுத்தப்பட்டு உண்மைக்கு நேர்மறையான கருத்துக்களை வெளிப்படுத்தும் வகையில் அமைந்துள்ளதை அவதானிக்க முடிகிறது.

### வழக்கமான பல்லவி

வழமையாகவே இனவாதம், அடிப்படைவாதம், தீவிரவாதம், பிரிவினைவாதம், பயங்கரவாதம் போன்ற வார்த்தைகள் திரிபுபடுத்தப்பட்டு எதிர்மறையான வடிவிலேயே சிங்கள அரசியல்வாதிகளால் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. இப்படியான பிழையான வார்த்தைப் பிரயோகங்களின் பின்னால் தமிழ் அரசியல் தலைமைகள் இழுபட்ட சந்தர்ப்பங்களும் உண்டு.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் இனவாதத்தை அடிப்படையாகக் கொண்ட அரசியல் நிகழ்ச்சி நிரலை நிராகரித்து விட்டார்கள் என்றால் சஜித் பிரேமதாச தரப்பு, ஐக்கிய தேசிய முன்னணி, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ், தமிழ் முற்போக்குக் கூட்டணி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகிய கட்சிகள் முன்னெடுத்த இனவாத அரசியலை மக்கள் நிராகரித்துவிட்டார்கள் என்று அர்த்தம்.

இவர்கள் அனைவருமே ஒன்றுபட்ட, பிரிக்கப்படாத, பிரிக்கமுடியாத நாட்டுக்குள்ளான உச்சகட்ட அதிகாரப் பகிர்வு என்ற கொள்கையை ஏற்றுக்கொண்டே தேர்தலில் போட்டியிட்டனர். இவர்களில் ஐக்கிய தேசிய முன்னணி தவிர்ந்த ஏனைய கட்சிகள் யாவும் சிறுபான்மை இனங்களான தமிழ், முஸ்லிம், மலையகத் தமிழ் மக்கள் ஆகியோரைப் பிரதிநிதித்துவம் செய்யும் கட்சிகளாகும். இந்த அதிகாரப் பகிர்வு என்பது இலங்கையில் ஆட்சிப் பீடத்தில் அமர்ந்திருந்த அனைத்து சிங்கஎத் தலைவர்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டதுதான். ஆனால் வடிவங்கள்தான் வெவ்வேறானவை.

எஸ்.டபிள்யூ.ஆர்.டி பண்டாரநாயக்காவால் பண்டா-செல்வா ஒப்பந்தமாகவும், டட்லி சேனநாயக்காவால் டட்லி- செல்வா ஒப்பந்தமாகவும், ஜே.ஆர்.ஜெயவர்த்தனவால் 13ஆவது அரசியல் திருத்தமாகவும், திருமதி சந்திரிக்காவால் தீர்வுப் பொதியாகவும், சந்திரிகா- ரணில் ஆட்சியின்போது நோர்வே உடன்படிக்கையாகவும், போர் முடிந்த பின்பு மஹிந்த ராஜபக் ஷவால் 13 பிளஸ்ஸாகவும் அதிகாரப் பகிர்வு ஏற்கனவே பல்வேறு சந்தர்ப்பங்களிலும் ஏற்றுக் கொள்ளப்பட்டதுதான் என்பதை எவருமே மறுத்துவிட முடியாது.

### அன்றைய தீர்வு இன்றைய இனவாதம்

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவுக்கும் அவரைச் சுற்றியுள்ள பேரினவாத சக்திகளுக்கும் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான ஒரே மார்க்கமாகத் தேர்ந்தெடுத்து பின் எதிர்ப்புகளுக்கு முகம் கொடுக்க முடியாத நிலையில் எல்லாச் சிங்களத் தலைவர்களாலும் கைவிடப்பட்ட அரசியல் தீர்வு இன வாதமாகத் தெரிகிறது. இந்த ஜனாதிபதி பாதுகாப்புச் செயலராக பதவி வகித்தபோது வடக்கு- கிழக்கு தமிழர்களின் பாரம்பரிய வாழிடம் அல்ல எனக் கூறியமையை மறந்துவிட முடியாது. அதே சிந்தனைப் போக்கிலிருந்து இன்று வரை சற்றும் கீழிறங்கி வராத கோத்தாபய அதிகாரப் பகிர்வுக்கு இனவாத வர்ணம் தீட்டி தனது இனவெறி முகத்தை வெளிக்காட்டுகிறார். ஆனால் ஐக்கிய தேசியக் கட்சியும் தமிழ், முஸ்லிம், மலையக அமைப்புக்களும் இணைந்து நாட்டைப் பிளவுபடுத்தப் போகிறார்கள் என்று 21/4 தாக்குதலைச் சொல்லி முஸ்லிம்களுக்கு எதிராகப் பெரும் எதிர்ப்பலையை உருவாக்கியதுடன் நாட்டின் பாதுகாப்புக்குப் பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டு விட்டதெனவும் வடக்கில் தொன்மை வாய்ந்த பௌத்த வழிபாட்டிடங்களை அழித்து இந்துக் கோவில்களை அமைக்கிறார்கள் எனவும் இனவாத நஞ்சூட்டிய பிரசாரங்கள் சிங்கள மக்கள் மத்தியில் இந்தப் பேரினவாதிகளால் மேற்கொள்ளப்பட்டன.

பள்ளிவாசல்கள் தாக்கப்பட்டும் முஸ்லிம்களின் வர்த்தக நிலையங்கள் தாக்கியழிக்கப்பட்டும் அம்பாறை, கண்டி, வடமேல் மாகாணம் முதலிய இடங்களில் முஸ்லிம்களுக்கெதிரான கொலைகள், கொள்ளைகள் என்பவற்றை நடத்திப் பெரும் இனவெறித் தாண்டவம் ஆடினர். மதம் பரப்புகிறார்கள் என்று குற்றம் சாட்டப்பட்டு கொழும்பு புறநகர் பகுதியிலுள்ள ஒரு கிறிஸ்தவ தேவாலயம் மீண்டும் மீண்டும் தாக்கப்பட்டது.

ஏனைய இனங்களை விட ஏனைய மதங்களை விட தங்கள் இனம், தங்கள் மதம் என்பன தான் மேம்பட்டதெனவும் ஏனையவர்கள் அவற்றுக்கு அடங்கி நடக்க வேண்டுமென்ற சிந்தனைப் போக்கே உண்மையிலே இன, மத, அடிப்படைவாதமாகும். அந்த அடிப்படைவாதமே இன்று கோத்தாபயவை ஆட்சிபீடம் ஏற்றி வைத்துள்ளது. அவர் அதிகாரத்தில் இருந்து கொண்டு சிறுபான்மை மக்களின் நியாயபூர்வமான உரிமைக் கோரிக்கைகளை எவ்வித கூச்சமுமின்றி இனவாத நிகழ்ச்சி நிரல் எனக் கூறுகிறார். ஒரு சிறு அதிகாரம் கூடச் சிறுபான்மையினருக்குக் கிடைத்து விடக் கூடாதென்பதில் ஜனாதிபதி எவ்வளவு அக்கறை கொண்டுள்ளார் என்பதை ‘அரசர்களை உருவாக்கும் வகிபாகத்தை மேற்கொண்டு நாட்டின் அரசியலை வழிநடத்துவதற்கு எவருக்கும் சந்தர்ப்பளிக்கப்பட மாட்டாது என்பதை பெரும்பான்மை மக்கள் ஜனாதிபதித் தேர்தல் மூலம் நிரூபித்துள்ளனர்’ என்ற வார்த்தைகளினூடாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

### கோத்தாவின் கொள்கை

1965ஆம் ஆண்டில் அரசு அமைக்கப் போதிய நாடாளுமன்றப் பலம் இல்லாத நிலையில் முதலில் சுதந்திரக் கட்சியும் பின்பு ஐக்கிய தேசியக் கட்சியும் தமிழரசுக் கட்சியை நாட வேண்டிய நிலை ஏற்பட்டது. இது மட்டுமன்றி ஐ.தே.கட்சி தலைமையில் அமைக்கப்பட்ட அரசில் தமிழரசுக் கட்சியும் ஒரு பங்காளியாகி அதன் சார்பில் திருச்செல்வம் அமைச்சரானார்.

அதேபோன்று 2015ஆம் ஆண்டில் ரணில் - மைத்திரி கூட்டரசு அமைக்கப்பட்டபோது அதில் முஸ்லிம் கட்சிகள் பங்காளிகளாகினர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்க்கட்சித் தலைமையை ஏற்ற போதும் அரசுக்கு ஆதரவு வழங்கி வந்தது. அதுமட்டுமன்றி நல்லாட்சி அரசிலிருந்து சுதந்திரக் கட்சி அரசிலிருந்து வெளியேறி ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சியில் இறங்கியபோது தமிழ், முஸ்லிம் தரப்புக்கள் ஐக்கிய தேசிய முன்னணி அரசுக்கு உறுதியான ஆதரவை வழங்கி ஆட்சியைக் காப்பாற்றின.

இப்படியான ஒரு நிலைமையைத்தான் ஜனாதிபதி இல்லாமற் போய்விட்டமைக்காகப் பெருமைப்படுகிறார். அதாவது சிறுபான்மை மக்கள் தங்களுக்குரிய பலத்தைக் கொண்டு அதிகாரத்தில் பங்காளிகளாகவோ அல்லது தீர்மானிக்கும் சக்திகளாகவோ இருந்து விடக் கூடாது என்பதில் அவர் மிகவும் அவதானமாயுள்ளார். அதாவது இந்த நாட்டின் அரசியல் அதிகாரம் முழுமையாக சிங்களவர்களிடம் இருக்க வேண்டுமென்பதே அவரின் கொள்கையாகும்.

அதாவது சிங்கள பௌத்த இனம் ஆளும் இனமாகவும் ஏனைய தமிழ், முஸ்லிம், மலையக மக்கள் ஆளப்படும் இனமாகவும் இருக்க வேண்டும் என்பதையே அவரின் கொள்கைப் பிரகடனம் தெளிவுபடுத்தி நிற்கிறது.

(22ஆம் பக்கம் பார்க்க)



# பெண்ணானவள் ஆணாகின்றாள்!

பா.பாலாஜினி
சுற்றுலாத்துறை மாணவி
யாழ். பல்கலைக் கழகம்

இவ்வுலகம் இயங்கிக் கொண்டிருப்பது ஆண், பெண் ஆகிய இருபாலரினதும் அடிப்படையிலே ஆகும். சீன சித்திரக் குறியீட்டின் அடிப்படையில் உலகத் தத்துவமானது கறுப்பு, வெள்ளை மீன்களினூடாக உருவாக்கப்பட்டுள்ளது. அதில் ஒன்று ஆணும் மற்றெது பெண்ணுமாகும். இவ்வகையில் நோக்கின் விஞ்ஞானம் சார்ந்த ஆய்வுகளில்கூட ஆணும், பெண்ணும் இவ்வுலக இயக்கத்தின் அடிப்படை என்று நிரூபித்துள்ளது. அவ்வாறு இருக்கும் போது நம் நடைமுறை வாழ்க்கையினில் மட்டும் இது நிகழாதது ஏன்?. பாரதியார் வாழ்ந்த காலத்தில் ஆணுக்குப் பெண் சரிநிகர் சமன் என மதிக்கப்பட வேண்டும் என்று விரும்பினார். அதற்கு சிறந்த வழி பெண்கள் வீட்டை விட்டு வெளியே வர வேண்டும், கல்வி கற்க வேண்டும், தொழில் புரிய வேண்டும், வீட்டில் சமையலும் செய்ய வேண்டும் என்றார். அவர் கனவு நனவாகி இருக்கின்றது இன்று. இருந்தும் கூட மலாலா முதலியவர்கள் இன்றும் பெண் கல்விக்காகவும் பெண் விடுதலைக்காகவும் போராடுகின்றார்கள் எனின் அதில் இருந்து நாம் விளங்கிக் கொள்ள வேண்டியது இன்னும் பெண்களுக்கான உரிமைகளும், சுதந்திரங்க ளும் முழுமையான அளவில் கிடைக்கவில்லை என்பதுதான். கிடைக்கவில்லை என்று சொல்லிக் கொண்டிருப்பதை விட பெண்ணுக்கு முழு மையான உரிமையையும் சுதந்திரத்தையும் பெற்றுக் கொடுக்க வேண்டும். அதற்கு அனைவரும் முன்வர வேண்டும் என்பதற்கான காரணங்களை உறுதியாக முன்வைத்தலே இங்கு சரியானதாக இருக்கும்.

### அர்த்த நாரிகள்!

என்னைப் பொறுத்த வரைக்கும் பெண்கள் ஒருவகையில் அர்த்த நாரிகள் என்பேன் நான். பொதுவில் அர்த்தநாரிகள் என்பது உலக வழக்கில் மூன்றாம் பாலினத்தைக் குறிக்கும் சொல்லாகப் பயன்படுத்தப்படுகின்றது. இருந்தும் கூட நான் பெண்களை அர்த்தநாரிகள் என்று சொல்வதற்குக் காரணம் இருக்கத்தான் செய்கின்றது. ஆண் பெண் இரண்டு இயல்புகளும் கொண்டவர்களைத் தானே அர்த்தநாரிகள் என்கின்றோம். எனவே யதார்த்தமான ஒரு சமூகவாழ்வில் ஆணினுடைய கடமைகளையும் தானே கொண்டு நடத்தும் பெண்களை அர்த்தநாரிகள் என்று கூறுவது எவ்வாறு தவறானதாகும்.

வால்காவில் இருந்து கங்கைவரை என்கின்ற வரலாற்று நூல் கூறுகின்ற ஆய்வுத் தகவல்களின் அடிப்படையில் ஆதிகால நம் சமுதாயம் தாய்வழிச் சமுதாயமாகவே இருந்தது. வேட்டையாடுதல், குடும்பத்துக்குத் தலைமைதாங்குதல், கிடைத்த உணவை பகிர்ந்து கொள்ளல் என அனைத்துச் செயற்பாடுகளுக்கும் பெண்ணே தலைமை தாங்கினாள். நாகரிகங்கள் வளர்ச்சியுற்று அதன் பால் பாகுபாடுகள் தோன்றிய பின்னர்தான் ஆணுக்கு உரிய வேலை பெண்ணுக்கு உரிய வேலை எனப் பாகுபடுத்தப்பட்டது. எப்போது இவ்வாறு பாகுபடுத்தப்பட்டதோ அப்போதில் இருந்து தான் பெண்களுக்கான சுதந்திரத்தில் கேள்வியும் எழத் தொடங்கியது. அதிலும் இன்றைய பெண்கள் ஆண்களுக்கு சமனானவர்களாகத் தம்மை வளர்த்துக் கொண்டும் கூட இன்னும் அது கேள்விக்குறியாகவே உள்ளது. இன்றைய பெண்கள் தாம் வாழும் வீட்டிலும். சமூகத்திலும் தேசத்திலும் ஆண்களுக்குச் சமமாக அல்லர். அதைவிடவும் அதிகமாகத் தமது பங்களிப்பை வழங்கி வருகின்றார்கள். இதற்கு நமது ஒவ்வொருவரினதும் வீட்டில் உள்ள பெண்களையே உதாரணமாக எடுத்துக் கொள்ளலாம். அதிகாலையில் எழுந்து சமையல் வேலைகள் முடித்துக் குடும்பத்தினரை கவனித்து தான் தயாராகி அலுவலகம் சென்று அங்குள்ள வேலைகளை ஆணுக்குச் சரிநிகர் சமனாக முடித்து மீண்டும் வீடு வந்து இயங்கிக் கொண்டே இருக்கும் பெண்களை அர்த்தநாரிகள் என்று பெயர் கொள்வதே சரியானதாக இருக்கும். ஓர் ஆண் அதிகாலையில் எழுந்து தன் வேலைகளை முடித்துக் கொண்டு அலுவலகத்துக்குக் கிளம்பிவிடு கின்றான். பெண்ணோ அனைவரும் இயங்குவதற்கு அடிப்படையானவளாக இருக்கின்றாள். அவள் அகத்தினுள் பெண்ணும் புறத்தினுள் ஆணுமாய் தனது கடமைகளைச் செவ்வனே செய்து விடுகின்றாள். தான்பெற்றபிள்ளைகளுக்குத் தந்தை இல்லாத நேரங்களில் தானே தந்தையும் தாயுமாகிவிடுகின்றாள்.

ஏன் இன்று நம்முடைய அலுவலகங்களிலேயே மேலதிகாரிகளாக கடமையாற்றுபவர்களில் பாதிக்கும்மேல் பெண்களே. அலுவலகத்தில் அனைவரையும் பொறுப்புணர்வுடன் கட்டுப்படுத்தி வேலை நடத்துகையில் அவள் ஆணாகவும், குடும்பத்தின் வேலைகளில் அவள் பெண்ணாகவும் விளங்கு கின்றாள். இவ்வாறு விளங்குகின்ற நம் பெருமைக்குரிய பெண்களுக்குத்தான் இன்னும் சுதந்திரம் என்பது கனவாகவே இருக்கின்றது. ஆண், பெண் பாலர் தொடர்பில் மெக்கன்ஸி என்னும் உலக நிறுவனத்தினுடைய ஆய்வுகளானவை கீழ்வரும் கருத்துக்களினை வெளிப்படுத்துபனவாக உள்ளன. தற்போது உலகிலுள்ள சகல நாடுகளிலும் உழைக்கும் வயதில் உள்ளவர்களில் சரிபாதிப்பேர் பெண்கள். அவர்களை ஊதியம் அதிகம் கிடைக்கும் துறையில் பணிபுரிய விடாமல் சமூகம் தடுக்கின்றது. அவ்வாறு பணிபுரிபவர்களில் பலர் பல்வேறு இடர்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். ஆண்களையும் பெண்களையும் சமமாக நடத்த வேண்டிய அல்லது பார்க்க வேண்டிய 15 பொதுவான அடையாளங்களை மக்கன்ஸி நிறுவனம் பட்டியலிட்டது. அதில் 15 அடையாளங்களையும் பொதுவான 4 பிரிவுகளாகப் பிரித்துள்ளனர். வேலையில் சமத்துவம், பொருளாதாரத்தை உயர்த்திக் கொள்ள வாய்ப்புள்ள துறைகள், உடல் ரீதியாக தீங்கு விளைவிக்காத வேலைகள், சுயேச்சையாக செயல்பட வாய்ப்புள்ள வேலைகள் என்பனவே அவையாகும்.

### பாலியல் சுரண்டல்கள்

இவற்றை வைத்து நோக்குகையில் மேலே குறிப்பிட்ட எதிலுமே நம் நாட்டுப் பெண்களுக்குச் சமத்துவம் இல்லை என்று தான் சொல்ல வேண்டும். போரின் பின்னர் நமது நாட்டில் தலைகாட்டி நிற்கின்ற பெண்களைத் தலைமைத்துவக் குடும்பங்களின் நிலைபற்றி இங்கே குறிப்பிட்டுதான் தெரிந்து கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. ஒவ்வோர் பெண்தலைமைத்துவக் குடும்பமும் சுயதொழில் நிலையிலும் நுண்நிதிக் கடன்களின் விளைவினாலும் சரி கடந்த காலங்களில் உடல், உளரீதியாகவும் பாலியல் ரீதியான அவஸ்தைக்கும் உட்பட்டு எத்தனையோ குடும்பங்கள் அழிந்து போயிருக்கின்றன.

சாதாரணமாகவே நம் நாட்டுப் பெண்களுக்குச் சமுதாய, கலாசார, பண்பாட்டு ரீதியில் பல்வேறு கட்டுப்பாடுகள் காணப்படத்தான் செய்கின்றன. அவற்றிற்கு மேலதிக வெளிப்பாடங்களில் இருந்து வந்து சேரும் தலையீடுகளும் அதிகமாகவே உள்ளன. இருந்தும்கூட நம் நாட்டுப் பெண்களிலும் பாதிக்குமேல் அர்த்தநாரிகள் எனக் குறிப்பிடப்பட வேண்டியவர்களே எத்தனையோ இடர்பாடுகளுக்கு மத்தியிலும் சவால்களை சமாளித்து வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். மன அழுத்தம், அச்சம் என்பனவற்றின் காரணமாக நம் சமூகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் பெண்கள் தமது திறமைகளைச் சரியான முறையில் வெளிக்காட்டுவதற்கு தயங்கிக் கொண்டிருக்கின்றார்கள். இவ்வாறான நிலையில் பெண்ணியம் ஆனது மேலும் ஓர்படி முன்னேற வேண்டுமாயின் பெண்கள் தாமே முன்வந்து தமக்கான களத்தை அமைத்துக் கொள்ளுதல் வேண்டும். ஒரு பெண்ணுக்குள் எப்போதும் தன்னிறைவும், தன்னம்பிக்கையும் இருக்க வேண்டியது அவசியமாகும். அவை இரண்டுமே இல்லையெனில் முன்னேற்றம் என்பது மிகக் கடினம். இந்த இரண்டும் சிறுவயதிலேயே பெண்களுக்குள் ஊட்டி வளர்க்கப்பட்டுவிட வேண்டும். தான் தனித்துவம் வாய்ந்தவள் என்பதை உணர்ந்து கொள்ள அது வழிவகுக்கம்.

### சார்ந்திருக்க வேண்டிய தேவை எதற்காக?

தனக்கு விளைகின்ற ஒவ்வோர் இடரில் இருந்தும் தப்பித்துக் கொள்வதற்கு ஒரு பெண் இன்னொருவரின் உதவியை நாட வேண்டிய நிலையை நமது சமூகம் ஏற்படுத்தி இருக்கின்றது. அந்த நிலை முற்றிலும் மாற வேண்டும். தனக்கு ஏற்படுகின்ற ஒவ்வோர் இடரில் இருந்தும் தப்பித்துக் கொள்ளும் வழிவகைகளை அவளே வகுத்துக் கொள்ளுதல் வேண்டும்.

இன்றைய இளம் பெண்களைப் பொறுத்தவரையில் முன்னேற்றம் என அவர்கள் கருதிக் கொள்வது ஆடை அணிகளும் அலங்காரங்களும் மட்டுமே. இது தான் அவர்களினுடைய சிந்தனையாக இருக்கின்றது. மற்றையவர்களுடன் ஒப்பிடுவதிலும் தம்மை அழகுபடுத்திக் கொள்வதிலுமே அவர்கள் ஈடுபாடு உடையவர்களாக இருக்கின்றார்கள். ஒப்பிடுதல் அவசியமே அதை இல்லை என்று கூறவில்லை நான்.

ஆனால் ஒப்பிடுகை செய்துகொள்ளல் வேண்டும். மேற்குறிப்பிட்ட தவறான சிந்தனை மாற்றம் பெறுமேயானால் பெண்களின் தொடர் முன்னேற்றத்தில் சந்தேகம் கிடையாது.

நாம் வாழும் சமூகம் மக்கள்தொகுதியினுடைய கூட்டிணைப்பிலானது. அதிலே ஆண் பெண் என்கின்ற வேறுபாடுகள் முன்னேற்றத்துக்குத் தடையானவை ஆகும். ஓர் ஆணுக்குள் இருக்கும் திறமைகளை இனம்கண்டு அதை வெளியே கொண்டுவர முற்படுவதில் உள்ள ஆர்வம் ஒரு பெண்ணினுடைய திறமையை இனம் காணுவதிலும் அதனை பாராட்டி வெளிப்படுத்துவதிலும் இருக்க வேண்டும்.

மாறாக அவளை அச்சமூட்டித் தடைகளை ஏற்படுத்த முற்படும் போது எதிர்காலம் தொடர்பான ஒரு தெளிவற்ற நிலையிலே அது அவளைத் தள்ளிவிடும் எனவே பிரச்சினைகளைத் தெளிவுபடுத்துங்கள். அதில் இருந்து விடுபடுவ தற்கான வழியை அவளே அமைத்துக் கொள்வாள்.

தினமும் போக்குவரத்திலும் தொழில் நிலையங்களிலும் நடக்கையிலும் இருக்கையிலும் என ஒவ்வோர் சந்தர்ப்பங்களிலும் சவால்களை எதிர்கொண்டு நம் சமூகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் அர்த்தநாரிகளுக்கு இது சமர்ப்பணம்.

■ அனார்கலி

# தென்கிழக்கு திசையில் இருந்து....





## விவசாயிகள் கதிகலக்கம்

இலங்கையின் நெல் உற்பத்தியில் முக்கியபங்கு வகிக்கும் அம்பாறை மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள நெற்செய்கை அறுவடைக்குத் தயாராகும் இறுதிக் கட்டத்தில், பாதிக்கப்படும் நிலை தோன்றியுள்ளது என்று விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்த மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட பெரும்போக நெற்செய்கையின் அறுவடை ஆரம்பமாகவுள்ள நிலையில் முற்றி விளைந்த நெற்கதிர்கள் வெறும் பதராக மாறும் நிலையேற்பட்டுள்ளது. குறிப்பாக தொடர் மழையால் உருவான பங்கசு தாக்கம் உட்பட அறக்கொட்டியா எனப்படும் கபிலநிற தத்திகளின் தாக்கத்தினாலும் இந்தப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்றும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

நெற்பயிர்களில் இத்தாக்கங்கள் ஏற்படும் அறிகுறிகள் தென்பட்டால் உடன் பிரதேச விவசாய போதனாசிரியருடன் தொடர்பு கொண்டு ஆலோசனை பெறுமாறு விவசாயிகள் கோரப்படுகின்றனர்.

**டெங்கு ஒருபக்கம், அறக்கொட்டியா**
**மறுபக்கம் விவசாயிகள் கதிகலக்கம்!**

## ஐந்து துறைகளில் சாதனை

கல்முனை கல்வி வலயம், அண்மையில் வெளியான க.பொ.த. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் படி ஐந்து துறைகளில் அம்பாறை மாவட்டத்தில் முதலிடம் பெற்று சாதனை படைத்துள்ளது.

இதன்படி குறித்த பரீட்சை முடிவுகளில் புதிய பாடத் திட்டத்திற்கமைவாக கல்முனை ஸாகிரா தேசிய கல்லூரி மாணவன் உயிரியல் துறையிலும் நிந்தவூர் அல் அஷ்ரக் தேசிய பாடசாலை மாணவி பௌதீக விஞ்ஞானத் துறையிலும் நிந்தவூர் அல்- மஸ்ஹர் பெண்கள் உயர்தரப் பாடசாலை மாணவி வர்த்தகத் துறையிலும் கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி மாணவி கலைத்துறையிலும் மருதமுனை அல் - மனார் மத்திய கல்லூரி மாணவி உயிரியல் தொழில்நுட்பத்துறையிலும் அம்பாறை மாவட்டத்தில் முதலிடங்களைப் பெற்று சாதனை படைத்துள்ளனர்.

**கல்விச் சாதனைகளில் கல்முனை**
**வலயம் சளைத்ததில்லைதான்**

## மாவட்டச் செயலரின் முன்மாதிரி



அரச தகவல் திணைக்களம் அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர்களுக்கான செயலமர்வு ஒன்றை அம்பாறை மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடத்தியது.

இந்தச் செயலமர்வில் மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் அரசின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் குறித்து மாவட்டச் செயலர் டி.எம்.பண்டாரநாயக்க ஊடகவியலாளர்களுக்கு விளக்கமளித்து உரையாற்றினார்.

மாவட்டச் செயலர் தனது இந்த உரையை ஆரம்பிப்பதற்கு முன்னர் 'ஆயுபோவன்' 'வணக்கம்' , அஸ்ஸலாமு அலைக்கும்' என மும்மதத்தவரையும் கௌரவிக்கும் வகையில் கூறினார். இதன்போது செயலமர்வில் கலந்து கொண்ட ஊடகவியலாளர்கள் மகிழ்ச்சியுடன் கைதட்டி வரவேற்று ஆர்ப்பரித்தனர்.

**இவர் போன்ற உயரதிகாரிகளே**
**நாட்டின் இன்றைய தேவை**

## மேயர் கூறுகிறார்



அரசசேவையில் இடம்பெறுகின்ற ஊழல், மோசடிகளுக்கு எதிராக சம்பந்தப்பட்டவர்கள் மீது தராதரம் பாராமல் தண்டனை வழங்குவதற்கு அரச தலைவர் கோத்தாபய ராஜபக் ஷ எடுத்துள்ள தீர்மானம் மிகவும் வரவேற்கத்தக்கது என கல்முனை மாநகர மேயர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம். றகீப் தெரிவித்துள்ளார்.

முஸ்லிம் காங்கிரஸின் முக்கியஸ்தரான மேயர் றகீப் விடுத்துள்ள ஊடக அறிக்கை ஒன்றில் இதனைத் தெரிவித்துள்ளதுடன் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பதவியேற்றது முதல் நாட்டு மக்களின் நலன் கருதி பல நல்ல திட்டங்களை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுத்து வருகின்றார் எனவும் புகழாரம் சூட்டி யுள்ளார்.

**காலம் செய்யும் கோலம்!**

## சந்திப்பு

சாய்ந்தமருது பிரதேசத்துக்கு என தனி உள்ளூராட்சிச் சபைக் கோரிக்கையை முன்வைத்து பகீரத முயற்சிகளை மேற்கொண்டு வரும் சாய்ந்தமருது முக்கியஸ்தர்கள் குழு, ஐக்கிய சமாதானக் கூட்டமைப்பின் செயலாளர் நாயகமும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான எம்.ரி. ஹஸனலியை அவரது நிந்தவூர் அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளது.

சாய்ந்தமருது ஜும்ஆ பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபைத் தலைவர் வை.எம். ஹனிபா தலைமையிலான இந்தக் குழுவில் கல்முனை மாநகர சபையின் சுயேச்சைக் குழு உறுப்பினர்கள், முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து சந்திப்பு இடம்பெற்றது. சாய்ந்தமருதுக்கான தனி உள்ளூராட்சிச் சபை தொடர்பில் இந்தச் சந்திப்பில் முக்கிய கருத்தாடல்கள் இடம்பெற்றன.

**முயற்சி திருவினையாக்கும்.**



## மீண்டும் புத்துயிர்





அம்பாறை மாவட்டத்துக்கான அரச தகவல் திணைக்களத்தின் ஊடகப் பிரிவு சுமார் 14 வருடங்களின் பின் மீண்டும் புத்துயிரளிக்கப்பட்டு கடந்த வாரம் முதல் இயங்கத் தொடங்கியுள்ளது.

அம்பாறை மாவட்டச் செயலகத்தில் கடந்த 1999ஆம் ஆண்டு முதல் 2006ஆம் ஆண்டு வரை இயங்கிய மேற்படி ஊடகப் பிரிவு இதுவரை கைவிடப்பட்ட நிலையிலேயே இருந்து வந்தது.

எனினும் கடந்த 6ஆம் திகதி அம்பாறையிலுள்ள மாவட்டச் செயலகத்தில் மீண்டும் அரச தகவல் திணைக்கள மாவட்ட ஊடகப் பிரிவு அலுவலகம் வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

அரச தகவல் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் நாலக்க களுவெள தலைமையில் நடைபெற்ற திறப்பு விழாவில் அம்பாறை மாவட்டச் செயலர் டி.எம்.பண்டாரநாயக்க பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு ஊடகப்பிரிவு அலுவலகத்தைத் திறந்து வைத்தார். இந்த ஊடகப் பிரிவின் பொறுப்பு தகவல் உத்தியோகத்தராக எல். தேவ அதிரன் நியமனம் பெற்றுள்ளார்.

மாவட்ட ஊடகர்களுக்கு வரப்பிரசாதம் தான்.



# தனக்கொடா ஆங்கிலம்...

மிருசுவில் தமிழ்தாசன்



காலை எட்டு மணிக்கெல்லாம் மருத்துவமனையில் நிற்க வேண்டுமாம். தவறினால் வீண் அலைச்சல்களைச் சந்திக்க வேண்டி வருமாம். நண்பன் சுரேஷ்தான் சொன்னான். சரி! அப்படியே போய் விட்டால் போச்சுது. எப்படியாவது பாழாய்ப்போன இந்தப் பல்வலியைக் குணமாக்கியே ஆக வேண்டும். வலியைத் தாங்க முடியவில்லை. மருந்துக்கு வலி மாறாவிட்டால் பல்லைப் பிடுங்கித் தொலைக்க வேண்டியது தான்! பல்லைப் பிடுங்கிவிட்டால் முகத்தின் இலட்சணம் குறைந்து போய்விடும் வயது முப்பதாகியும் திருமணத்துக்கு எம்பெருமான் திருவருள் பாலிக்கவில்லை. இனியாவது அப்படியொரு மங்கல காரியம் நடக்கின்றவேளை ஓட்டை வாய்காரனை யார்தான் விரும்புவார்கள்! வேண்டாம். பல்வலிக்கு மருந்தை மட்டும் வாங்கலாம்.

எல்லோரும் காதலிக்கின்றார்கள் எனக்கு மட்டும் அதுவும் வாய்க்கவில்லை. இதுவும் ஒரு கவலை தான் 'டேய்! உன்னை ஆரேன் காதலிக்க வேணுமெண்டால், நாகரிகமாக உடுப்புகள் போடவேணும். ஆரையேன் விரும்பச் செய்ய வேணுமெண்டால், ஸ்டைலாய் கதைக்கப் பழக வேணும். இங்கிலிஷ் முழுசாய் தெரியாவிட்டாலும் ஏதேன் பொறுக்கிக் கிறுக்கிக் கலந்து பேசினால் உன்னையும் ஒரு படிச்சவனாய் நினைச்சுப் பெட்டையள் விரும்பிக் காதலிப்பினம். அப்ப நீ என்ன செய்யுறாயெண்டால் உன்னாலை முடிஞ்சளவுக்கு இங்கிலீசைக் கலந்து கதை. சரியோ!

இதையும் சுரேஷ்தான் சொல்லித்தந்தான். நானும் அவன் சொன்னது போல் இப்போது அடிக்கடி இங்கிலிஸ் பேசுவதை வழக்கமாக்கிக் கொண்டேன். ஏதோ சில வார்த்தைகளையாவது பேசினால் எனக்கும் பெருமையாக இருக்கும் என்பது எனது நம்பிக்கை.

✦✦✦✦✦

பஸ்ஸொன்றுவந்தது பிரயாணிகள் குறைவென்றபடியால் வசதியாக சீற்றும் கிடைத்துவிட்டது.

ஹலோ சேர்! டைம் என்னாகுது?

பக்கத்திலிருந்தவரிடம் கேட்டேன். அவர் தமிழில் நேரத்தைச் சொன்னார். அவரும் கதையைச் சற்று நீட்டி முடக்கியிருப்பாரானால் நானும் ஏதாவது ஆங்கில வார்த்தைகளைப் பயன்படுத்தி பஸ்ஸில் பிரயாணம் செய்பவர்கட்கு எனது புலமையைக் காட்டலாமென்றால் ...சே! சப்பென்றிருந்தது.

நான் எயிட்டொக் குளக்குக்கு ஹெஸ்பிற்றல் போகவேணும் இந்த ட்றைவர் ஏனிப்பிடி ஸ்லோவாய் ட்றைவ் பண்ணுறானோ தெரியவில்லை. ஐ திங் உவன் முந்தி லான்ட் மாஸ்ரர் ட்றைவ் பண்ணியிருப்பானோ! அந்த ஸ்பீட்டிலை தானே ட்றைவ் பண்ணுறான்.

இரண்டு மூன்று வரிகளில் நிறைய ஆங்கில வார்த்தைகளைப் பயன்படுத்திவிட்டேன். எல்லோரும் என்னைப் பார்க்க எனக்குப் பெருமையாயிருந்தது. அதற்காகத்தானே இத்தனை பாடுகள். ஆனால் பெண் பிள்ளைகள் இரண்டொருவர் தானிருந்தனர். என்னுடைய ஆங்கிலத்தைக் கவனித்தார்களோ தெரியவில்லை. பார்ப்போம்.

மருத்துவமனை வாசலில் பஸ் நின்றது. மெல்ல இறங்கினேன் ஒரே சனக்கூட்டம். அதில் வயதுப் பெண்களுமிருந்தார்கள். அரிய சந்தர்ப்பம்.

ஓ! வெறி பீயூட்டி புல் பில்டிங்! ஓ! கோட்!

எனக்குப் பின்னால் வந்து கொண்டிருந்த ஒரு அழகியின் செவிகளில் எனது ஆங்கிலம் விழுந்திருக்குமோ என்னவோ என்னைச் சற்று உன்னிப்பாகப் பார்த்துவிட்டுப் போனாள். சுரேஷ் கூறிய ஆலோசனை முற்றிலும் உண்மைதான்.

> **நான் எயிட்டொக் குளக்குக்கு ஹெஸ்பிற்றல் போகவேணும் இந்த ட்றைவர் ஏனிப்பிடி ஸ்லோவாய் ட்றைவ் பண்ணுறானோ தெரியவில்லை. ஐ திங் உவன் முந்தி லான்ட் மாஸ்ரர் ட்றைவ் பண்ணியிருப்பானோ! அந்த ஸ்பீட்டிலை தானே ட்றைவ் பண்ணுறான். இரண்டு மூன்று வரிகளில் நிறைய ஆங்கில வார்த்தைகளைப் பயன் படுத்திவிட்டேன். எல்லோரும் என்னைப் பார்க்க எனக்குப் பெருமையாயிருந்தது.**

✦✦✦✦✦

எனக்கு நேரே ஒரு வயதானவர் வந்து கொண்டிருந்தார். மெத்தப்படித்தவர் போல் தோற்றம் வலது காதில் ஏதோ கட்டுப் போட்டிருந்தார். காதுச் சிகிச்சை செய்து கொண்டு வந்திருப்பார் போலும். விடக்கூடாது. அவரோடு கொஞ்சம் ஆங்கிலம் பேச ஆசையாயிருந்தது.

'எக்ஸ்கியூஸ்மீ சேர்! டென்ரல் ஹொஸ்பிற்றல்! யூ நோ!

இதற்கு மேலும் பேச எனக்குத் தெரியாது. எல்லாம் அரைகுறை.

'ஓ யேஸ்! இப்படியே ஸ்றெயிற்றாய்' போம்! றைட்சைட்டிலை ஒரு பெரிய பில்டிங் செப்பறேற்றாயிருக்குது. அது தான் ஓகே! சொல்லிவிட்டுப் போய்க் கொண்டிருந்தார். நான் நன்றி சொன்னேன். அதுவும் ஆங்கிலத்தில் தான் ஏராளமானவர்கள் போவதும் வருவதுமாயிருந்தனர். அது ஒன்றே போதும். மருத்துவர் யாரோ ஒரு நோயாளியைப் பார்வையிட்டுக் கொண்டிருந்தார். நல்ல வேளை நோயாளிகள் மிகவும் குறைவாயிருந்தனர். ஒரேயொரு இளம் பெண் வாங்கில் அமர்ந்திருந்து தன் பாட்டுக்கு முணு முணுத்துப் பாடிக் கொண்டிருந்தாள். அவள் பாடினால் என்ன ஆடினால் என்ன! இப்போது எனது பல்லைக் காட்டி மருந்தை எடுத்துக் கொண்டு போக வேண்டியதுதான். ஓ! இனி என்னுடைய ரேண் போலும்! பெண் சிப்பந்தி உள்ளே அழைத்தாள். மருத்துவர் நல்ல வாட்டசாட்டமான இளைஞன் கதிரையில் அமரும்படி சைகை காட்டினார். பணிவுடன் அமர்ந்தேன். சும்மா சொல்லக கூடாது மருத்துவருக்குப் பக்கத்தில் நின்ற அந்தப் பெண் சிப்பந்தி மிக அழகானவளாயிருந்தாள். செக்கச் செவேலென்றிருந்தாள். மூக்கும் முளியுமாகப் பளிச்சென்றிருந்தாள். என்னைப் பார்த்து மெல்லப் புன்னகைத்தாள். பதிலுக்கு நான் பல மடங்கு புன்னகைத்தேன். இப்போது அவளை மேலும் என்வசமிழுக்க வேண்டுமாயிருந்தால் கொஞ்சம் ஆங்கிலம் பேசிக் காட்ட வேண்டும்.

இப்ப உமக்கு என்ன செய்யுது.

டொக்டர்தான் கேட்டார். அந்த அழகி அருகாமையில் நின்று கொண்டிருந்தாள். மருத்துவருடன் கொஞ்சம் ஆங்கிலம் பேசலாமென்றால் என்னதான் பேசுவது!? இரண்டொரு வார்த்தைகளை மட்டும் மனனம் பண்ணி வைத்துக் கொண்டு ஏதோ படித்தவன் போல் பாவனை செய்கின்றேன். ஆங்கிலத்தில் எனக்கு என்ன தான் தெரியும்! வேண்டுமானால் ஐந்தாம் வகுப்பில் அரியமலர் ரீச்சர் சொல்லித்தந்த ஆங்கிலத்தில் கொஞ்சம் விளா சித்தள்ளலாம். எனக்கு இங்கிலிஷ் தெரியும் என்பதை இந்த அழகி விளங்கினால் போதும். ஒருவேளை என்னைக் காதலிக்கவும் கூடும்.

ஹலோ! என்ன பேசாமலிருக்கிறீர்! நான்கேட்டது விளங்கயில்லையோ! இப்ப என்ன செய்யுது உமக்கு!

திறீ டேய்ஷ் நோ சிலீப்பிங்'

ஏன்? என்ன காரணம்? ஏன் நித்திரையில்ல?. ஓ அது அப்பிடித்தானிருக்கும். உம்மடை வருத்தத்தின்ரை ஆரம்ப அறிகுறி நித்திரைப் பிரச்சினைதான். மென்ரல் கேஸ் எண்டு இஞ்சை வாற பேஷன்ற்சில முக்கால்வாசிப் பேருக்கு இது தான் பிரச்சினை. நித்திரை வரவே வராது. ஏன்? என்ன ஏதோ கடுமையாய் யோசிச்சுப் போட்டீரே!? இந்த வயதிலை சே...'

சொல்லியபடி அந்தப் பெண் சிப்பந்தியைப் பார்த்து ஏதோ சைகை காட்டினார். கணப் பொழுதில் கையில் பென்னம்பெரிய ஊசியுடன் வந்தவள் அதை எனது தோள்மூட்டில் ஏற்றிவிட ஆயத்தமானாள்.

'கடவுளே! பல்லுவலியெண்டு வந்த எனக்கு ஏன் ஐயா உந்தப் பெரிய ஊசியை அதுவும் கையிலை இறுக்க நிக்கிறியள்' வெட்கத்தை விட்டு அலறினேன். என்னப்பா! பல்லுவலியோ அப்ப டென்ரல் ஹொஸ்பிற்றலுக்குப் போகாமல் இஞ்சை மென்ரல் ஹொஸ்பிற்றலுக்க ஏனப்பா வந்தனீர்! இது பைத்தியக்கார ஆஸ்பத்திரியப்பா.

ஐயா ஆரோ ஒரு காதுவருத்தக்காறன் சொன்னதைக் கேட்டுத்தான் இஞ்சை வந்தனான். அந்தாளுக்கு டென்ரல் ஹொஸ்பிற்றல் எண்டு சொல்ல மென்ரல் ஹொஸ்பிற்றல் எண்டு கேட்டிருக்க வேணும். பல்லு ஆஸ்பத்திரி எண்டு நான் தமிழிலை கேட்டிருக்கலாம். இந்தக் கண்டறியாத அரைகுறை இங்கிலீஸ் பேச வெளிக்கிட்டுத்தான் ஐயா இந்த அவமானம் வந்தது. ஆளைவிடுங்கோ சாமி நான் ஓடித்தப்புறன் இனி நான் ஆங்கிலம் பேசமாட்டேன். சொல்லியபடி அங்கிருந்து ஓடத்தொடங்கிய நான் இப்போது வீடு போவதற்கு பஸ்ஸுக்காகக் காத்திருக்கின்றேன். இப்போது பல்வலி பறந்துவிட்டது. மனவலி மட்டும் வாட்டி வதைக்கின்றது. ■

twitter.com/Kozhiyaar

கைப்பேசி இருந்தும் ஜன்னல் வழியே ஒருவர் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தால், பேட்டரி குறைவாக இருக்கவே வாய்ப்புகள் அதிகம்!

## பேஸ்புக் உலா...

twitter.com/Kozhiyaar
பிறந்த தினத்தைக் கவலையோடு எதிர் கொள்ள ஆரம்பிக்கிறீர்கள் எனில் நடுத்தர வயதைக் கடக்க ஆரம்பிக்கி றீர்கள் என்று பொருள்!

Dhanamjayakkumar@suvijidjphysio
கஷ்டப்பட்டு உழைச்சு,
சைக்கிள், மோட்டார் சைக்கிள், கார் என வாங்கனதுக்கப்புறம்,
'வாக்கிங் போகனும்னு' டாக்டர் சொல்றதில இருக்கு இந்த வாழ்க்கை.

செல்போனையும் நம்மையும் பிரிக்கும் சக்தி செல்போன் சார்ஜருக்கு மட்டுமே உண்டு!

twitter.com/satturkaran
இனிமேல் வதந்தி எனச் சொல்வதைவிட வாட்ஸ்அப் செய்தி என்றே சொல்லலாம்...

## கருத்துக்கள் எல்லாம் தீர்ப்புகள் இல்லை

தேவாலயத் திருப்பலியில் ஒழுங்காக மெழுகுவர்த்தி பிடிக்கத் தெரியவில்லை என ஒரு பாதிரியாரால் திருச்சபையை விட்டு வெளியேற்றப்பட்டவரே பின்னாளில் **அன்னை தெரேசா"**.

வானவியலில் அறிவு போதவில்லை என வானோடிகளுக்காக நடந்த நேர்முகத்தேர்வில் தெரிவு செய்யப் படாமல் புறக்கணிக்கப் பட்டவர்தான் பின்னாளில் **அப்துல் கலாம்"**.

காதும் கேட்கவில்லை, புத்தியும் மந்தம் என ஏழாம் வகுப்பில் பள்ளியில் பாதியில் வெளியேற்றப்பட்டவரே பின்னாளில் **தோமஸ் ஆல்வா எடிசன்.**

மும்முறை பல்கேரிய இராணுவத்தில் சேரத் தகுதி இல்லை என விரட்டி அடிக்கப்பட்டு பின்னாளில் இரண்டாம் உலகப் போருக்கே காரணமாக இருந்து உலகில் இந்தியா உட்பட்ட முப்பத்தாறு தேசங்கள் விடுதலை அடையக் காரணமானவர்தான் **அடால்ஃப் ஹிட்லர்.**

கறுப்பாய், குள்ளமாய் இருப்பதால் 'டச்அப் கேர்ள்' வேலைக்குக்கூட இலாயக்கில்லை எனத் தமிழ் இயக் குநர்களால் நிராகரிக்கப்பட்டவர்தான் பின்னாளில் வடஇந்தியாவைக் கலக்கியக் கவர்ச்சிப்புயல் **ஹேமமாலினி.**

ஆக இவர்கள் விமர்சனங்களுக்கு மதிப்பளித்திருந் தால் இன்று இல்லை .

தன்னை விட அடுத்தவன் சுகமாக வாழ்கிறானே..




என்கிற எண்ணம்தான் எல்லாத் துன்பங்களுக்கும் காரணமாக இருக்கிறது.!



எரிகின்ற காட்டுக்குள் எரியாத மனிதம்!



## அறிவோ அறிவு.....

**நான்:** என்னடா உங்கட ஊர்ல எல்லோரும் பெற்றோல் அடிக்க பெரிய அளவில் லைன்ல நிற்கிறானுகள்? என்ன விளக்கம்?

**அவன்:** ஈரானுக்கும் அமெரிக்காவுக்கும் சண்டை வரப்போகுது. சண்டை வந்தால் பெற்றோலுக்குத் தட்டுப்பாடு வரும். அதுதான் full tank பெற்றோல் அடிக்க லைன்ல நிற்கிறாங்க.

**நான்:** அதுதான் ட்ரம்ப்பே சண்டை இல்லை என்று சொல்லிட்டானேடா. அது சரி உங்கட ஊர்ல மட்டும்தானே பெற்றோல் அடிக்க லைன்ல நிற்கிறானுகள். ஏன்டா?

**அவன்** என்ன அண்ணன் விளக்கம் தெரியாத மாதிரி கதைக்கிறீங்க? சண்டை தொடங்கினா A9 ரோட்டைத்தானே முதல்ல மூடுவானுகள். பிறகு எப்பிடி பெற்றோல் ஈஸியா வரும்? அதான் இப்பவே..

"சேர் எனக்கொரு "சோர்ட் லீவு" வேணும்."
எனது மேசையின்முன்னால் நின்ற உத்தியோகத்தரை நிமிர்ந்து பார்த்தேன்.
"ஏன்?"
"பர்ஷனல்" என்றும் "பிறைவேற்" என்றும் காரணங்கள் போட்டாலும் உத்தியோகத்தர் என்ன பிரச்சினையி லுள்ளார்? என அறிந்து விடுமுறை வழங்க வேண்டியது ஒரு பொறுப்புள்ள மேலதிகாரியின் கடமையல்லவா? அதற் காகத்தான் அந்த "ஏன்?" என்ற கேள்வி!
"அமெரிக்கா ஈரான் யுத்தம் ஆரம்பிக்கப் போகுதாம் சேர்"
"அதுக்கு நீர் 'சோர்ட்லீவை எடுத்து என்ன செய்யப் போறீர்?"
"பெற்றோல் அடிச்சு வைப்பமென்று.... தான் சேர். ஒப்பீஸுக்கு வரேக்க எல்லாப் பெற்றோல் செற்றிலயும் சரியான சனம் சேர்."
"இப்பவும் சனம் குறையாட்டி உம்மட "சோர்ட்லீவு" "ஹாவ் டேலீவா" போயிடுமே?
"அதுக்கென்ன செய்யிறது சேர் பெற்றோல் ஒரு பெரிய பிரச்சினை."
"ஊரோடு ஒத்த பிரச்சினை தானே!"
"ஊர் எக்கேடு கெட்டா என்ன சேர்? நான் என்ர பெற்றோல் ராங்கை புள் ஆக்கி வைச்சாத்தான் எனக்கு நிம்மதி"
"உங்களைத் திருத்த முடியாது சரிசரி போட்டுட்டுப் போம் "சோர்ட்லீவை" சனம் கூட என்று "ஹாவ்டே" ஆக்கிப் போடாதேயும்."















# இந்த வார ராசிபலன்

**12.01.2020 முதல் 18.01.2020 வரை**

## மேடம்

புதன், ராகு, குரு பகவான் நற்பலன் தருவர். தாமதமான பணியில் முன்னேற்றம் ஏற்படும். நிதானித்து பேசுவது நல்லது. வாகன பராமரிப்பால் பயணம் எளிதாக அமையும். பிள்ளைகளின் எண்ணத்திற்கு முக்கியத்துவம் தருவீர்கள். ஒவ்வாத உணவினை உண்ண வேண்டாம். மனைவியிடம் விவாதம் வேண்டாம். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற புதிய வாய்ப்பு வரும். பணியாளர்கள் நிர்வாகத்தின் சட்டதிட்டம் தவறாமல் பின்பற்றவும். பெண்கள் உறவினர் வகை குடும்பத்திற்கு உதவுவர். மாணவர்கள் கவனமுடன் படித்து அதிக மதிப்பெண் பெறுவர்.

## இடபம்

சுக்கிரன், சந்திரனால் ஓரளவு நன்மை கிடைக்கும். வாழ்வில் புதிய மாற்றம் உருவாகும். உடன் பிறந்தவர்கள் உதவி செய்வர். வாகனப் பயன்பாடு அளவுடன் இருக்கும். பிள்ளைகள் சில விஷயங்களில் பிடிவாத குணத்துடன் செயல்படுவர். இஷ்ட தெய்வ வழிபாடுநடத்துவீர்கள். வழக்குகளில் அனுகூலம் ஏற்படும். மனைவி அன்பு, பாசத்துடன் உதவுவார். வெளியூர் பயணம் ஓரளவு நன்மையை தரும். தொழில், வியாபார வளர்ச்சிக்கு சில மாற்றம் தேவைப்படும். பணியாளர்களுக்கு வேலைச் சுமை அதிகரிக்கும்.

## மிதுனம்

செவ்வாய, குரு, சுக்கிரன், புதன் அளப்பரிய நற்பலன் வழங்குவர். தாமதமான செயல்கள் புதிய முயற்சியால் நிறைவேறும்.உடன்பிறந்தவருடன் குடும்ப விவகாரத்தை பேச வேண்டாம். வெளியூர் பயணம் இனிய அனுபவம் தரும். பிள்ளைகளின் ஆரோக்கியம் மேம்பட சத்தான உணவு தேவைப்படும். குடும்பத்தின் தேவை பூர்த்தியாகும். மனைவி வழி சார்ந்த உறவினர் உங்களின் நல்ல குணத்தை பாராட்டுவர். வீட்டில் ஒற்றுமை, மகிழ்ச்சி கூடும். தொழில், வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். பணியாளர்கள் குறித்த காலத்தில் பணி இலக்கை நிறைவேற்றுவர்.

## கடகம்

சூரியன், கேது, சனீஸ்வரர், சந்திரன் அனுகூல அமர்வில் உள்ளனர். உத்வேகமுடன் பணிபுரிவீர்கள். சமூக நிகழ்வு மனதில் சில மாற்றம் உருவாக்கும். பிள்ளைகளின் எதிர்கால நலனுக்கு தேவையானதைச் செய்வீர்கள். சத்தான உணவு, சீரான ஒய்வு ஆரோக்கியத்தை பாதுகாக்கும். மனைவி மூலம் நல்ல ஆலோசனை கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் அதிக மூலதனம் செய்வீர்கள். பணியாளர்கள், பணியிடத்தில் விவாதம் பேச வேண்டாம். பெண்கள் இஷ்ட தெய்வ வழிபாடு நடத்துவர். மாணவர்களுக்கு படிப்பில் கவனம் அதிகரிக்கும்.

## சிம்மம்

குரு, புதன், ராகு, சந்திரனால் அதிர்ஷ்டகரமான பலன் உண்டாகும். பேச்சில் நேர்மை நிறைந்திருக்கும். பழகுபவர்களிடம் கூடுதல் மதிப்பு, மரியாதை கிடைக்கும். வாகனப்பயணம் பயன் அறிந்து மேற்கொள்வீர்கள். பிள்ளைகள் விரும்பிய பொருள் வாங்கித்தருவீர்கள். பூர்வ, புண்ணிய பலன் குடும்பத்தில் நன்மையை உருவாக்கும். மனைவியின் உடல் நலத்திற்கு சிகிச்சை தேவைப்படும். தொழில், வியாபாரத்தில் புதியவர்களின் ஆதரவு கிடைக்கும். பணியாளர்கள் குறிப்பிட்ட காலத்தில்இலக்கை நிறைவேற்றுவர்.

## கன்னி

செவ்வாய், சுக்கிரன், சந்திரனால் நன்மை உண்டு. குறை சொல்பவரிடம் விலகுவது நல்லது. கூடுதல் முயற்சியால் செயல்களில் முன்னேற்றம் ஏற்படும். உடன் பிறந்தவரின் உதவி கிடைக்கும். வீடு, வாகனத்தில் உரிய பாதுகாப்பை பின்பற்றவும். பிள்ளைகளின் தேவையை நிறைவேற்றுவீர்கள். ஒவ்வாத உணவினை தவிர்க்கவும். மனைவியின் கருத்துக்கு முக்கியத்துவம் தருவீர்கள். தொழில், வியாபாரத்தில் உள்ள அனுகூலத்தை பாதுகாப்பது வளர்ச்சிக்கு உதவும். பணியாளர்கள் கூடுதல் உழைப்பால் பணி இலக்கை நிறைவேற்றுவர்.

## துலாம்

பெரும்பான்மை கிரகங்கள் அளப்பரிய நற்பலன் தருவர். நடைமுறை வாழ்வில் இருந்த சிரமம் குறையும். உங்களை அவமதித்தவர் வெட்கி தலைகுனிவர். வாகனப்பயணம் எளிதாகும். பிள்ளைகளின் அறிவுப்பூர்வ செயலால் மகிழ்வீர்கள். குடும்பத்தில் மங்கல நிகழ்வு ஏற்படும். உறவினர்களின் உதவி கிடைக்கும். மனைவியின் செயல்கள் சிறப்பாக நிறைவேற உதவுவீர்கள். தொழில், வியாபாரத்தில் தாராள பணவரவு கிடைக்கும். பணியாளர்கள் நிர்வாகத்திடம் நற்பெயரும், சலுகையும் பெறுவர். பெண்கள் நகை, புத்தாடை வாங்கு வர். மாணவர்களுக்கு படிப்பில் உள்ள சந்தேகம் தெளிவடையும்.

## விருச்சிகம்

சுக்கிரன், குரு, சந்திரன் ஓரளவு நற்பலன் வழங்குவர். மனதில் சாந்த குணம் நிறைந்திருக்கும். உங்களின் அறிவுரை நண்பரின் மனதில் மாற்றம் தரும். வாகனத்தில் பராமரிப்பு தேவைப்படும். புத்திரரின் செயல் குறையை சரிசெய்வீர்கள். கடனில் ஒரு பகுதி செலுத்துவீர்கள். மனைவி உங்களின் நல்ல குணத்தை பாராட்டுவார். தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிக உழைப்பால் சீராகும். பணியாளர்கள் கூடுதல் தொழில் நுட்பம் அறிந்து கொள்வர். பெண்கள் பிள்ளைகளின் நலனில் அக்கறை கொள்வீர்கள். மாணவர்கள் பெற்றோர், ஆசிரியரிடம் நன்மதிப்பு பெற முயல்வர்.

## தனுசு

சுக்கிரன், சந்திரனால் நற்பலன் கிடைக்கும். நல்ல செயல்களால் சமூகத்தில் அந்தஸ்து கூடும். வெகுநாள் எதிர்பார்த்த நன்மை வந்து சேரும். வீடு, வாகன பாதுகாப்பில் கவனம் வேண்டும். பிள்ளைகள் சொல் கேட்டு நடப்பர். பூர்வ சொத்தில் வளர்ச்சியும், வருமானமும் கூடும். சுப நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். தொழில், வியாபாரம் செழித்து பணம் சேமிப்பாகும். பணியாளர்கள் குறித்த காலத்தில் பணி இலக்கை நிறைவேற்றுவர். பெண்கள் தாய் வீட்டுக்கு உதவுவர். மாணவர்கள் சாகச விளையாட்டுகளில் ஈடுபடக்கூடாது.

## மகரம்

செவ்வாய், இராகு, சுக்கிரன் நல்ல பலன்களை தருவர். சாதனை நிழ்த்தும் எண்ணத்துடன் பணிபுரிவீர்கள். அனுகூல சூழல் அமையும். சகோதரர் கேட்ட உதவியை வழங்குவீர்கள். புதிய வீடு, வாகனம் வாங்க யோகம் உண்டு. பிள்ளைகளின் செயல்களில் மாறுபட்ட தன்மை இருக்கும். விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள். நண்பரிடம் கடனாக கொடுத்த பணம் வசூலாகும். மனைவி வழி உறவினர்கள் கூடுதல் அன்பு, பாசம் கொள்வர். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்தி ஏற்படும். சுற்றுலா பயணம் இனிய அனுபவம் தரும். பணியாளர்கள் நிலுவை பணிகளை நிறைவேற்றுவர்.

## கும்பம்

பெரும்பான்மை கிரகங்கள் அனுகூல அமர்வில் உள்ளனர். பேசுவதில் நிதானத்தை பின்பற்றவும். வாழ்வில் வளம் பெற புதிய செயல் திட்டம் உருவாகும். வீடு, வாகனம் வாங்க யோகம் உண்டு. சத்தான உணவு, சீரான ஓய்வு உடல் ஆராக்கியம் பாதுகாக்கும். மனைவியின் அன்பு, பாசம் நெகிழ்ச்சி தரும். வெளியூர் பயணத்தால் செலவு அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் உள்ள அனுகூலம் பாதுகாக்க வேண்டும். பணியாளர்கள் அதிக உழைப்பினால் உரிய பணவரவு பெறலாம். பெண்கள், குடும்ப நலன் சிறக்க கூடுதல் பணி மேற்கொள்வர். மாணவர்கள் படிப்பில் சிறந்து நண்பர்க்கும் உதவுவர்.


## மீனம்

சூரியன், புதன், சுக்கிரன், சந்திரன் கூடுதல் பலன்களை வழங்குவர். பணிகளை ஆர்வமுடன் நிறைவேற்றுவீர்கள். உறவினர் வருகை மகிழ்ச்சி தரும். புத்திரர் புதிய விஷயங்களை அறிந்து கொள்வர். நோய் தொந்தரவு குறையும். மனைவியின் சொல்லும், செயலும் குடும்ப நலன் பேணுவதாக இருக்கும். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்தி பணி சிறப்பாக நிறைவேறும். பணியாளர்கள் நிர்வாகத்திடம் நற்பெயரும், சலுகையும் பெறுவர். பெண்களுக்கு தாய் வீட்டு உதவி கிடைக்கும். மாணவர்களுக்கு படிப்பில் ஞாபகத்திறன் மேம்படும்.



# தர்பார்

## இது ரஜினியின் தர்பார்!



தமிழ் சினிமாவில் வந்திருக்கும் மற்றுமொரு பொலிஸ் படம். ஆனால், இது ரஜினிகாந்த் படம். அதுதான் படத்தின் வித்தியாசம். அதுதான் படத்தையும் தூக்கியும், தாங்கியும் பிடிக்கிறது.

இன்றைய தலைமுறை ரசிகர்களுக்கு ரஜினிகாந்த் பொலிஸாக நடித்தால் எப்படி இருக்கும் என்பது தெரியாது. அவரது பழைய படங்களைப் பார்த்திருந்தால் தான் தெரியும். இருந்தாலும் பொலிஸ் உடையில் ரஜினியின் 'ஸ்டைல்' என்ன என்பதை இந்தப் படம் மூலம் இன்றைய ரசிகர்கள் புரிந்து கொள்ளலாம்.

மும்பை பொலிஸ் கமிஷனரான ரஜினிகாந்த், மும்பை மாநகரில் நடக்கும் சமூக விரோதச் செயல்களைக் கட்டுப்படுத்துகிறார். மும்பைக்கே போதை மருந்து சப்ளை செய்யும் ஒரு வில்லனைக் கைதுசெய்து ஜெயிலில் போடுகிறார். சில நாள்கள் கழித்து விசாரணைக்காக அந்த வில்லனைப் பார்க்க ஜெயிலுக்குப் போனால், யாரோ ஒருவனைக் காண்பித்து 'இவன் தான் அந்த வில்லன்' என்கின்றனர்.

கோபமடையும் ரஜினி, ஆள் மாறாட்டம் செய்து வெளிநாட்டுக்குத் தப்பிச்சென்ற வில்லனைக் கண்டுபிடிக்கக் களமிறங்குகிறார். ரஜினியால் அவனைக் கண்டுபிடிக்க முடிந்ததா? இதனால் ரஜினிக்கு என்னென்ன சிக்கல்கள் உண்டாகின்றன? அவற்றை ரஜினி எவ்வாறு முறியடித்தார்? என்பதெல்லாம் பரபர திரைக்கதை.

சமூகத்துக்கு நல்லது செய்யும் ஹீரோ, அதனால் ஹீரோ குடும்பத்துக்குப் பாதிப்பு ஏற்படுவது, வெகுண்டெழும் ஹீரோ வில்லனைப் பழிவாங்குவது எனப் பழைய கதைதான். ஆனால், முழுக்க முழுக்க ரஜினி படமாக மாற்றிக் கொடுத்திருக்கிறார் இயக்குநர் ஏ.ஆர்.முருகதாஸ்.

ஆதித்யா அருணாச்சலம் கதாபாத்திரத்தில் என்றும் மாறாத சுறுசுறுப்புடன் பரபர வென இருக்கிறார் ரஜினி. தாடியில் மட்டும் வெள்ளை முடிகள் எட்டிப் பார்க்கும் லுக், ரஜினிக்கு அழகாகப் பொருந்தியிருக்கிறது. இந்த வயதிலும் இப்படியொரு எனர்ஜியா என்று வியக்கும் அளவுக்கு கடின உழைப்பைக் கொடுத்துள்ளார்.

ரஜினிக்குப் பிறகு படத்தில் கவனிக்க வைப்பவர், ரஜினியின் மகளாக நடித்துள்ள நிவேதா தோமஸ். தன் அப்பாவுக்கு ஒரு துணையைத் தேடித் தரவேண்டும் என்ற பொறுப்பாகட்டும், தந்தை விபத்தில் அடிபட்டதைப் பார்த்துக் கதறுவதாகட்டும்... அதிலும், தன்னுடைய உடல்நிலை குறித்து மருத்துவர் விவரிக்கும்போது, நிவேதாவின் கண்களில் இருந்து ஒரே கோடாக கண்ணீர் வழியும் காட்சி என வள்ளி கதாபாத்திரத்தில் மிகச்சிறப்பாகவே தன்னுடைய பங்கைச் செய்துள்ளார்.

லில்லி கதாபாத்திரத்தில் வந்து போகிறார் நயன்தாரா. கதாநாயகியென்று படத்தில் ஒருவர் இருக்க வேண்டும் என்று உருவாக்கப்பட்டக் கதாபாத்திரம் என்பதால், சொல்லிக் கொள்ளும்படி அவருக்கு வேலை யில்லை. ஆனால், வயதாக வயதாக இவருக்கு மட்டும் எப்படித்தான் அழகு கூடிக்கொண்டே போகிறதோ... தங்கச் சிலை போல் தகதகவென்று மின்னுகிறார். படத்தில் அவர் பயன்படுத்தியிருக்கும் ஆடைகளும் அதற்கு முக்கிய காரணம்.

ஓரிரு காட்சிகளைத் தவிர, தான் வருகின்ற எல்லாக் காட்சிகளிலும் சிரிக்க வைக்கிறார் யோகி பாபு. ஏனைய துணைக் கதாபாத்திரங்கள் யாரும் குறிப்பிட்டுச் சொல்லும்படி இல்லையென்றாலும், எல்லோரும் தங்களுடைய கதாபாத்திரத்துக்குத் தேவையான நடிப்பைக் கொடுத்துள்ளனர்.

ரஜினியைப் போலவே திரைக்கதையும் ஸ்பீடாக இருப்பது இந்தப் படத்தின் ப்ளஸ். சென்டிமென்ட் காட்சிகளில் மட்டும் கொஞ்சம் ஸ்லோ. ஆங்காங்கே லொஜிக் மீறல்களும் உள்ளன. ஆனால், அதையெல்லாம் ரஜினியிஸம் மறக்கடித்து விடுகிறது.

'அடிக்கிற அடியில் தாரை தப்பட்டைகள் கிழிந்து தொங்க வேண்டாமா' என்கிற ரீதியில் பின்னணி இசையை ச்சும்மா கிழித்துத் தொங்கவிட்டிருக்கிறார் அனிருத். ரஜினியின் நடிப்பு மாஸ் என்றால், அனிருத்தின் இசையோடு சேர்ந்து பக்கா மாஸாகியிருக்கிறது.

சந்தோஷ் சிவன் ஒளிப்பதிவில் ரஜினியும் நயன்தாராவும் இளமைக்குத் திரும்பியிருக்கின்றனர். ராம் லட்சுமண், பீட்டர் ஹெய்ன் ஆகியோர்களின் இயக்கத்தில் சண்டைக் காட்சிகள் அனைத்தும் ரஜினி ரசிகர்களுக்கு புல் மீல்ஸ். ரயில்வே ஸ்டேஷனில் டான்ஸ் ஆடிக்கொண்டே அடியாள்களை ரஜினி பந்தாடுவதெல்லாம் அதகளம்.

'ஒரிஜினலாவே நான் வில்லன்மா', 'ஐ யாம் எ பேட் காப்', 'நம்புறவனுக்கு வயசுங்கிறது நம்பர்தான்' என ரஜினிக்கான பஞ்ச் வசனங்களும் ஆங்காங்கே தூவப்பட்டிருக்கின்றன.

> ரஜினியின் தீவிர ரசிகர் படம் எடுத்தால் எப்படி இருக்குமோ, அப்படிப் பார்த்துப் பார்த்து ரஜினிக்கான மாஸ் விஷயங்கள் அனைத்தையும் படத்தில் வைத்திருக்கிறார் ஏ.ஆர்.முருகதாஸ்.

ரஜினியின் தீவிர ரசிகர் படம் எடுத்தால் எப்படி இருக்குமோ, அப்படிப் பார்த்துப் பார்த்து ரஜினிக்கான மாஸ் விஷயங்கள் அனைத்தையும் படத்தில் வைத்திருக்கிறார் ஏ.ஆர்.முருகதாஸ். ரஜினியைத் தங்களுடைய தலையில் தூக்கி வைத்து ரசிகர்கள் கொண்டாடுவதற்கு, இந்தப் படமும் ஒரு பங்காக அமையும். மொத்தத்தில் ரஜினியின் 'தர்பார்'தான் இந்தப் படம்.

# கவர்ச்சி காட்ட விருப்பம்....!



பாடகி ஆவதற்கு முன்பாக ஒரு கட்டத்தில் நான் கவர்ச்சி நடன மங்கை ஆகத்தான் எண்ணினேன் என ஜெனிபர் லோபஸ் தெரிவித்துள்ளார்.

பிரபல அமெரிக்க பாடகி ஜெனிபர் லோபஸ். இவர் நடிகை, நடனக் கலைஞர், ஆடை அலங்கார கலைஞர் எனப் பல முகங்களைக் கொண்டவர். இவரது பாடல்கள் இன்றைக்கும் இளைய தலைமுறையினரைக் கவர்ந்திழுப்பவையாக உள்ளன. இந்த நிலையில் பாடகியா மாறுவதற்கு முன்னர், தான் கவர்ச்சி நடனமங்கையாக இருப்பதற்கே விரும்பினேன் என்று தெரிவித்துள்ளார் லோபஸ். பாடகி ஆவதற்கு முன்பாக ஒரு கட்டத்தில் நான் கவர்ச்சி நடன மங்கை ஆகத்தான் எண்ணினேன். அந்தக் காலகட்டத்தில் என் தோழியர் பலரும் கவர்ச்சி நடன மங்கைகளாக விளங்கினர். நியூஜெர்சியில் கிளப்களில் நடனமாடி பல்லாயிரம் டொலர்கள் சம்பாதித்தனர். இதனால் எனக்கும் அந்த எண்ணம் ஏற்பட்டது - என்று செவ்வி கொடுத்துள்ளார் லோபஸ்.

நித்திய சுகம் 452

உடலே கோயில்

மருத்துவர் ந.ஸ்ரீசரவணபவானந்தன்,
குழந்தை வைத்திய நிபுணர்,
யாழ்.போதனா வைத்தியசாலை.

# பிறவிக் குறைபாட்டு நோய்கள்


பிறக்கும்போதே குழந்தைகளில் காணப்படும் உடல் கட்டமைப்பு அல்லது தொழிற்பாட்டுக் குறைபாடுகளை பிறவிக் குறைபாடுகள் என்பர். 33 குழந்தைகளுக்கு ஒரு குழந்தை பிறவிக் குறைபாட்டுடன்தான் பிறக்கின்றது என்கின்றன தரவுகள். இதன் விளைவாக ஒவ்வொரு வருடமும் 32 இலட்சம் குழந்தைகள் ஏதோவொரு அங்கவீனக் குறைபாடு உடையவர்களாக இவ்வுலகில் பிறக்கின்றனர்.

அதேபோல் ஒவ்வொரு வருடமும் பிறவிக்குறைபாட்டு நோய்களால் பிறந்து முதல் 28 நாள்களுள் ஏறத்தாழ 2 லட்சத்து 70 ஆயிரம் பச்சிளங்குழந்தைகள் இறக்கின்றனர். யாழ்.போதனா வைத்தியசாலையில் கடந்த வருட இறுதி 5 மாதங்களில் பிறந்த 2 ஆயிரத்து 700 குழந்தைகளில் 35 பேருக்கு ஏதோவொரு குறிப்பிடத்தக்க பிறவிக்குறைபாடு காணப்பட்டது. அவர்களில் 6 பேர் இறந்துள்ளனர்.

### பிறவிக்குறைபாடு ஏன் ஏற்படுகிறது?

ஏறத்தாழ அரைவாசிக்கு மேற்பட்ட பிறவிக்குறைபாடுகளுக்கு நிச்சயமான ஒரு காரணத்தைக் கூறமுடியாதுள்ளது. எனினும் கீழ்வரும் காரணங்கள் பிறவிக்குறைபாடுகளுக்கு ஏதுவாக அமைகின்றன.

1. சமூக பொருளாதார காரணிகள்
   இவை பிறவிக்குறைபாடுகளுக்கு மறைமுகமான காரணமாக அமைகின்றன. ஏறத்தாழ 94 வீதமான கடும் பிறவிக்குறைபாட்டு நோய்கள் பொருளாதார வளங்களின்றிய அல்லது இடைத்தர வளமுள்ள நாடுகளிலேயே பிறக்கின்றன.
   இந்த நாடுகளில் பெரும்பாலான தாய்மாரில் காணப்படும் ஊட்டச் சத்துக்குறைபாடுகள் பிறவிக்குறைபாட்டை உண்டு பண்ணும் இரசாயனங்களின் தாக்கம் அதிகமாக இருத்தல் மற்றும் கர்ப்பிணிப் பெண்களுக்கு நோய்க்கிருமிகள் தொற்ற வாய்ப்பு அதிகம் காணப்படல் என்பன இதற்கான காரணங்களாகும்.
2. வயதுகூடிய பெண்கள் குழந்தை பெறும்போது, மொங்கோலியன் போன்ற பிறவிக்குறைபாடுகள் அதிகமாக ஏற்படலாம்.
3. இரத்த உறவுமுறைக்குள் திருமணம் செய்தல் எமது சமூகத்தில் இன்னும் காணப்படும் மச்சான் மச்சாள் உறவு முறைத் திருமணங்களால், பிறக்கும் குழந்தைகளுக்கு சில வகையான பரம்பரைக் குறைபாட்டு நோய்கள் அதிகமாக ஏற்படலாம்.
4. குழந்தை வயிற்றுள் உள்ளபோது தாய்க்கு ஏற்படும் சிபிலிசு, றுபெல்லா போன்ற கிருமித்தொற்று நோய்களால் பிறக்கும் குழந்தைக்கு பிறவிக் குறைபாடுகள் உண்டாகலாம்.
5. கர்ப்ப காலத்தில் தாய்க்கு ஏற்படும் இரும்பு, அயடீன் போலிக் அமிலம் போன்ற சத்துக்குறைபாடுகளாலும் சலரோகம், அதிக எடை அல்லது மிகக் குறைந்த நிறை போன்றவற்றாலும் பிறவிக்குறைபாட்டுக் குழந்தைகள் பிறக்கலாம்.
6. சூழல் மாசடைதல் சூழலில் காணப்படும் பூச்சி நாசினிகள், இரசாயனப் பொருள்களால் நீர்மாசடைதல், கர்ப்பகாலத்தில் மது அருந்துதல், புகைப் பிடித்தல் சில வகையான மருந்துப் பொருள்களையும் அதிக விற்றமின் ஏ மாத்திரைகளையும் உட்கொள்ளுதல் மற்றும் கர்ப்ப வேளையில் கதிரியக்கத் தாக்கத்துக்கு உள்ளாதல் என்பன குழந்தையில் பிறவிக்குறைபாட்டை உண்டாக்கலாம்.



### எவ்வாறு தவிர்க்கலாம்?

தகுந்த பொது சுகாதார தடுப்பு முறைகளை பெண்ணொருவர் கர்ப்பமாக முன்னரும், கர்ப்ப காலத்திலும் பின்பற்றுவதன் மூலம் சில பிறவிக்குறைபாடுகளைத் தவிர்க்கலாம். மேலே கூறப்பட்ட பிறவிக்குறைபாடுகளுக்கான காரணிகள் ஒரு பெண்ணுக்கு ஏற்படாமல் தவிர்த்தால் அநேக பிறவிக் குறைபாடுகளைக் குழந்தைக்கு ஏற்படாமல் தவிர்க்க முடியும். குறிப்பாக பெண்களின் போசாக்கை மேம்படுத்துதலும், இரசாயனங்கள், மருந்துப்பொருள்கள், கதிர்வீச்சுத் தாக்கம், கிருமித் தொற்றுக்கள் என்பன கர்ப்பிணிப் பெண்களைப் பாதிக்காது பாதுகாத்தலும் முக்கியமானவையாகும். அவ்வாறே இரத்த உறவுமுறைத் திருமணங்களைத் தவிர்த்தலும், வயது கூடிய பெண்கள் கர்ப்பமாதலைத் தவிர்த்தலும் நல்லது. பெண்கள் கர்ப்பமாவதற்கு முன்னரே தகுந்த தடுப்பூசிகளை (உதாரணம் றுபெல்லா) பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் போலிக் அமில மாத்திரைகளை உட்கொள்ளுதலும் வேண்டும்.

### பிறவிக்குறைபாடுகளை எவ்வாறு கண்டறியலாம்

கீழ் வரும் மூன்று காலப் பகுதிகளிலும் தகுந்த சோதனைகள் மூலம் குழந்தைகளுக்கு ஏற்படக் கூடிய பிறவிக்குறைபாடுகளைக் கண்டறியலாம்.

1. கர்ப்பமாவதற்கு முன்னர் - ஒரு குடும்பத்தில் வேறுயாரும் பாதிக்கப்பட்டிருப்பின், பெற்றோருடைய இரத்தத்தைச் சோதிப்பதன் மூலம் அவர்களுக்குப் பிறக்கப் போகும் குழந்தைக்கு அவ்வாறான குறைபாடுகள் ஏற்படலாமா எனக் கண்டறியலாம். உதாரணமாக தலசீமியா எனும் குருதிச் சோகை நோய்க்கான காவிகளாக பெற்றோர் இருப்பின் அவர்களுக்கு பிறவிக்கும் குழந்தைக்கு அந்த நோய் இருப்பதற்கான வாய்ப்பு நான்கில் இரு பங்காகும்.
2. கர்ப்பகாலத்தில் - பிறவிக்குறைபாடுகள் ஏற்படக்கூடிய காரணிகள் காணப்பட்டால், கர்ப்ப காலத்தில் தாயின் இரத்தத்தையோ, நச்சுக் கொடியின் துண்டையோ, கர்ப்பப் பையிலுள்ள அம்னியோடித் திரவத்தையோ சோதிப்பதன் மூலமும் கர்ப்பத்தை ஸ்கான்பண்ணுவதன் மூலமும் பல பிறவிக் குறைபாடுகளை முன் கூட்டியே கண்டறியலாம்.
3. குழந்தை பிறந்த பின் - குழந்தையைச் சோதிப்பதன் மூலமும் குழந்தையின் இரத்தினதும் இழையங்களினதும் மாதிரியைச் சோதிப்பதன் மூலமும் குழந்தையை ஸ்கான் பண்ணுவதன் மூலமும் பல குறைபாடுகளை அறியலாம்.


### எவ்வாறான சிகிச்சை பெற முடியும்?

இன்றைய நவீன மருத்துவ வசதிகளின் மூலம் பல வகையான பிறவிக்-குறைபாட்டு நோய்களுக்குரிய சிகிச்சைகளைப் பெறக் கூடியதாகவுள்ளது. உதாரணமாக இருதய சத்திர சிகிச்சைகள், அங்க சீரமைப்பு சிகிச்சைகள், என்புமச்சை மாற்றுச் சிகிச்சை, ஓமோன்கள் மற்றும் நொதியப் பொருள்களை செயற்கையாக வழங்குதல், பரம்பரையலகுக்கு சிகிச்சை வழங்குதல் போன்றவற்றைக் குறிப்பிடலாம். எனவே பிறவிக் குறைபாட்டு நோய்களை முன்கூட்டியே கண்டறிவதன் மூலம், குழந்தைக்கு அதிக பாதிப்புக்கள் வரமுன்னரே உரிய சிகிச்சைகளை வழங்கலாம். உதாரணமாக பிறப்பின் போதே காணப்படும் தைரொக்சின் குறைப்பாட்டைக் கண்டறிய இன்று உலகின் பல நாடுகளிலும் பிறக்கும் எல்லாக் குழந்தைகளுக்கும் இரத்த மாதிரிசோதனை செய்யப்படுகிறது. அதன் மூலம் குறைபாடு இருப்பின் வேளைக்கே சிகிச்சை வழங்க முடியும்.

இலங்கையில் குடும்பச் சுகாதாரப் பணியகம், பிறவிக்குறைபாட்டு நோய்கள் பற்றிய பதிவுகளை மேற்கொண்டு எதிர்காலத்தில் தகுந்த தடுப்புமுறைகளையும் சோதனைகளையும் சிகிச்சை முறைகளையும் சுகாதார அமைச்சு ஊடாக நடைமுறைப்படுத்த முயற்சிக்கின்றது. எனினும் பிறவிக்குறைபாடுகள் சம்பந்தமான பல சோதனைகளை இன்னும் தனியார் ஆய்வு கூடங்களிலேயே மேற்கொள்ளக் கூடியதாகவுள்ளது. அதே போல் நவீன சிகிச்சை முறைகளை சில பிறவிக் குறைபாட்டு நோய்களுக்கு இலங்கையில் வழங்கமுடியாதுள்ளதால் பல இறப்புகள் ஏற்படுகின்றன. எனினும் வளர்ந்து வரும் மருத்துவ வசதிகள் மூலமாக எதிர்காலத்தில் இவை நிவர்த்தி செய்யப்படும் என நம்பலாம்.

**ஒவ்வொரு வருடமும் பிறவிக்குறைபாட்டு நோய்களால் பிறந்து முதல் 28 நாள்களுள் ஏறத்தாழ 2 லட்சத்து 70 ஆயிரம் பச்சிளங்குழந்தைகள் இறக்கின்றனர். யாழ். போதனா வைத்திய சாலையில் கடந்த வருட இறுதி 5 மாதங்களில் பிறந்த 2 ஆயிரத்து 700 குழந்தைகளில் 35 பேருக்கு ஏதோவொரு குறிப்பிடத்தக்க பிறவிக்குறைபாடு காணப்பட்டது. அவர்களில் 6 பேர் இறந்துள்ளனர்.**

## சொற்சிலம்பம் போட்டி இல: 603




அனுப்புபவர் பெயர்:......................................................

முழுமையான தபால் விலாசம்: ......................................

.......................................................................

கையொப்பம்:...............................................................

வாசகர்கள் மத்தியில், குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப் போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருகின்றமையால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

### இடமிருந்து வலம்

1. ஒருவரை ஒருவர் தெரிந்து பரிச்சயமாவது
4. நல்ல
6. உயரின் தொடக்கம் இங்கே
7. கூட
8. சமனாக அனைத்தையும் பேணும் பண்பியல்பு
11. கடுமையானது.
12. உணவுக் குழாயில் நடக்கும் தொழிற்பாடு
14. மணம்
16. வதந்தி
17. இளைய சகோதரன்
19. நிறப் பூச்சு
20. நடக்கும் படி ஏவுதல்
21. ஓர் ஆயுத வகை
22. அம்மா, அப்பா, பிள்ளைகள் ஒருங்கே சேர

### மேலிருந்து கீழ்

1. பதிப்பகம்
2. கடலும் ஆறும் கலக்கும் இடம்
3. எண்ணிக்கொள்
4. சுருதி
5. டாம்பீகம்
7. ஓர் அடுப்படிக் கருவி
9. தாய் குழந்தையை வைத்துத் தாலாட்டுவது
10. கைக்கொள்ளுதல்
13. கால்
15. தடிமன் வர இது வரும்
16. சூறாவளி
17. கண்ணி
18. சவம்
19. திறப்பு
20. மத்தி

**சொற்சிலம்பம் போட்டி இலக்கம் 601 இற்கான சரியான விடைகள் வருமாறு:**

இடமிருந்து வலம்

(1) அங்கவீனர் (5 சதி (6)சாடு (7)வாதிடு(11)தசை (12)சாரி (14) பூமாரி (16)இல் (17) சுமார் (18) [illegible]கலு (20) தேகம் 21)பற (22)கண்விழி (23) அரவு

மேலிருந்து கீழ்

(1) அபவாதம் (2)கசடு (3) வீதி (4)வீடு (6) சாலை (8) திசை (9)பூசாரி (10)மாரி (13) வல்லுறவு (14) பூமாதேவி (15)மார்கழி (16) இகபர (19) ஏக

### பாராட்டுப் பெறுவோர்

| | | |
|---|---|---|
| தா.ஸ்ரீதரன்,<br>சுழிபுரம்மேற்கு,<br>சுழிபுரம். | பி.டிலக்சன்,<br>கண்ணகி அம்மன்<br>கோவிலடி, வட்டு மேற்கு,<br>வட்டுக்கோட்டை. | ஞா.இம்மனுவல்,<br>இல.85/4 கார்மல்<br>வீதி,குருநகர்,<br>யாழ்ப்பாணம். |

**சொற்சிலம்பம் போட்டி 601 இல் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.**

போட்டிகளில் வெற்றியீட்டியவர்களாக அறிவிக்கப்பட்டு, இதுவரை தமக்கான பரிசுக் காசோலைகள் கிடைக்கப்பெறாதவர்கள் வார நாள்களில் உதயன் அலுவலக நிதிப் பிரிவில், போட்டிக் கூப்பன்களில் தாம் குறிப்பிட்ட தமது பெயர், வதிவிட விவரங்களை உறுதிப்படுத்தி, தமக்கான கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ள இயலும். போட்டியில் கலந்துகொள்வோர் தத்தமது சரியான, முழுமையான தபால் விலாசத்தையும் குறிப்பிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

## போட்டி விதிகள்

- வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில்கலந்து கொள்ளலாம்.
- ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்.
- உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
- போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
- வெற்றிபெறும்முதல்ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே

**ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/=**

பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.

**சொற்சிலம்பம் போட்டி இல.603**

பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள் நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், (22.01.2020 ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத் தக்கதாக, தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

சொற்சிலம்பம் போட்டி இல.603 இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 26.01.2020 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

**சொற்சிலம்பம் போட்டி இலக்கம்:** 601 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**
சி.இராசரத்தினம்,
பூம்பொழிதல், திருநகர் தெற்கு,
கிளிநொச்சி.


**2 ஆம் பரிசு**
ந.ஜெயகணேசன்,
பண்டித்தாழ்வு,
காரைநகர்.

**3 ஆம் பரிசு**
திருமதி த.ஜெயந்தி,
மல்வம், உடுவில்,
சுன்னாகம்.

**4 ஆம் பரிசு**
க.சரவணபவன்,
நுணாவில் மத்தி,
சாவகச்சேரி.

**5 ஆம் பரிசு**
இ.ஜீவகுமார்,
அரைக்கும் ஆலை, (மில்)
பண்டத்தரிப்பு.

# சிறுபான்மையினரை இலக்கு வைக்கும்...



(14ஆம் பக்கத் தொடர்ச்சி)

முன்னாள் ஜனாதிபதி, சிங்களவர்கள் மரங்களெனவும் ஏனையோர் மரத்தைச் சுற்றிப் படரும் கொடிகள் எனவும் கூறியதை இப்பிரகடனம் நினைவுபடுத்துவதை அவதானிக்க முடியும்.

கோத்தாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பதவியேற்றதும் பொதுபலசேனவின் பொதுச் செயலர் ஞானசாரதேரர் அரசியலிலிருந்து ஓய்வுபெறப் போகிறார் எனத் தெரிவித்திருந்தார். சிங்கள பௌத்த ஆட்சி இலங்கையில் ஏற்படுத்தப்பட்டு விட்டதெனவும் அதன் காரணமாக தங்கள் இலட்சியம் நிறைவேறி விட்டதாகவும் இனி தாங்கள் அரசியலில் ஈடுபட வேண்டிய தேவை இல்லை.எனவும் அவர் தெரிவித்திருந்தார்.

பள்ளிவாசல்கள் தகர்ப்பு, முஸ்லிம் வர்த்தக நிலையங்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள், அளுத்கம தர்க்கா நகர் ஆகிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட வன்முறைகள் என்பவற்றை வழிநடத்தியவர் ஞானசாரதேரராவார். தற்சமயம் கோத்தாபய ராஜபக்ஷ ஜனாதிபதியானதும் தங்கள் இலட்சியம் நிறைவேறிவிட்டதாகவும் இனி ஓய்வுபெறப் போகிறேன் எனவும் அவர் வெளியிட்ட கருத்தின் அடிப்படையில் பார்க்கும் போது இவரின் தலைமையில் மேற்கொள்ளப்பட்ட முஸ்லிம்களுக் கெதிரான வன்முறைகள் கோத்தாவை வெல்லவைக்கவா மேற்கொள்ளப்பட்டன என்ற கேள்வி எழுகிறது. இதே போன்று இரா வண பலய இயக்கமும் சிங்கள பௌத்த ஆட்சி ஏற்பட்டு விட்டது எனவும் தாங்கள் அரசியலிலிருந்து ஒதுங்கப் போகிறோம் எனவும் தெரிவித்துள்ளது.

மேலும் அஸ்கிரிய மதபீடத்தின் பதிவாளர் மெத்தகம தர்மானந்த தேரர் பௌத்தத்தையும் சிங்களத்தையும் பாதுகாக்கும் ஆட்சி ஏற்பட்டு விட்டதாகவும் இனி தேரர்கள் தேர்தல்களில் போட்டியிடக் கூடாது எனவும் அரசியல் கட்சிகள் அவர்களுக்கு வேட்பாளர் அனுமதி வழங்கக் கூடாது எனவும் கேட்டுக் கொண்டுள்ளார்.

சிங்கள- பௌத்த இனவாத வன்முறை அமைப்புக்கள் கோத்தாபய ராஜபக்ஷவின் ஆட்சி தொடர்பாகப் பூரண திருப்தி தெரிவித்ததன் மூலம் அந்த அமைப்புக்கள் மேற்கொண்ட சிறுபான்மையினர் மீதான வன்முறை ஒடுக்குமுறை நடவடிக்கைகளை அரசே பொறுப்பேற்றம் செய்யப் போகிற்தா என்ற அச்சம் எழுவது தவிர்க்க முடியாமலுள்ளது.

இப்படியர்ன நிலையில் ஜனாதிபதி குறுகிய அரசியல் நோக்கத்தில் முன்னெடுத்த அரசியலைக் கைவிட்டு மக்களிடையே பேதங்களை விதைப்பதைக் கைவிட்டு நாட்டைக் கட்டியெழுப்பும் பணியில் ஒன்றிணையுமாறு அழைப்பு விடுத்துள்ளார். உரிமைக்கான கோரிக்கைகளை இனவாதம் எனவும் நியாயபூர்வமான அதிகாரப் பகிர்வைப் பிரிவினை வாதம் எனவும் ஒடுக்குமுறைக்கு எதிரான முயற்சிகளைப் பயங்கரவாதம் எனவும் கூறி சிறுபான்மை மக்களை இலக்கு வைத்து, இந்த நாட்டின் உரிமைகள் பறிக்கப்பட்ட அடிமை மக்களாக ஒடுக்குமுறைகள் மேற்கொள்ளப்படும் நிலையில் நாட்டைக் கட்டியெழுப்பி ஒன்றிணைய முடியுமா?.

அதிகாரத்தைப் பெறவும் அதைத் தக்கவைக்கவும் பேரினவாதத்தை முன்னெடுப்பதே ஒரேவழி என்பது நிலைக்கும் வரை சமாதானமான சுபிட்சமான இலங்கை என்பது சாத்தியப்படாத கனவாகவே இருக்கும்.

# எழுத்தாளர்களின் பாதுகாவலர் புனித பிரான்சிஸ் டி சேல்ஸ்

அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை
*ஊடக வருகை விரிவுரையாளர், இலங்கை திறந்த பல்கலைக்கழகம்*

புனித பிரான்சிஸ் டி சேல்ஸ் (1567 - 1622) ஜெனீவா நகரின் முன்னாள் ஆயரும் உரோமன் கத்தோலிக்க திருச்சபையின் புனிதரும் ஆவார். 1923ஆம் ஆண்டில் திருத்தந்தை ஒன்பதாம் பயஸ் இவரை எழுத்தாளர்களுக்கும் செய்தியாளர்களுக்கும் பாதுகாவலராக அறிவித்தார். புனித பிரான்சிஸ் டி சேல்ஸின் பெருவிழா எதிர்வரும் 24ஆம் திகதியன்று கொண்டாடப்படும் நிலையில் அவரின் வாழ்வும் பணியும் பற்றி இவ்வாக்கம் பேசுகிறது.

புனித டொன் பொஸ்கோ 1859ஆம் ஆண்டில் தான் துவங்கிய சபையை புனித பிரான்சிஸ் டி சேல்ஸின் பாதுகாவலில் வைத்து சலேசியர்கள் எனப் பெயர் சூட்டினார். புனித டொன் பொஸ்கோவின் பெருவிழா ஜனவரி 31ஆம் திகதியன்று கொண்டாடப்படும். எனவே இவ்வாக்கத்தின் இரண்டாம் பகுதி புனித டொன் பொஸ்கோ பற்றியும் பேசுகிறது.

புனித பிரான்சிஸ் டி சேல்ஸ் சீர்திருத்தத் திருச்சபையினரை மீண்டும் கத்தோலிக்க திருச்சபையோடு சேர்க்க அரும்பாடுபட்டார். இவர் ஒரு சிறந்த மறைசொற்பொழிவாளர். 1597ஆம் ஆண்டில் பிரான்ஸ் நாட்டில் உள்ள சாவாய் குடும்பத்தில் புனித பிரான்சிஸ் பிறந்தார். 1583ஆம் ஆண்டு பரிஸ் நகரில் மேற்கல்வி கற்க சென்றபோது அங்கே மனிதனின் முடிவைக் குறித்த விவாதத்தில் ஈடுபட்டார். 1587ஆம் ஆண்டில் தெற்கு பிரான்ஸில் உள்ள ஆலயம் ஒன்றுக்குத் திருப்பயணம் மேற்கொண்டார். அங்கே கடவுளுக்கு தன் வாழ்வினை அர்ப்பணிக்க முடிவு செய்து அவர் காட்டும் பாதையில் செல்ல தீர்மானித்தார்.

### பதுவா பல்கலைக்கழகத்தில் இறையியல் பட்டம் பெற்றார்

1592ஆம் ஆண்டில் சட்டம் மற்றும் இறையியல் துறைகளில் முனைவர் பட்டத்தை பதுவா பல்கலைக்கழகத்தில் பெற்றார். இங்கேதான் தனக்கு இறை அழைத்தல் இருப்பதாக முதன் முதலில் உணர்ந்தார். படிப்பு முடிந்ததும் உடனே வீடு திரும்பாமல் லார்த்தோ இத்தாலியில் உள்ள மரிஅன்னை திருத்தளத்திற்கு திருப்பயணம் சென்றார். மனித நேயம் சொல்லாட்சிக் கலை இறையியல் மற்றும் சட்டம் படித்தப் பின்னர் தன் தந்தை பார்த்து வைத்திருந்த செல்வந்தக் குடும்பப் பெண்ணை மணக்காமல் குருவாக மாறத் தீர்மானித்தார். அப்போதய ஜெனீவா நகர ஆயரின் அழைப்பை ஏற்று குருமடத் தில் சேர்ந்து குருவாகி அம்மறை மாவட்ட பேராலயத்தில் 1593ஆம் ஆண்டில் பணிபுரிந்தார்.

### ஜெனீவா அருட்பொழிவு

1517ஆம் ஆண்டில் கிறித்தவச் சீர்திருத்த இயக்கம் ஆரம்பமானதிலிருந்து சுவிற்சர்லாந்தில் உள்ள ஜெனீவா நகரின் கத்தோலிக்க ஆயர்கள் பிரான்ஸில் உள்ள அன்னெசி என்னும் இடத்தில் தங்கியிருந்தனர். புனித பிரான்சிஸ் டி சேல்ஸ் பேராலயத்தில் பணிசெய்து கொண்டுருந்ததால் சவாய் நகரில் இருந்த சீர்திருத்தத் திருச்சபையினரிடம் மறை பரப்பலானார். இவரின் முயற்சியால் பலரும் கத்தோலிக்கத்திற்கு திரும்பலாயினர்.

இவர் உரோம் நகரம் மற்றும் பாரிஸ் நகருக்கு பயணம் செய்து திருத்தந்தை எட்டாம் கிளமெண்ட் மற்றும் பிரெஞ்சு அரசன் ஆறாம் ஹென்றியும் உடன்பாடு செய்ய வைத்தார். 1602ஆம் ஆண்டில் ஜெனீவா ஆயரின் இறப்புக்குப் பின் புனித பிரான்சிஸ் டி சேல்ஸ் புதிய ஆயராக அருட்பொழிவு செய்யப்பட்டார். இவரின் ஆயத்துவ பணியின் போது எல்லோரும் இவரை சிறந்த மறையுரையாளராகவும் ஏழை எளியவரின் நண்பராகவும் கண்டனர். இவரின் புத்தகங்களில் இவரின் பிரெஞ்சு மொழி, இத்தாலிய மொழி மற்றும் இலத்தீன் மொழியின் ஆற்றல் வெளிப்பட்டது. 1610ஆம் ஆண்டில் புனித ஜோன் பிரான்சிஸ் டி சன்டாலேடு சேர்ந்து மாதா மினவுதல் சபை என்னும் பெயரில் பெண்களுக்கான துறவற சபையினை துவக்கினார். அவர் 28 டிசம்பர் 1622ஆம் ஆண்டில் லியோன் பிரான்சில் இறந்தார். திருத்தந்தை ஏழாம் அலெக்சாண்டர் புனித பிரான்சிஸ் டி சேல்ஸ்க்கு 1661ஆம் ஆண்டில் அருளாளர் பட்டமும் மூன்று வருடத்துக்கு பின் புனிதர் பட்டமும் அளித்தார். 1877ஆம் ஆண்டில் திருத்தந்தை ஒன்பதாம் பயஸ் இவருக்கு மறைவல்லுநர் பட்டம் வழங்கினார். அன்னெசி நகரில் உள்ள மரியாள் எலிசபெத்தை சந்தித்ததன் நினைவாக உள்ள பேராலயத்தில் இவரின் கல்லறை உள்ளது. பல புதுமைகள் அங்கே நிகழ்கின்றன எனக் கூறப்படுகின்றது. இவரின் விழா நாள் ஜனவரி 24 ஆகும்.

### எழுத்தாளர்களுக்கும் செய்தியாளர்களுக்கும்

பாதுகாவலர் 1923ஆம் ஆண்டில் திருத்தந்தை ஒன்பதாம் பயஸ் இவரை எழுத்தாளர்களுக்கும் செய்தியாளர்களுக்கும் பாதுகாவலராக அறிவித்தார். இவர் காது கேளாதவர்களுக்கு மறைக்கல்வி போதிக்கும் வழிவகைகளை கண்டு பிடித்ததினால் இவரை செவிப்புலன் அற்றோருக்கும் பாதுகாவலராக கொள்வர்.

### புனித பிரான்சிஸ் டி சேல்ஸை பாதுகாவலில் வைத்த சலேசிய சபை

புனித டொன் பொஸ்கோவின் சலேசிய சபை அல்லது சலேசியன் சபை அதிகாரப்பூர்வமாக ஏற்கப்பட்டதன்படி புனித பிரான்சிஸ் டி சேல்ஸின் சபை என்பது கத்தோலிக்க திருச்சபையின் துறவறச் சபையாகும். பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் புனித டொன் பொஸ்கோ தொழிற்புரட்சியின்போது பாதிக்கப்பட்ட இளையோர் மற்றும் ஏழைக் குழந்தைகளுக்கு உதவும் நோக்குடன் இச்சபையினைத் தொடங்கினார். ஜெனீவா நகரின் ஆயராக இருந்த புனித பிரான்சிஸ் டி சேல்ஸின் பெயரால் இச்சபையினை சலேசிய சபை என அவர் அழைத்தார். அவரின் இறப்புக்குப்பின்பு இதன் பெயர் ஜொன் பொஸ்கோவின் சலேசியன் சபை என மாற்றப்பட்டது. இச்சபையின் குறிக்கோளுரை ஆன்மாக்களை எனக்குத் தாரும் மற்ற எல்லாவற்றையும் எடுத்துக்கொள்ளும் என்பதாகும்.



புனித டொன் பொஸ்கோ 1859ஆம் ஆண்டில் தான் துவங்கிய சபையை இவரின் பாதுகாவலில் வைத்து சலேசியர்கள் எனப் பெயர் சூட்டினார். டொன் போஸ்கோ இத்தாலியில்கஸ்ட்டல்நுவோ எனும் நகரில் ஓர் ஏழை விவசாய குடும்பத்தில் பிரான்செஸ்கோ பொஸ்கோ, மார்கரட் ஒச்சீனா ஆகியோருக்கு இளைய மகனாகப் பிறந்தார். சிறு வயதிலேயே பெற்றோர் ஒழுக்கத்தையும் ஆன்மிகத்தையும் இவர் பால் விதைத்தனர். இளம் வயதிலேயே ஆன்மிகத்தில் நாட்டம் கொண்டவராக விளங்கினார்.

தனது ஒன்பதாவது வயதில் அவர் கண்ட கனவினால் உந்தப்பட்டு தான் ஒரு குருவாவது என முடிவெடுத்தார். சிறைச்சாலைகள் தோறும் நிரம்பியிருந்த இளைஞர்களை சந்தித்து மனம் வெதும்பினார். இவர்கள் சிறு தவறுகளுக்காக இங்கு தண்டனை அனுபவிக்கின்றனர். இவர்களுக்கு உண்மையான நல்ல நண்பர்கள் கிடைத்திருந்தால் இவர்கள் சிறை வந்திருக்கமாட்டார்கள் என அறிந்து அவர்களுக்கு உணவு தங்குமிட வசதி செய்து கொடுத்து ஒன்று சேர்த்தார். அவர்களுக்கு கைத்தொழில்களைக் கற்றுக் கொடுத்தார்.

புனித பிரான்சிஸ் டி சேல்ஸின் ஆன்மிகம் மற்றும் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு தான் துவங்கிய ஆண்களுக்கான துறவற சபையினை அவரின் பெயராலேயே சலேசிய சபை என்று பெயர் வைத்தார். புனித மரிய மசரெல்லோவோடு இணைந்து பெண்களுக்கென கிறிஸ்தவர்களின் சகாய அன்னையின் புதல்வியர் என்னும் துறவற சபையினைத் துவங்கினார். 1876ஆம் ஆண்டில் பொது நிலையினருக்காக சலேசிய உடன் உழைப்பாளர்கள் என்னும் சபையினைத் துவங்கினார். இந்த மூன்று சபையினரின் நோக்கமும் ஏழைகளுக்கு பணிபுரிவதே ஆகும்.

1875ஆம் ஆண்டில் இவர் தன் சபையில் இருந்த அனைவருக்கும் சலேசிய சுற்று மடலை முதன் முதலில் எழுதினார். அன்றிலிருந்து இன்று வரை வெளிவரும் இச்சுற்று மடல் தற்போது ஐம்பதுக்கும் மேலான பதிப்புகளில் முப்பது மொழிகளில் வெளிவருகின்றது. 1988ஆம் ஆண்டில் இவரது இறப்பின் நூற்றாண்டு நிகழ்வின் போது திருத்தந்தை இரண்டாம் ஜோன் போல் டொன் பொஸ்கோவை இவர் இளைஞர்களின் தந்தை, ஆசிரியர் மற்றும் நண்பர் எனப் பிரகடனம் செய்தார்.

இவர் நிறுவிய சபைகள் உலகம் முழுதும் பரவி, உலகின் பல நாடுகளிலும் சுமார் 2000க்கும் மேலான விடுதிகள், அநாதை இல்லங்கள், பள்ளிகள், விளையாட்டுக் குழுக்கள், சிறுவர்களுக்கான பொழுதுபோக்கு மையங்கள், விளையாட்டுப் பயிற்சி மையங்கள் இச்சபையினரால் ஏழைகளுக்கென நடத்தப்பட்டு வருகின்றன. டொன் பொஸ்கோவிற்கு பதினொன்றாம் பயஸ் 1934ஆம் ஆண்டில் புனிதர் பட்டம் அளித்தார்.

டொன் பொஸ்கோ ஓர் இத்தாலிய உரோமன் கத்தோலிக்கக் குருவும் கல்வியாளரும் 19ஆம் நூற்றாண்டின் எழுத்தாளரும் ஆவார். இவர் தன் வாழ்நாளெல்லாம் ஏழை எளியவர்களின் பிள்ளைகளுக்கும் தெருவில் அலைந்து திரிந்த இளையோரின் முன்னேற்றத்திற்கும் உழைத்தார். இவர் இத்தகையோரின் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்தார். தண்டனை சார்ந்த கல்வி முறையை விடுத்து அன்பு சார்ந்த கல்வி முறையைப் பின்பற்றினார்.

### இலங்கையில் டொன் பொஸ்கோ

புனிதர் டொன் பொஸ்கோவின் பெயரில் பாடசாலைகள் இலங்கையின் பல பாகங்களிலும் அமைக்கப்பட்டுள்ளன. மலையகத்தில் ஹட்டன் நகரில் 1934ஆம் ஆண்டு புனித டொன் பொஸ்கோ ஆண்கள் கல்லூரி அமைக்கப்பட்டது. புனித ஜோன் பொஸ்கோவின் பிறப்பின் 200ஆவது ஆண்டு நினைவு விழா 2015ஆம் ஆண்டில் கொண்டாடப்படுவதை முன்னிட்டு மெழுகினால் உருவாக்கப்பட்ட அவரது உருவச்சிலையில் உள்வைக்கப்பட்டுள்ள அர்ச்சிட்ட பண்டமான அவரது வலது கரம் ஒரு திருப்பயணமாக உலகை சுற்றி வருகின்றது.



# எங்கள் பாட்டி

பாட்டி எங்கள் பாட்டி - எல்லாப்
பல்லும் போன பாட்டி.
கேட்கக் கேட்கக் கதைகள் - இன்னும்
கேட்கச் செய்யும் பாட்டி.

கடினமான பண்டம் - அதைக்
கடிக்கத் தெரியாப் பாட்டி.
படிப்பே யில்லாப் பாட்டி - ஆனால்,
பலவுங் கற்ற பாட்டி.

விடுகதைகள் போட்டே - என்னை
விழிக்க வைக்கும் பாட்டி.
குடுகுடுவயதாச்சு - கையில்
கோல்பிடிக்கும் பாட்டி.

அப்பா அடித்துப் போட்டால் - என்னை
அணைத்துத் தேற்றும் பாட்டி.
தப்போ, தவறோ செய்தால் - என்னைத்
தடுத்துத் திருத்தும் பாட்டி.

சாய்ந்து மடியில் படுத்தால் - என்னைத்
தட்டிக் கொடுக்கும் பாட்டி.
நோய்கள் ஏதும் வந்தால் - அதை
நொடியில் போக்கும் பாட்டி.

யாருங் காட்டா அன்பை - என்றும்
எனக்கு காட்டும் பாட்டி.
நூறு, நூறு ஆண்டு - இன்னும்
நூறு ஆண்டு வாழ்க!

- அழ. வள்ளியப்பா

# தன்வினை!

கண்ணனும், பாலுவும் ஒரே வகுப்பில் படித்தனர். வசதியான குடும்பத்தில் பிறந்தவன் கண்ணன். படிப்பிலோ, விளையாட்டிலோ அக்கறை காட்ட மாட்டான்; பணத்தை வைத்து எதையும் சாதிக்கலாம் என்ற மனநிலை உள்ளவன்.

பாலுவோ, ஏழைத் தொழிலாளியின் மகன்; பெற்றோர் படும் கஷ்டங்களை உணர்ந்தவன். நன்கு படித்து, நல்ல பணியில் அமர்ந்து, வயதான காலத்தில் பெற்றோரைப் பாதுகாக்க வேண்டும் என்ற சிந்தனை உள்ளவன். படிப்பு, விளையாட்டு என, பலகலைகளிலும் முதல் மாணவனாக விளங்கினான்.

இதைக்கண்டு, கடும் வெறுப்பை உமிழ்ந்தான் கண்ணன். பாலுவின் ஏழ்மையைச் சுட்டிக்காட்டியதுடன், மட்டம் தட்டி பேசி மகிழ்ச்சி அடைந்தான். அதை எல்லாம் ஒரு பொருட்டாக எடுக்காமல் சகித்துக் கொண்டான் பாலு.

பள்ளியில், விளையாட்டு விழாவுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது; கண்ணனுக்கு அதில் ஆர்வம் இல்லை என்றாலும், சூழ்ச்சியால் பாலுவைத் தோற்கடிக்க, ஓட்டப் பந்தயத்தில் சேர்ந்தான். அதில், ஆறு பேர் இடம் பெற்றிருந்தனர். போட்டியின் முதல் நாள், ஓடு பாதையை அடையாளப்படுத்தும் விதமாக, சுண்ணாம்புப் பொடியால் கோடுகள் போட்டு, தயார்ப் படுத்தினர். உரிய வரிசை எண்களையும் எழுதினர். பாலுவின் ஓடுதள எண் ஐந்து; கண்ணனுக்கு ஆறு.

அன்று பள்ளி முடிந்து, அனைவரும் சென்றுவிட்டனர். யாரும் பார்க்காத வேளையில் விளையாட்டு மைதானத்திற்கு சென்றான் கண்ணன். ஓடுதளப் பாதையைக் கவனித்தான். பாலு ஓட வேண்டிய பாதையில், சில இடங்களில் குழி பறித்து, முட்களைப் புதைத்தான். அதன் மீது மண்ணைத் தூவி, அடையாளம் தெரியாதபடி செய்தான். "எப்படியும், பாலுவின் காலில் முள்குத்தி காயம் ஏற்படுத்தும். அந்த வலியால் ஓட முடியாமல் போட்டியில் தோற்பது உறுதி" என, எண்ணி வீட்டிற்குச் சென்றான் கண்ணன்.

மறுநாள் விளையாட்டுப் போட்டிகள் துவங்கின. மிகவும் உற்சாகமாகக் காணப்பட்டான் கண்ணன். பந்தயத்தில் கலந்து கொள்ளவிருந்த, ஆறு பேரில் ஒருவன், உடல் நலமின்மையால் பங்கேற்க வரவில்லை. எனவே,"ஐந்து ஓடுதளங்களை மட்டும் தயார் செய்தால் போதும்..." எனக் கூறினார் ஆசிரியர்.



அதன்படி, பாலு நான்காவது தளத்திலும், கண்ணன், ஐந்தாவது தளத்திலும் ஓட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இந்த திடீர் மாற்றத்தால், என்ன செய்வதென்று தெரியாமல் திகைத்தான் கண்ணன்.

"பாலுவைத் தோற்கடிக்கச் செய்த சூழ்ச்சியில், தானே மாட்டிக் கொள்வோம்" என்று, அவன் சற்றும் எதிர்பார்க்கவில்லை. முட்களைப் புதைத்த இடங்களைக் கண்டுபிடிக்க முயன்றான். பதற்றத்தால் எதுவும் சரியாகப் புலப்படவில்லை. செய்வதறியாது திணறி நின்றான்.

பந்தயம் ஆரம்பமானது; வேறு வழியின்றி ஓடினான் கண்ணன். ஓடு தளத்தில் முள் புதைந்திருந்த பகுதியில் காலை ஊன்றியவுடன், 'ஐயோ அம்மா...' என்று கத்தியபடியே விழுந்தான். பாதத்தில் முள் குத்தியதால், இரத்தம் வழிந்தது; முட்டியில் அடிப்பட்டு எலும்பு முறிவு ஏற்பட்டது.

உடனே, மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றனர். அங்கு, உள்ளங்காலில் தைத்திருந்த முள்ளை அகற்றியதுடன், பெரிய கட்டும் போட்டனர்; வலியால் துடித்து அலறினான் கண்ணன்.

போட்டியில், முதலாவதாக வந்து பரிசு பெற்ற பாலு, அன்று மாலை மருத்துவமனைக்குச் சென்றான். கண்ணனைச் சந்தித்து ஆறுதல் கூறினான்.

"நல்ல குணம் படைத்த பாலுவுக்கு, பெரிய தீங்கு செய்ய இருந்தோம்" என்று புலம்பி வருந்தினான் கண்ணன். தான் செய்த கேடு, தனக்கே வந்ததை எண்ணி அழுதான். தவறை உணர்ந்து மனம் திருந்தினான்.

**திறமையை வளர்த்து முன்னேற முயற்சி செய்ய வேண்டும். பிறர் திறமை மீது பொறாமைப்பட்டால், தீய எண்ணம் தான் மனதில் குடியேறும்.**

# விடுகதை


1. அள்ள முடியும்; ஆனால் கிள்ள முடியாது அது என்ன?
2. அள்ளவும் முடியாது; கிள்ளவும் முடியாது அது என்ன?
3. ஒல்லியான மனிதனுக்கு ஒரே காது அது என்ன?
4. உருவமில்லாதவன் சொன்னதைத் திருப்பிச் சொல்வான் அவன் யார்?
5. ஐந்து வீட்டுக்கு ஒரு முற்றம் அது என்ன?
6. தட்டச் சீறும் அது என்ன?
7. காற்றைக் குடித்து காற்றில் பறப்பான், அவன் யார்?
8. வால் உள்ள பையன், காற்றில் பறக்கிறான் அது என்ன ?
9. வாயைப் பிளந்து வீதியோரங்களில் நிற்பான் அவன் யார் ?
10. எட்டாத ராணி இரவில் வருவாள். பகலில் மறைவாள் அவள் யார் ?

## விடை

1. தண்ணீர்
2. காற்று
3. ஊசி
4. எதிரொலி
5. உள்ளங்கையும் விரல்களும்
6. தீக்குச்சி
7. பலூன்
8. பட்டம்
9. தபாற் பெட்டி
10. நிலா



# வரைந்து பழகுவோம்



# சிலந்தி



பொதுவாக சிலந்தி என்றதும், சிலந்தி வலை தான். நமது நினைவுக்கு வரும். சிலந்தி வாழ்வதற்காக கட்டப்படுவதே சிலந்தி வலையாகும். சிலந்தியின் வாயில் இருந்து வரும் எச்சிலைக் கொண்டு இந்த வலை பின்னப்படுகின்றது.

இந்த வலையில் வந்து விழும் பூச்சிகளை இரையாகக் கொண்டு சிலந்தி வாழ்கின்றது. வலையின் ஆயுள்காலம் முடிந்து அது பழையதாகும் போது அந்த வலையை விட்டு விட்டு வேறொரு வலையைப் பின்னத் தொடங்குகிறது சிலந்தி.

பொதுவாக சிலந்தி பூச்சி இனத்தைச் சேர்ந்தது. தனியாகக் கூடு கட்டி வாழும் வகையும், கோடு போட்ட சிலந்தி என்றும், சிறிய சிலந்தி என்றும் பல வகைகள் சிலந்தியில் உள்ளன.

ஆர்ப் வீவர் என்ற கோடு போட்ட ஒரு வகை சிறிய சிலந்தி கூட்டமாகச் சேர்ந்து கூடு கட்டுகின்றன. இந்த வகைச் சிலந்திகள் ஆபிரிக்காவிலுள்ள மழைக் காடுகளில்தான் அதிகமாகக் காணப்படுகின்றன.

அளவில் சிறியதாக இருந்தாலும் காடுகளில் இரண்டு மரங்களை இணைப்பது போன்றும், கிளைகளை இணைத்தும் பல மீற்றர் நீளம் கொண்ட வலையைப் பின்னும்.

இந்த வலை துணியை வலையாக விரித்தது போன்று காணப்படும். வலையில் வந்து விழும் பூச்சிகளை சிலந்தி எளிதில் பிடித்து உண்ணும்.

இந்தச் சிலந்தியின், வலை, எளிதில் அழிந்து போகாது. மழை, காற்று மற்றும் எந்த விலங்குகளாலும் சேதம் ஏற்பட்டுவிட்டால், உடனடியாகப் பல சிலந்திகள் கூட்டாகச் சென்று வேலை செய்து வலையைச் சரி செய்கின்றன.

வலையில் வந்து விழும் உணவை எல்லாச் சிலந்திகளும் பகிர்ந்து உண்ணும். பெண் சிலந்திகள் வேட்டையாடுவது மற்றும் வலையில் உள்ள சிலந்திகளின் பாதுகாப்பில் கவனம் செலுத்திவரும்.

# கோத்தபாய அரசுக்கே சு.க. ஆதரவு வழங்கும்

## மைத்திரிபால தெரிவிப்பு



*கொழும்பு, ஜன.12*

**ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசு எதிர்வரும் பொதுத் தேர்தலில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றுக் கொள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சி முழுமையான ஆதரவை வழங்கும் என்று அந்தக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.**

களுத்துறைப் பிரதேசத்தில் நடந்த மக்கள் சந்திப்பொன்றில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

நாட்டுக்குப் புதிய பயணமொன்று அவசியம் என்பதற்காக கடந்த நவம்பர் 16ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவுக்கு ஆதரவு வழங்கியிருந்தோம். அதேபோன்று பொதுஜன பெரமுனவுடன் கூட்டணி யொன்றையும் சு.க ஏற்படுத்திக் கொண்டது.

ஜனாதிபதித் தேர்தலை போன்றே பொதுத் தேர்தலில் ஜனாதிபதியை நாம் வலுப்படுத்துவோம். மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பெறுவதற்காக சுதந்திரக் கட்சி அர்ப்பணிப்புடன் செயற்படும்.

எமது நாட்டுக்கு புதிய பயணமொன்று அவசியமாகும். அதற்காக ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவை வலுப்படுத்த அனை வரும் பொதுத் தேர்தலில் கைக்கோர்க்க வேண்டும்-என்றார்.(எ-24)

## கிளிநொச்சி நூலக பரிசளிப்பு நிகழ்வு

*கிளிநொச்சி, ஜன.12*

கரைச்சி பிரதேச சபையின் கிளிநொச்சி நூலக பரிசளிப்பு விழா, கூட்டுறவுக் கலாசார மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது.

நிகழ்வில் நேர்மைக்கான விருது பெற்ற மருத்துவர் மருத்துவக் கலாநிதி சத்திய மூர்த்தி, நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரனால் சிறப்பு விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து சர்வதேச மற்றும் தேசிய விருதுகளைப் பெற்ற கலைஞர்கள், எழுத்தாளர்கள் உள்ளிட்ட 50 பேர் வரை கௌரவிக்கப்பட்டனர். அத்துடன் வாசிப்பு மாதப் போட்டியில் பங்குபற்றி வெற்றிபெற்ற மாணவர்களுக்குப் பரிசுகளும், வெற்றி கிண்ணங்களும் வழங்கப்பட்டன.

"பல ஆற்றல்களை வெளிப்படுத்தக்கூடிய பலரை இந்த மண் எமக்குத் தந்துள்ளது. எமது தேசிய இனம் சார்ந்தவர்கள் இன்று மீண்டும் தமக்கான பல சிறப்பம்சங்களை வெளிப்படுத்த ஆரம்பித்துள்ளனர். இவ்வாறு மீள எழுந்து வரும் எம்மினத்தில் தற்போது காணப்படும் நிலைக்கு ஒற்றுமை வலுச்சேர்க்கும். எமக்குள் காணப்படுவது சகோதர பிரிவுகளே.

அதனைத் தாண்டி நாங்கள் அனைவரும் ஒன்றாக இணைந்து செயற்பட வேண்டிய காலத்தில் தற்போது நிற்கின்றோம். என்று நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் நிகழ்வில் உரையாற்றி போது தெரிவித்தார்.

"மாணவர்கள் வாசிப்பு பழக்கத்தை அதிகமாகப் பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும். வாசிப்பு பழக்கத்தை அதிகரிக்கும் போது பல சாதனைகளை மேற்கொள்வதற்கு அது உந்து சக்தியாக அமையும்" என்று மருத்துவக் கலாநிதி சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

கரைச்சி பிரதேச சபைத் தவிசாளர் அ.வேழமாலிகிதன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பி னர் சி.சிறிதரன், அதிசிறப்பு விருந்தினர் மருத்துவக் கலாநிதி சத்தியமூர்த்தி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (க-6)

## அசர்பைஜான் தீ விபத்தில் இலங்கை மாணவிகள் சாவு

*கொழும்பு, ஜன.12*

அசர்பைஜான் குடியரசின் பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டப் படிப்பை மேற்கொள்ளச்சென்ற இலங்கையை சேர்ந்த மூன்று மாணவிகள் தீ விபத்தில் உயிரிழந்துள்ளனர்.

அசர்பைஜான் குடியரசின் வெஸ்டர்ன் காஸ்பியன் பல்கலைக்கழகத்தில் ஆங்கில மொழி பாடநெறியில் பயின்ற மூன்று இலங்கை மாணவிகளே கடந்த வியாழக்கிழமை இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

அசர்பைஜான் பாகு என்ற இடத்தில் இரண்டு மாடி வீடு ஒன்றில் குறித்த மூன்று மாணவிகளும் தங்கியிருந்துள்ளனர். குடியிருப்பில் ஏற்பட்ட எரிவாயு கசிவால் ஏற்பட்ட தீ விபத்தால் ஏற்பட்ட புகையை சுவாசித்து மூச்சுத் திணறியே மாண்விகள் மூவரும் உயிரிழந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இவர்களது உடலை இலங்கைக்கு கொண்டுவர வெளிவிவகார அமைச்சு நடவடிக்கைளை எடுத்துள்ளது. அசர்பைஜான் குடியரசில் இலங்கை தூதரகமொன்று இல்லையெனவும் ஈராக் தலைநகர் தெஹ்ரானில் உள்ள இலங்கை தூதர கத்தின் ஊடாக மாணவிகளின் உடலை இலங்கைக்கு கொண்டு வர துரித நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்றும் வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது. (எ-24)

## வவுனியா மைதானத்தில் நேற்றிலிருந்து மெல்லிசை

*வவுனியா, ஜன. 12*



வவுனியா நகரசபை மைதானத்தில் மெல்லிய இசையைப் ஒலிபரப்புவதற்கான நடவடிக்கைகள் நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

வவுனியா நகரசபை மைதானத்தில் காலை மற்றும் மாலை வேலைகளில் உடற்பயிற்சி, நடை பயணம், ஓடுதல் போன்ற பயிற்சியில் ஈடுபடும் வீரர்கள் மற்றும் பொதுமக்களின் நலனைக் கருத்திற்கொண்டு வவுனியா நகரசபையின் உப தலைவர் சு.குமாரசாமி கடந்த முறை நடைபெற்ற சபைக் கூட்டத்தில் முன்வைக்கப்பட்ட யோசனைக்கமைய அதற்குரிய அனுமதியும் பெறப்பட்டது.

இந்த நிலையில் சுமார் இரண்டு லட்சம் ரூபா நகரசபை நிதியொதுக்கீட்டில் மைதானத்தைச்சுற்றி 6ஒலிபெருக்கிகள் பொருத்தப்பட்டு மெல்லிய இசையுடன் கூடிய ஒலி இசைக்கவிடப்பட்டது.

அதிகாலை 5 மணி தொடக்கம் காலை 7 மணி வரையும் மாலை 5 மணி தொடக்கம் இரவு 8 மணிவரையும் மெல்லிய ஒலி இசைக்கப்படும் என்று நகர சபையினர் தெரிவித்தனர். இந்தத் திட்டம் நகர சபைக்கு வருகைதரும் மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ள்து என்று தெரிவிக்கப்பட்டது. (த-18)

## ரஞ்சனின் குரல் பதிவுகளை கேட்க 10 பொலிஸ் குழுக்கள்

*கொழும்பு, ஜன.12*



நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவிடம் ஒரு லட்சத்து 20 ஆயிரம் இரகசியக் குரல் பதிவுகள் தொடர்பில் அரச பகுப்பாய்வு அறிக்கை கிடைத்தவுடன், 10 பொலிஸ் குழுக்களை நியமித்து அனைத்து குரல் பதிவுகளையும் கேட்கச் செய்து, அதிலுள்ள குற்றச்சாட்டுக்களுடன் சம்பந்தப்பட்ட சகலரிடமும் வாக்குமூலம் பதிவு செய்வதற்கு பொலிஸ் தலைமையகம் நடவடிக்கை எடுத்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

எதிர்வரும் 15 ஆம் திகதியாகும்போது அரச பகுப்பாய்வுத் திணைக்களத்திடமிருந்து ரஞ்சனின் குரல் தொடர்பான அறிக்கை கிடைக்கவுள்ளது. அது கிடைத்தவுடன் பொலிஸார் விசாரணை நடவடிக்கைகளை ஆரம்பிக்கவுள்ளனர் என்றும் தலைமையகம் தெரிவித்துள்ளது.

ரஞ்சனிடமிருந்து கண்டெடுக்கப்பட்ட குரல் பதிவுகளில் நீதிபதிகள், அரச அதிகாரிகள், அரசியல்வாதிகள், உயர் பொலிஸ் அதிகாரிகள் உட்பட இன்னும் பலருக்கு எதிராக குற்றச்சாட்டுக்கள் விடுக்கப்பட்டுள்ளன என தலைமையகம் அறிவித்துள்ளது.

இந்த குரல் பதிவுகள் தொடர்பில் விசாரணை முன்னெடுக்கத் தேவையான நவீன உபகரணங்கள் அனைத்தையும் பயன்படுத்தப்படும் என்று தலைமையகம் கூறியுள்ளது. (எ)

## வாகன இலக்கப் பட்டியல் பொதுமக்கள் பார்வைக்கு

*யாழ்ப்பாணம், ஜன.12*

மோட்டார்போக்குவரத்துத்திணைக்களத்தின் தலைமை அலுவலகத்தில் இருந்து கடந்த 8 ஆம் திகதி கிடைக்கப்பெற்ற வாகன இலக்கத் தகடுகளின் பட்டியல் பொதுமக்களின் பார்வைக்காக அறிவிப்புப் பலகையில் காட்சிப் படுத்தப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்திலுள்ள அனைத்து பிரதேச செயலகங்களிலும், மாவட்ட மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்திலும் பட்டியலைப் பார்வையிடலாம்.

இதற்கமைய புதிதாக வாகனங்களைப் பதிவு செய்த உரிமையாளர்கள் வாகனப், பதிவுப் புத்தகம், தேசிய அடையாள அட்டை ஆகியவற்றையும், மாகாணங்களுக்கிடையே வாகன உரிமை மாற்றம் பெற்றவர்கள் மேற்குறித்த இரண்டு ஆவணங்களுடன் பழைய வாகன இலக்கத்தகடுகள் மற்றும் வாகன இலக்கம் பொறித்த ஒட்டும் தாள் என்பவற்றையும் சமர்ப்பிக்க வேண்டும்.

யாழ்.மாவட்ட மோட்டார் வாகன போக்குவரத்து அலுவலகத்தில் ஆவணங்களைச் சமர்ப்பித்து வாகனங்களுக்குரிய இலக்கத் தகடுகளைப் பெற்றுக் கொள்ளலாம் என்று மோட்டார் போக்குவரத்துத் திணைக்களப் பிரதி ஆணையாளர் அறிவித்துள்ளார். (க)

## உயிரிழந்த சிறுமியின் குடும்பத்துக்கு உதவி



முல்லைத்தீவு,ஜன.12

புதுக்குடியிருப்பு தேவிபுரம் பகுதியில் சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்டு உயிரிழந்த 3 வயதுச் சிறுமியின் குடும்பத்தினருக்கு, வாழ்வாதார உதவி வழங்கப்பட்டது.

அகரம் அறக்கட்டளை ஊடாக புலம்பெயர் நாட்டில் வசிக்கும் உறவுகளின் நிதிப்பங்களிப்பில் 30 ஆயிரம் ரூபா பெறுமதியான உதவிகள் வழங்கப்பட்டன.

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறீஸ்கந்தராசா உதவிகளை வழங்கினார்.

ஐஸ் பழ வியாபாரம் செய்வதற்கான பெட்டி மற்றும் ஏனைய தொழில் தேவைகளுக்கான பண உதவியும் வழங்கப்பட்டது. (க-19)

# செல்போன் கொடுத்து கெடுத்துவிடாதீர்கள்!

## பெற்றோருக்கு அறிவுறுத்து



*கொடிகாமம், ஜன. 12*

*செல்போனில் குழந்தைகளுக்கு நிகழ்ச்சிகளைக் காட்டாதீர்கள். ஐந்து வயது வரை சிறுவர்களின் கண்பார்வை பக்குவமாக இருக்க வேண்டும் என்பது மருத்துவர்களின் ஆலோசனை.*

சிறுவயதில் 'செல்போன்' பாவித்து வளர்ந்த பின்னர் கண்ணாடி பாவிக்கும் நிலையை உருவாக்கிவிடாதீர்கள். இவ்வாறு ஓய்வுபெற்ற அதிபர் ஏ.எஸ்.ஏ அலெக்சாண்டர் தெரிவித்தார்.

சாவகச்சேரி பிரதேச சபையின் மிருசுவில் பொது நூலக வாசிப்பு மாத பரிசளிப்பு மிருசுவில் பொது நூலக மண்டபத்தில் நேற்றுமுன்தினம் சாவகச்சேரி பிரதேச சபைத் தவிசாளர் க.வாமதேவன் தலைமையில் நடைபெற்றது.

அதில் பிரதம விருந்தினர் உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:நாம் சிறுவர்களாக இருந்த போது அம்புலி மாமா புத்தகம் கடையில் ஓடர் செய்து எடுக்குமளவுக்கு கிராக்கி இருந்தது.

நிறைவான கதைகள் சிறுவர் உள்ளங்களைக் கவரக்கூடிய கதைகள் இருந்தன. ஆனால் இன்று அம்புலி மாமாவில் சரித்திரக் கதைகளைப் பதிக்கிறார்கள். அன்று பத்திரிகைகளின் விற்பனைக்காக ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு கதைகளை பிரசுரிப்பார்கள் இன்று பத்திரிகைகள் செய்திமயமாகிவிட்டன.

ஒவ்வொருவரின் தேவைகள் மாறும் போது மக்களின் தேவைகள் மாறுகின்றன. வாசிப்பதனால் மனிதன் முழுமையடைகிறான்.

செல்போனில் எல்லாம் இருக்கிறது என்பதற்காக அவர்களிடம் செல்போனைக் கொடுக்காதீர்கள். சிறுவர்கள் உலகை ஜெயிக்க வேண்டும். அவர்களுக்கு சிறந்த கதைகளைச் சொல்லும் திறமை பெற்றோர்களுக்கு இருக்க வேண்டும்.

செல்போனைத்தான் விரும்புகிறார்கள் என்றால் பெரிய எழுத்தாக மாற்றி வழங்குங்கள். சிறிய எழுத்தைப் பார்த்துக் கண்பார்வையை இழக்க வைக்காதீர்கள். சிறுவயதிலிருந்தே வாசிப்பை பழக்கினால் எதிர் காலத்தில் சிறந்தவர்களாக உருவாகுவார்கள்.

குழந்தைகளின் மத்தியில் வாசிப்பை உருவாக்குவோம்.

அவர்கள் மூலமாக வாசிப்பு சமுதாயமாக மாற்றுவோம். அதனூடாக தமிழ் சமுதாயத்தைச் சிறந்த சமுதாயமாக மாற்றுவோம்-என்றார்.

கௌரவ விருந்தினர்களாக கிராம அலுவலர் செல்வி த.வாகினி, தென்மராட்சி லயன்ஸ் கழக மாவட்ட இணைப்பாளர் த.இரவீந்திரன், மிருசுவில் பொது நூலக ஆலோசகர் இ.அ.ஆனந்தராசா, ஓய்வுபெற்ற அதிபர்கள், ஆசிரியர்கள், மர்ணவர்கள், பெற்றோர்கள், வாசகர்கள், முன்பள்ளி மாணவர்கள், முன்பள்ளி ஆசிரியர்கள் பலர் கலந்து கொண்டனர். வாசிப்பு மாதப் போட்டிகளில்பங்குபற்றியமாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்பட்டன. (து-159)

## தேவையற்ற விடயங்களே மாநகர சபையில் ஆராய்வு

### சாடுகின்றார் சிவாஜிலிங்கம்



யாழ்ப்பாணம், ஜன. 12

யாழ்ப்பாண மாநகர சபை அமர்வுகளில் தேவையற்ற விடயங்கள் ஆராயப்படுகின்றனவே தவிர, மக்கள் நலன்சார் வேலைத்திட்டங்கள் தொடர்பில் ஆராயப்படுவதில்லை என்று தமிழ்த் தேசியக் கட்சியின் செயலர் எம்.கே.சிவாஜிலிங்கம் குற்றஞ்சாட்டியுள்ளார்.

யாழ்ப்பாண மாநகர சபையில் கடந்த வியாழக்கிழமை ஏற்பட்ட குழப்பம் தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

அண்மையில் நடந்த அமர்வின்போது குலம் கோத்திரம் பற்றிப் பேசி உறுப்பினர்களிடையே தர்க்கம் ஏற்பட்டது.

இவை தவிர்க்கப்பட வேண்டியவை. சபையில் பேசப்பட வேண்டிய எவ்வளவோ விடயங்கள் உள்ளன. மக்கள் நலன்சார் வேலைத்திட்டங்கள் தொடர்பில் குறிப்பாக திண்மக் கழிவு அகற்றல் தொடர்பில் தீர்க்கமான, காத்திரமான தீர்மானம் எதுவும் நடைமுறைப் படுத்தப்படவில்லை.

அது அவ்வாறிருக்க சபை அமர்வுகளில் தேவையற்ற விடயங்கள் தொடர்பில் ஆராய்வது ஏற்றுக்கொள்ள முடியாதது.

எனவே யாழ்ப்பாண மாநகரசபை உறுப்பினர்கள் இந்த விடயம் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும். இல்லையெனில் மக்கள்தான் தீர்மானம் எடுக்க வேண்டி வரும்-என்றார். (து-111)

## யானை தாக்கி ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு, ஜன.12

கெகிராவபழைய வாவி பிரதேசத்தில் காட்டு யானையின் தாக்குதலுக்கு இலக்காகி ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு 10 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

கெகிராவமரதன்கடவல பகுதியைச் சேர்ந்த 38 வயதான நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# பஸ் இன்மையால் மாணவர்கள் அவதி

மன்னார், ஜன.12

பாடசாலை மாணவர்களுக்கென தனியான பஸ் சேவை இன்மையால் அவர்கள் பெரும் இன்னல்களுக்கு முகம்கொ டுத்து வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மன்னார் மாவட்டத்திலுள்ள மடு பிரதேச செயலகத்திற்குட்பட்ட பல கிராமங்களிலுள்ள பாடசாலை மாணவர்கள் பாடசாலை செல்வதற்கு தனியான பாடசாலை பஸ் சேவை இன்மையினால் பெரும் இன்னல்களுக்கு முகம்கொடுக்கின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மன்னார் மாவட்டத்தின் பூமலர்ந்தான் தேக்கம் சோதிநகர்(இரண்டாம் கட்டை),தம்பனைக்குளம்,கட்டையடம்பன் போன்ற கிராமங்களிலுள்ள சுமார் 260 மாணவர்கள் மன்.முருங்கன் ம.வி மற்றும் கட்டையடம்பன் றோ.க.த.க பாடசாலை போன்ற தூரப் பாடசாலைகளுக்கு கல்வி கற்பதற்காக தினமும் பஸ்களில் பயணம் செய்கின்றனர்.

இவர்கள் பயணிப்பதற்கு என தனியானதொரு பஸ் சேவை இன்மையினால் பெரும் இன்னல்களுக்கு முகம் கொடுக்கின்றனர்.

இதனால் சரியான நேரத்துக்குப் பாடசாலை செல்ல முடியவில்லை எனவும் சனநெருக்கடி,சீருடை அழுக்காதல் சில சமயங்களில்பஸ் வராமை,பயணிகளின்முறைகேடான நடவடிக்கைகள் மற்றும் சில வேளைகளில் பஸ்கள் மாணவர்களை ஏற்றாமல் செல்லுதல் போன்றவற்றால் தாம் நாளாந்தம் சிரமப்படுகிறார்கள் எனத் தெரிவித்தனர்.

இதனால் பெரும்பாலான வேளைகளில்பஸ் படிகளில்தொங்கிக் கொண்டு செல்லவேண்டிய துர்ப்பாக்கிய நிலையும் தமக்கு ஏற்பட்டுள்ளதாகவும் அந்த மாணவர்கள் தெரிவிக்கின்றனர்.

" எம்மிடம் போதிய பஸ்கள் இன்மையால் மாணவர்களின் போக்குவரத்துக்கு என தனியான பஸ் வழங்க முடியாதுள்ளது.

எனினும் பாடசாலை ஆரம்பிக்கும் மற்றும் முடிவடையும் நேரத்தில் அண்ணளவாக 3 பஸ்கள் அந்தப் பாதையால் பயணிக்கின்றன.

இதேவேளை மாணவர்களை ஏற்றாமல் செல்லும் பஸ்களின் இலக்கங்களைக் குறித்து எமக்கு முறைப்பாடு செய்யும் பட்சத்தில் நடவடிக்கை எடுக்க முடியும்" என இலங்கைப் போக்குவரத்து சபையின் மன்னார் சாலை உத்தியோகத்தர் ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார். (ந)

## வெற்றி முழுமையடையவில்லை

### காமினி லொகுகே தெரிவிப்பு

கொழும்பு, ஜன.12

சிறிலங்கா பொதுஜன பெரமுன ஜனாதிபதித் தேர்தலில் பெற்ற வெற்றி பொதுத் தேர்தலின் ஊடாகவே முழுமைப்பெறும் என்று அமைச்சர் காமினி லொகுகே தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது. நிர்வாகத் துறைக்கும் சட்டத்துறைக்கும் முரண்பாடான அரசு தோற்றம் பெற்றால் எவ்வித பயனும் ஏற்படாது. நல்லாட்சி அரசில் காணப்பட்ட நிலைமைகளே தொடர்ந்து நிலவும். ஜனாதிபதித் தேர்தலின் தீர்மானத்தை, மக்கள் பொதுத் தேர்தலிலும் செயற்படுத்த வேண்டும். அப்போதுதான் சிறந்த செயற்பாடுகளை தொடர்ந்து முன்னெடுக்கக் கூடியதாக அமையும். தேர்தல் பெறுபேறுகள் மாற்றமடைந்தால் அனைத்து எதிர்பார்ப்புக்களும் பயனற்றதாகிவிடும்-என்றார். (எ)

# ஊழல்வாதிகளை காத்தவர் ரணிலே!

## பொன்சேகா குத்துக்கரணம்



*கொழும்பு, ஜன. 12*

**முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க்குற்றங்களுக்கு அப்போது பாதுகாப்பு அமைச்சின் செயலராக இருந்தவரும் தற்போதைய ஜனாதிபதியுமான கோத்தாபய ராஜபக்ஷவே முழுப் பொறுப்புக்கூற வேண்டும். அத்துடன், மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் ஊழல், மோசடி செய்தவர்களையும், நல்லாட்சியில் ஊழல், மோசடி செய்தவர்களையும் நல்லாட்சியில் பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்கவே காப்பாற்றினார். இவ்வாறு ஐக்கிய தேசிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் இராணுவத் தளபதியுமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டு மக்களின் ஜனநாயக மரபுக்கமைய ஆட்சிப்பீடம் ஏறியுள்ள ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ இலங்கைக்கு எதிரான ஐ.நா. தீர்மானங்கள் தொடர்பில் பதிலளிக்கவேண்டும். அத்துடன், மனித உரிமை மீறல்கள், போர்க்குற்றங்கள் தொடர்பில் சர்வதேசம் ஏற்கும் சுயாதீன விசாரணையை நடத்தியே ஆகவேண்டும்.

இதேவேளை, ஊழல், மோசடியாளர்களுக்கு அடைக்கலம் கொடுத்த முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவே ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசிய முன்னணி தோல்வியடைந்தமைக்கான முழுப்பொறுப்பும் ஏற்க வேண்டும்.

ஊழல், மோசடி விவகாரத்தால்தான் நல்லாட்சி கவிழ்ந்தது. குற்றவாளிகளுக்கு தக்க தண்டனை வழங்கியிருந்தால் சஜித் பிரேமதாஸ ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டிருப்பார். அதேவேளை, நல்லாட்சியும் தொடர்ந்திருக்கும் - என்றார்.

இதே சரத் பொன்சேகாதான் , சஜித் பிரேமதாஸவை ஜனாதிபதி வேட்பாளராக்க விடாமல் ரணிலோடு சேர்ந்து பகிரங்கமாகச் செயற்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ,5,22)



## இருமுடிகட்டி பாதயாத்திரை

*யாழ்ப்பாணம்,ஜன.12*

யாழ்ப்பாணத்தில் முதன்முதல் கட்டப்பட்ட கட்டுவன் கரண்டக்குளம் ஸ்ரீ ஐயப்பன் கோவிலில் வழமை போன்று இருமுடிகட்டி பாதயாத்திரையாக நடந்து, பதினெட்டுப் படியேறி ஸ்ரீதர்மசாஸ்தாவாகிய ஐயப்பனுக்கு நெய்யபிஷேகம் செய்யும் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெறும்.

கல்வியங்காடு புலவனார் வீதியிலுள்ள குருஸ்வாமியின் இல்லத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிமுதல் இருமுடி கட்டும் நிகழ்வு இடம்பெறும். தொடர்ந்து இரவு விசேட பஜனை, பூசைகளைத் தொடர்ந்து நாளை திங்கட்கிழமை காலை 5.30 மணியளவில் பாதயாத்திரை ஆரம்பமாகும்.

புலவனார் வீதியிலிருந்து ஆரம்பமாகும் பாதயாத்திரை திருநெல்வேலிச் சந்தி, பலாலி வீதியூடாக கோண்டாவில் சந்தியில் குடைச்சாமி கோவிலில் தரிசனத்தின் பின்னர் கோண்டாவில் உப்புமடம் சந்தி, காங்கேசன்துறை வீதி வழியாக மல்லாகம் சந்தியை அடையும். அங்கிருந்து கட்டுவன் வீதிவழியாக ஆலயத்தைச் சென்றடையும். அதன் பின்னர் பதினெட்டுப்படியேறி நெய்யபிஷேகம் நிறைவடைந்த பின்னர் பூசை வழிபாட்டுடன் சக்தி பூசையும் இடம்பெறும்.

சபரிமலைக்குச் செல்ல முடியாத பக்தர்கள் ஆலய குருஸ்வாமியுடன் தொடர்பு கொண்டு பதினெட்டுப்படியேற பதிவு செய்யலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (க)



முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு உடையார்கட்டு மகா வித்தியாலய வளாகம், சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் வட்டாரக் கட்சியின் இளைஞர் அணியினரால் ஜனாதிபதியின் எண்ணக்கருவுக்கு அமைவாக நேற்று முன்தினம் துப்புரவு செய்யப்பட்டது. (க-19)

## வடக்கு ஆளுநருடன் மாவை எம்.பி. சந்திப்பு

*யாழ்ப்பாணம்,ஜன.12*

வடக்குமாகாணத்தின் புதிய ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸை, நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா சந்தித்தார்.

யாழ்ப்பாணத்திலுள்ள ஆளுநர் அலுவலகத்தில் கடந்த வியாழக்கிழமை சந்திப்பு இடம்பெற்றது.

போரால் பாதிப்புற்ற வடக்கில் மீள்குடியேற்றம், ஆக்கிரமிப்பிலுள்ள தமிழ் மக்கள் நிலங்கள் விடுவிக்கப்பட வேண்டியதன் அவசியம், மீள்குடியேற எதிர்பார்த்து வந்துள்ள மக்களின் அடிப்படை வசதிகள், வாழ்வாதாரம், குடியிருப்பு வீடுகள், அதற்குத் தேவையான நிதி வசதிகள், யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலைய அபிவிருத்தி, இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு, ஏனைய அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பில் ஆளுநரிடம் நாடாளுமன்ற உறுப்பினர் எடுத்துக் கூறினார்.

குறிப்பாக வரவுசெலவுத் திட்ட நிதி ஒதுக்கீடுகள், விஷேட நிதி ஒதுக்கீடுகள் விடுவிக்கப்படாமலிருப்பதால் மீண்டும் மக்கள் பெரும் அவல நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். எனவே வடக்குமாகாணத்துக்குப் புதிதாகப் பொறுப்பேற்றுள்ள ஆளுநர் இந்தப் பிரச்சினைகளுக்கு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று நாடாமன்ற உறுப்பினர் வேண்டுகோள் விடுத்தார்.

இதற்குப் பதிலளித்த ஆளுநர் ஒத்துழைப்பு வழங்கி, எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை முன்னெடுப்பதாக இணக்கம் தெரிவித்தார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## சிரமதான நிகழ்வு

*வடமராட்சி ஜன.12*

'எமது சந்தை' எனும் தொனிப்பொருளில் நெல்லியடி சந்தையும் அதனை அண்டிய சுற்றுப்புறச் சூழலும் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்படவுள்ளது.

நேற்று முனதினம் வெள்ளிக்கிழமை வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையில் உழவர் மற்றும் வியாபாரிகளுக்கான கலந்துரையாடல் நடைபெற்றது. இதில் நெல்லியடி சந்தை ஏனைய சந்தைகளுக்கு முன்னுதாரணமாக அழகாகச் சுத்தமாக இருக்க வேண்டும். அதற்கான முதற்கட்டமாக சிரமதானப் பணி இடம்பெறவுள்ளது. (ந-422)

## பொதுக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும

*குருநகர், ஜன. 12*

பகிரங்க சேவைகள் ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின், வலிகாமம் மேற்கு சங்கானைப் பிரதேச செயலகப் பிரிவுச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டமும், புதிய நிர்வாகத் தெரிவும் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றன.

சங்கானைப் பிரதேசச் செயலக கலாசார மண்டபத்தில் ந.சிவறஞ்சன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுகளில், சங்கானைப் பிரதேச செயலர், சங்கானைப் பிரதேச செயலகக் கணக்காளர் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர்.

இதில் 2020 ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்டது.

தலைவராக ந.சிவறஞ்சன், உபதலைவராக க.சந்திரசேகரம், செயலாளராக தி. உதயசூரியன், உப செயலாளராக க.சிவலிங்கம், பொருளாளராக க.விஜயவேல் மற்றும் செயற்குழு உறுப்பினர்களாக செ.குமாரசிங்கம், எஸ்.கமலாதேவி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (க-51)

## சஜித் பிரேமதாசவை பிரதமராக்குவோம்

### இராதாகிருஷ்ணன் சபதம்

*ஹட்டன் ஜன.12*

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் சஜித் பிரேமதாசவை பிரதமராக்குவோம் என மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதி தலைவரும், முன்னாள் அமைச்சருமான வே. இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

ஹட்டன் போடைஸ் என்.சி தோட்டப்பகுதியில் நேற்று முன்தினம் மாலை ஒலிபெருக்கி சாதனங்களை வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த ஜனாதிபதி தேர்தலில் தோல்வியைச் சந்தித்திருந்தாலும், எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் பெரும் வெற்றியை பெற்று நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை வாக்குகளுடன் பிரதமராக சஜித் பிரேமதாசவை வெற்றி பெறவைப்போம். சஜித் பிரமேதாசவை ஆட்சிபீடம் ஏற்றக் கூடிய சந்தர்ப்பம் மீண்டும் எமது கைகளுக்கு கிடைத்துள்ளது. எனவே நாம் இந்தச் சந்தர்ப்பத்தை தவறவிடாமல் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

சிறுபான்மை மக்கள் சஜித் பிரேமதாசவை ஆதரிக்கின்றனர். எனவே இந்தத் தேர்தலில் சஜித் பிரேமதாசவை பிரதமராக்க வேண்டும். அவர் பிரதமராக வந்தால் மலையக மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை தீர்த்துக் கொள்ள முடியும். இதேவேளை ஐ.தே.கவின் தலைமைப் பதவியையும் ரணில் விக்கிரமசிங்க விட்டுக் கொடுத்து கட்சியின் எதிர்கால நலன் கருதி செயற்பட வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார். (ந)

# புத்திஜீவிகள் வெளியேற்றம் தடுக்கப்படுவது அவசியம்

## ஜனாதிபதி வலியுறுத்து



*கொழும்பு, ஜன.12*

நாட்டின் துரித அபிவிருத்திக்காக புத்திஜீவிகள் வெளியேற்றத்துக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டியது கட்டாயமாகும் என ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக் கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இவ்வாறு கூறினார்.

இது தொடர்பாக அவரது ஊடகப் பிரிவு அனுப்பியுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

உயர்தரம் வாய்ந்த கல்வியை வழங்குவதாக அரச மற்றும் தனியார் பல்கலைக்கழகங்களும் தனியார் கல்வி நிறுவனங்களும் உறுதியளிக்குமாக இருந்தால் இலங்கையில் கல்விக்காக வெளிநாட்டு மாணவர்களை ஈர்க்க முடியும் என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

உயர் கல்வித் துறையை நாட்டுக்காக அந்நியச் செலாவணியை ஈட்டித் தரும் மார்க்கமாக மாற்ற முடியும் என்றும் சேர் ஜோன் கொத்தலாவலை பாதுகாப்பு பல்கலைக்கழகம் உள்நாட்டில் மட்டுமன்றி பிராந்தியத்திற்கே முன்னுதாரணமான உயர் கல்வி நிலையமாக மாற வேண்டும் என்றும் ஜனாதிபதி கூறினார்.


இலவசக்கல்வி இலங்கையில்சிறந்த மாற்றங்களை உருவாக்கியுள்ளது. அதனை நாம் எப்போதும் பாதுகாக்க வேண்டும். தனியார் துறையில் கற்பதற்கு பண வசதியுள்ளவர்கள் வெளிநாடுகளுக்கு செல்லாது உயர் கல்வியை இங்கேயே பெற்றுக்கொள்ளும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

நாட்டின் தற்போதைய கல்வி முறை பரீட்சையை மையமாகக் கொண்டதாகும். அது மாணவர்களின் உயர் கல்வி வாய்ப்புகள் குறுகிச் செல்ல காரணமாக அமைந்துள்ளது என்றும் அறிவு, திறன் மற்றும் ஆற்றல்களை கருத்திற்கொள்ளாது பரீட்சையை மையமாகக்கொண்டு எதிர்காலம் தீர்மானிக்கப்படுகின்றது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

கல்வி வாய்ப்புகளை விரிவுபடுத்துவதற்கு அரச வளங்களின் பற்றாக்குறை தடையாக இருக்கக்கூடாது என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

தொழிற் கல்வி நிறுவனங்கள் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரிகளின் தரத்தை சர்வதேச தரத்திற்கு ஏற்ப முன்னேற்ற வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி இங்கு விளக்கினார்.

அமைச்சர்கள், பாதுகாப்புச் செயலாளர் மேஜர் ஜெனரல் கமல் குணரத்ன, உள்ளிட்ட பலரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர். (எ)



# மாணவர்களுடன் ரவிகரன் சந்திப்பு

*முல்லைத்தீவு, ஜன.12*

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை முடிவுகளின் அடிப்படையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் முதலாம் மற்றும் இரண்டாம் நிலைகளைப் பெற்று சித்தி பெற்ற மாணவர்கள் சிலரை, வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன் நேரில் சந்தித்தார்.

கணித பிரிவில் மாவட்ட ரீதியில் முதல் நிலை பெற்ற முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரி மாணவனான இராஜரத்தினம் சஞ்சித், மாவட்ட ரீதியில் வணிகப் பிரிவில் முதல் நிலை பெற்ற புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி மாணவியான இரவிச்சந்திரன் யாழினி, மாவட்டத்தில் கலைப்பிரிவில் முதல்நிலை பெற்ற புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி மாணவியான சுப்ரமணியம் சுடர்நிலா மற்றும், மாவட்டத்தில் உயிரியல் பிரிவில் இரண்டாம் நிலை பெற்ற மாணவியான தில்லை நடேசன் சாருஜா ஆகிய மாணவர்களை நேரில் சந்தித்தார். (சு-246)



# கற்றல் உபகரணம் கையளிப்பு

*மன்னார், ஜன.12*

மன்னார் தீவுப் பகுதிகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் 112 பேருக்கு இராணுவத்தினரால் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வு மன்னார் பேசாலை புனித பற்றிமா மத்திய மகா வித்தியாலயத்தின் அரங்க மண்டபத்தில் கடந்த திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் இடம்பெற்றது.

மன்னார் தள்ளாடி 54 ஆவது கட்டளைப்பணியக தலைமை அதிகாரி பிரிகேடியர் சுபாசன வெளிகல பணிப்புரைக்கு அமைவாக 543 ஆவது கட்டளைத்தலைமையக அதிகாரி கேணல் மங்கள மாயாதுன்னவின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு இடம்பெற்றது .

இதில் சர்வமதத் தலைவர்கள், மன்னார் வலயக்கல்விப் பணிப்பாளர் உட்பட அதிபர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர். (ஜ-56)

# திருவாசக முற்றோதல்

*சாவகச்சேரி. ஜன.12*

கல்வயல் ஆயிலடி வீரகத்தி விநாயகர் கோவிலில் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 7 மணி தொடக்கம் திருவாசக முற்றோதல் இடம்பெறும் என்று கோவில் நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (சு-9)



# 80 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்

*வவுனியா, ஜன.12*

வவுனியாவில் தெரிவு செய்யப்பட்ட வசதியற்ற மாணவர்கள் 80 பேருக்கு அண்மையில் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

அறிவின் திறவுகோல் கல்விக்கான வருடாந்த நற்பணியில் அம்மு அழகுக் கலை நிறுவனத்தினரால் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

நிகழ்வில் திருமதி அமுதா சுமன்ராஜ், வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர் செந்தில்நாதன் மயூரன், தமிழ் தெற்குப் பிரதேச சபை செயலாளர் திருமதி சுகந்தி கிஷோர், மாவட்ட சிறுவர் மேம்பாட்டு அலுவலர் ஜெயக்கெனடி ஆகியோர் கலந்து கொண்டனர். (சு)

### மக்கள் வங்கி ஓய்வூதியர் சங்க

# பொதுக் கூட்டமும் மூத்தோர் கௌரவிப்பும்

*யாழ்ப்பாணம். ஜன. 12*

மக்கள் வங்கி ஓய்வூதியர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்.பிரதான வீதியில் உள்ள திருமறைக் கலாமன்ற கலைத்தூது கலையக மண்டபத்தில் (பெற்றோல்செட் முன்பாக) நடைபெறவுள்ளது.

சங்கத்தின் வருடாந்த நிகழ்வாக மூத்தோர் கௌரவிப்பும் இடம்பெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (சு-9)

# டெங்கு ஒழிப்புக்கு மக்கள் ஒத்துழைப்பு

*சாவகச்சேரி. ஜன. 12*

சுகாதார அமைச்சின் டெங்குக் கட்டுப்பாட்டு அலகினின் ஏற்பாட்டில் கடந்த வாரம் சாவகச்சேரி சுகாதாரப் பகுதியினரால் நடத்தப்பட்ட சிறப்பு டெங்குக் கட்டுப்பாட்டு பரிசோதனை நடவடிக்கைகளுக்கு மக்கள் முழு ஒத்துழைப்பையும் வழங்கியுள்ளது.

மக்கள் தமது காணிகள் மற்றும் குடியிருப்புகளைத் துப்புரவாகவும், நுளம்பு பெருகக் கூடிய வகையிலான நீர் ஏந்துப் பொருள்களை அப்புறப்படுத்தியும் வைத்திருந்தனர். மக்கள் முழு ஒத்துழைப்பை வழங்கியமைக்கு சுகாதாரப் பிரிவினர் நன்றி தெரிவித்துள்ளனர்.

மட்டுவில் தெற்கு, கைதடி வடக்கு மற்றும் சங்கத்தானை ஆகிய கிராமஅலுவலர்பிரிவுகளில்டெங்கு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. பொலிஸார், படையினர் பிரதேசசெயலகத்தினர், உள்ளூராட்சி சபையினர், கிராம டெங்குக் குழுவினர் ஆகியோர் மூன்றுபிரிவுகளிலும் ஆயிரத்து 213 இடங்களில் தரிசிப்பை மேற்கொண்டனர். தரிசிப்புகளின் போது டெங்கு நுளம்பு உற்பத்தியாகும் நீர் ஏந்து பொருள்கள் இனம் காணப்படவில்லை.

அத்துடன் டெங்கு நுளம்பு உற்பத்தியாகக் கூடிய இடமாகக் காணப்பட்ட பற்றைகளைக் கொண்ட காணிகளை வைத்திருந்த 63 காணிகளின் உரிமையாளர்களுக்கு, காணிகளைத் துப்புரவு செய்ய 14 தினங்கள் கால அவகாசம் வழங்கி சிவப்பு அறிவித்தல் வழங்கப்பட்டது.

அத்துடன் கடந்த மாதம் டெங்கால் 203 பேர் பாதிக்கப்பட்டிருந்த நிலையில், இந்த வருடம் ஜனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் நேற்று வரை 55 பேர் பாதிக்கப்பட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சு-9)


அதிஷ்டத்தை கொண்டு வரும்
சாஸ்திரம்
தற்போது பிரவுன்ஸ் யன்மார்
ஹாவெஸ்டருடன்
பிரவுன்ஸ் டெபே டிரக்டர்
0773 457 988 - துஷான்
0773 457 987 - லக்ஷித
Browns
YANMAR
TAFE
Service
Browns
Agriculture


அபான்ஸ்
பொங்கல்
திருவிழா
'பழையன கழித்து
புதியன புகுத்தி'
அபான்ஸ் உடன் பொங்கலை
கொண்டாடுவோம்!
மாற்றீடு சலுகைகள்
வட்டியற்ற தவணைகள்
நீடித்த உத்தரவாதம்
இலவச பரிசுகள்
*இச்சலுகை 2020 ஜனவரி 15 ஆம் திகதிவரை மாத்திரமே வழங்கப்படும்.
LG LED தொலைக்காட்சி
43LK5260PTA
ரு.109,999
விசேட விலை
ரு.69,999
• 43" FHD திரை
• IPS பேனல்
• HDMI
• USB
ரொக்க விலை தள்ளுபடி ரு.40,000
வட்டியில்லா 12 கொடுப்பனவு
HP DUAL CORE
HPPCLI51TBDC
• Intel Celeron
• 4GB RAM
• 1TB HDD
• 2 Year Warranty
• Win 10
மவுஸ் ஒன்றும் பென்ரைவ் ஒன்றும் இலவசம்
ரு.71,500
விசேட விலை ரு.59,990
LG X-BOOM
HI-FI SYSTEM
CL65D
• 950W
• Bluetooth
• Bass Blast
• FM
• USB
ரு.49,999
விசேட விலை
ரு.44,999
ரொக்க விலை தள்ளுபடி ரு.5,000
வட்டியில்லா 15 கொடுப்பனவு
ஹயர்
டொப்லோடர்
HWM70-918NZPE
விசேட விலை
ரு.39,999
7kg
18 மாதங்கள் வரை
OPPO A5S
2GB - ரு.24,990
3GB - ரு.27,990
iPHONE 7
32GB
ரு.89,999
விசேட விலை
ரு.69,999
ரொக்க விலை தள்ளுபடி ரு.20,000
ABANS
டபள் டோர்
குளிரூட்டி
ALG - 200DD
ரு.55,990
விசேட விலை
ரு.49,990
அயன் ஒன்று இலவசம்
வட்டியில்லா 18 கொடுப்பனவு
அபான்ஸ் ப்ரீ
ஸ்டாண்டிங்
குக்கர்
ரு.47,990
இலிருந்து
வட்டியில்லா 12 கொடுப்பனவு
பிலிப்ஸ்
மிக்ஷர்
கிரைண்டர்
20%
16%
HL7756
ரு.14,990
விசேட விலை
ரு.11,990
வட்டியில்லா 9 கொடுப்பனவு
HL7699
ரு.17,990
விசேட விலை
ரு.15,100
பிரீமியர் பிரெஷர் குக்கர்
விசேட விலை
3L - ரு.4,090 - ரு.3,690/-
5.5L - ரு.7,290 - ரு.6,490/-
7.5L - ரு.8,990 - ரு.7,990/-
10L - ரு.10,990 - ரு.9,490/-
வட்டியில்லா 6 கொடுப்பனவு
Authorized Reseller
LG
Electrolux
MITSUBISHI ELECTRIC
TOSHIBA
ELBA
pyrex
morphy richards
mistral
AKG
harman/kardon
acer
hp
Lenovo
PHILIPS
Hero
aprilia
Panasonic
60
HSBC
Sampath Cards
HNB
SEYLAN
PAN ASIA BANK
Abans

# அந்தியேட்டிக் கிரியையும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும்



தோற்றம் 20 ... 09 ... 1938

மறைவு 14 ... 12 ... 2019

கடந்த 14.12.2019 சனிக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது தாயார்

## அமரர் தனேஸ்வரி முத்துக்குமாரு

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (12.01.2020) ஞாயிற்றுக் கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை (13.01.2020) திங்கட்கிழமை எமது இல்லத்திலும் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.


இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

துர்க்கா ஹோம்,
உடுவில் கிழக்கு, சுன்னாகம்.

மு.இராதாகிருஷ்ணன்,
மு.அனந்தகிருஷ்ணன்,
வ.ஜெயலக்ஷ்மி,
ஜெ.மகாலக்ஷ்மி (பாமா)
வ.ஜனலக்ஷ்மி

(CS 30518)(14,17)

# மரண அறிவித்தல்



## மு.சி. அப்பையா

யாழ் கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், தாவடியை வதிவிடமாகவும் தற்போது கனடாவில் வசித்து வந்தவருமாகிய முன்னைநாள் " சிவபாலன் சைக்கிள் ஸ்ரோர்" (உரிமையாளர்- மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்) M.S. அப்பையா அவர்கள் ஜனவரி மாதம் **10ம்** திகதி தனது **94வது வயதில்** இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி விசாலாட்சி தம்பதிகளின் கனிஷ்ட புத்திரனும் நாகலிங்கம்- பார்வதிப்பிள்ளை தம்பதிகளின் மருமகனும் காலஞ் சென்ற பூமாலட்சுமியின் அன்புக் கணவரும் பாலகுமாரன் (இலங்கை), பாலசுப்பிர மணியம் (கனடா), பாலேந்திரன் (கனடா), பாலகாந்தன் (கனடா), ஜெகதீஸ்வரி (கனடா), பாலபாஸ்கரன் (கனடா), காலஞ்சென்ற பாலகிருஷ்ணன் (கண்ணன்), பாலராஜன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் கலைச்செல்வி, கலாதேவி, சிவகாமசுந்தரி, நிர்மலா, பரமசிவம், விஜிதா, ராதிகா ஆகியோரின் பாசமுள்ள மாமனாரும் தக்ஷாயினி (லண்டன்), நந்தகோபால் (லண்டன்), ருக்ஷாயனி, நிருஜன், மதுஷாயனி, வானுஜன், நிஜந், நிவித், நிலானி, திசோர், திசிகா, செந்தூரன், ஆரூரன், துவாரகா, காசினி, இந்துஜா, கஷ்மியா, அர்ஜீன், திலோஸ், புவீஸ், சித்தாஷ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
அ.பாலகுமாரன் (077 217 8921)

## பணிப்பெண் தேவை

சாவகச்சேரியில்


தொடர்புகள்- 077 145 3857

## கடை வாடகைக்கு

நாவற்குழி (A9) கண்டி வீதியில் அரச உணவுக் களஞ்சியம் முன்பாக 32' x 9' கடை வாடகைக்குண்டு.

தொடர்பு:- 077 167 9880

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



## அமரர் செல்லையா குமாரசிவம்

கடந்த 13.12.2019 அன்று எம்மைவிட்டு பிரிந்த எமது குடும்பத் தலைவரின் அந்தியேட்டி கிரியைகளும் சபிண்டீகரணமும் இன்று (12.01.2020) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெற உள்ளது. இந் நிகழ்வில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரையும் கலந்துகொள்ளுமாறு அழைக்கின் றோம்.

மேலும் மறைவு செய்தி அறிந்து நேரில் கலந்து கொண்டோருக்கும் தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியோருக்கும் பல வழி களிலும் உதவி புரிந்தோருக்கும் எமது நன்றியை தெரிவித்துக்கொள்கின்றோம்.

தோற்றம் 28.11.1933 மறைவு 13.12.2019

குடும்பத்தினர்.
பலாலி வீதி,
உரும்பிராய் தெற்கு.

# முதலாம், ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



வையத்துள் 18.08.1937 ............ 24.10.1940

தெய்வத்துள் 26.09.2018 ............ 15.03.2015

அமரர்கள்

கந்தையா பாலச்சந்திரன்

பாலச்சந்திரன் கோகிலாம்பாள்

பெற்றோர் உங்களின் பிள்ளையாய் பிறந்ததற்கு - நான்
பெருந்தவம் செய்திருந்தேன் - இவ்
உலகில் நல்லவளாய்- கற்றவளாய் நான் வாழ்வதற்கு
உங்களைத் தந்து என்னைக் காத்தீர்கள்!
உங்கள் நினைவுடன் என் நித்தியப் பயணம்.............

"கோகில பாலஸ்தான்"
மூளாய் வீதி, வட்டுக்கோட்டை.

குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## திருமதி கோகிலாதேவி (மங்களம்) பாலசுப்பிரமணியம்



பிறப்பு 12.08.1938 இறப்பு 10.01.2020

வல்வெட்டியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாக வும் கொண்ட திருமதி கோகிலாதேவி பாலசுப்பிரமணியம் 10.01.2020 வெள்ளிக் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகரட்ணம் (குஞ்சி ஐயா, ஆயுள்வேத வைத்தியர்) வேதநாயகி (ஆசிரியர்) தம்பதிகளின் மகளும், காலஞ்சென்ற வர்களான நல்லதம்பி - சின்னம்மா தம்பதி யினரின் மருமகளும் பாலசுப்பிரமணியம் (ஓய்வு பெற்ற நிர்வாக உத்தியோகத்தர் கரவெட்டி பிரதேச செயலகம்) அவர்களின் அன்பு மனைவியும் பாலேந்திரன் (லண்டன்) காலஞ்சென்றவர்களான ரவீந்திரன் ஞானேந்திரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற சட்டத்தரணி சபாநாதன், காலஞ்சென்ற குணநாதன் மற்றும் கருணை நாதன், இரகுநாதன் ஆகியோரின் சகோதரியும் ஜீவகாந்தி உமாதேவி, கோகிலாதேவி ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (12.01.2020) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று 10 மணியளவில் தகனக்கிரியைக்காக ஊறணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வல்வெட்டி.

(CS/30547)(11,17)

தகவல்:-
குடும்பத்தினர்.

## பொருள்கள் விற்பனைக்கு

தீரந்தி, பலகை, தடி (முதிரை, வேம்பு, தேக்கு) விற்பனைக்குண்டு.

ஓடருக்கு கதவுகள், நிலைகள், ஏனைய தள பாடங்கள் செய்தும் தரப்படும்.

சுதுமலை வடக்கு,
அம்மன் கோயிலடி,மானிப்பாய்.

தொடர்பு
077 215 1021

(CS30549)(11,17)

## வீடு வாடகைக்கு

பரந்தன் சந்தியில் இருந்து **500m** தூரத்தில் சகல வசதிகளுடன் கூடிய பெரிய வீடு வாடகைக்கு உண்டு.

அலுவலக பாவனைக்கும் உகந்தது.

தொடர்புகளுக்கு:- 077 034 4254

## தேவை

வாகன சாரதி தேவை

தொடர்புகள்- 076 144 9918

## பணிப்பெண் தேவை

யாழ் நகரில் வீட்டு வேலைக்கு பணிப்பெண்கள் தேவை. தங்கிஇருந்தும் வேலை செய்ய முடியும் வந்துபோகவும் முடியும்

077 769 8553, 076 346 0589

## கேற் விற்பனைக்கு



(CS/30555)(11,17)

2 விதமான 12 அடி நீளமுள்ள இரும்புக்கேற் விற்பனைக்கு உண்டு. ஒன்று 5 வருடத்துக்கு முன்பு வாங்கியது. வாங்கிய விலை 167,000/-. விற்கும் விலை 120,000/- மற்றையது 50,000/- உடனடியாக விற்கப்படும்.

தொடர்புக்கு:- 076 251 4947

## அறிவித்தல்


ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச்சங்க ஆண்டுப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 25.01.2020 சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வைத்தியசாலை மகாநாட்டு மண்டபத்தில் வைத்திய அத்தியட்சகர் வைத்திய கலாநிதி ப.திலீபன் அவர்கள் தலைமையில் நடைபெறவுள்ளது. இப்பொதுக்கூட்டத்தில் நலன்விரும்பிகள் அனைவரையும் கலந்து ஆலோசனை வழங்கி வைப்பதுடன் புதிய நிர்வாக சபையைத் தெரிவு செய்து வைத்தியசாலையின் வளர்ச்சிக்கும், சேவைக்கும் உறுதுணை புரியுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சகாதேவன். செயலாளர், (CS/30552)(11,17)

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ

## மரண அறிவித்தல்

தோற்றம் 30 . 10 . 1952



மறைவு 11 . 01 . 2020

### சதாசிவம் சிவசரவணபவ

(படவரைஞர், இளைப்பாறிய விவசாய திணைக்கள உத்தியோகத்தர் - வவுனியா)

சந்தைவீதி. உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், உக்கிளாங்குளம், வவுனியாவில் வசித்தவரும் தற்போது 71. கலைமகள் வீதி. கல்வியங்காட்டை வதிவிடமாகவும் கொண்ட சதாசிவம் சிவசரவணபவ நேற்று (11.01.2020) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை சதாசிவம் - சரஸ்வதி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான துரைராசா - அரியமலர் தம்பதிகளின் பாசமிகு மருமகனும் ரஞ்சிதராணியின் பாசமிகு கணவரும் கஜந். யசிகாந் ஆகியோரின் பாசமிகு தந்தையும் கன்னிகா, சரவணியா ஆகியோரின் மாமனாரும் ரிஷ்வினின் அன்புப் பேரனும் ஜெகத்குருதாஸ், Dr.விமலகாந்தன். ஜெகன்மோகனதாஸ். காலஞ்சென்ற நாகநந்தினி ஆகியோரின் உடன்பிறவா சகோதரனும் காலஞ்சென்ற ரவீந்திரராசா மற்றும் ரதிராணி, சிறீதரன், வசீகரன், ரூபாகரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.01.2020) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு 71. கலைமகள் வீதி. கல்வியங்காட்டில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் செம்மணி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

71, கலைமகள் வீதி,
கல்வியங்காடு.

(CS 30290)(14.17)

தகவல் :
குடும்பத்தினர்.

077 8673385/ 077 2111106/ 077 6021059

## வாடகைக்கு

நல்லூர் அருகில் **3**அறை வீடு. A/C மற்றும் தளபாடங்களுடன் நாள், கிழமை, வருட வாடகைக்கு விடப்படும்.

தொடர்பு:- 077 397 3166

## பெண் அலுவலக உதவியாளர் தேவை

ஆரம்ப வேலை நேரம் : காலை 8.00 மணி
வேலை முடியும் நேரம் : மாலை 5.00 மணி
பில் பதிவுசெய்தல், தொலைபேசி இயக்குதல், எழுத்து வேலைகள்,
சம்பளம் - **15000/=**

15.01.2020 காலை 9.00 மணி - 2.00 மணிவரை
நேரில் வரவும்

தொடர்பு - 021 221 6092, 071 762 2719 (சுகுமாறன்)

**Airtec Weighing Machines**
57 Sir Ponampalam Ramanathan Road
Via Campus Road
Near Raja Creen House Jaffna

## இலவச ஆங்கில, கணினி வகுப்புக்கள்

பிரிவு - 23

- Diploma in English / SpokenEnglish
- Diploma in Ms Office/ ICT

- காலம் : 3 மாதங்கள்
- அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்

ஆரம்பம் 18, 19 01.2020

பிரிவு - III


- Diploma in Sinhalam

அடிப்படையிலிருந்து எழுத பேச. பரீட்சைகளிற்கு தோற்றுபவர்களுக்கான பிரிவுகள். பிரத்தியேக வகுப்புக்கள் ஒழுங்கு செய்துதரப்படும்.

IPS
யாழ். பல்கலைக் கழகத்திற்கு அண்மையில்
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
T.P 021 434 0229,
077 602 1794

## மரண அறிவித்தல்

பிறப்பு 20 ... 01 ... 1940



இறப்பு 10 ... 01 ... 2020

### தம்பு சோமசுந்தரம்

விடத்தல்தீவைப் பிறப்பிடமாகவும், ஆஸ்பத்திரி வீதி. மன்னாரைப் வசிப்பிடமாகவும் தற்பொழுது நுணாவில் மத்தி சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பு சோமசுந்தரம் கடந்த **(10.01.2020)** வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பு சின்னாச்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் கண்மணி தம்பதிகளின் மருமகனும் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் சுந்தரேஸ்வரன் குமரேசன், சுந்தரறஜனி (கனடா), சுபாசினி (லண்டன்), காலஞ்சென்ற ஜனார்த்தனன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் வசந்தகுமாரி, சாந்தி. மோகனராஜன் (கனடா), சதீசன் (லண்டன்) ஆகியோரின் மாமனாரும் கோகுலன், கோபிகன், வினுஜன், றேஸ்மி. திவ்வியன் ஆகியோரின் பாசமிகு பேரனும் பரமேஸ்வரி. கணேசன், சிவலிங்கம், இராமநாதன், ஜெகநாதன், இராஜேஸ்வரி, கௌரீஸ்வரி, கேதீஸ்வரநாதன், ஈஸ்வரி, கேதீஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரனுமாவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் நாளை **(13.01.2020)** திங்கட்கிழமை பிற்பகல் 2 மணியளவில் நடைபெற்று சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:- மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்
தொடர்பு:- 076 586 2225

## 31 ஆம் நாள் நினைவு அழைப்பு



கடந்த 15.12.2019 ஞாயிற்றுக்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர்

**அமரர்**
**தம்பிப்பிள்ளை சுந்தரம்பிள்ளை**

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று 12.01.2020 ஞாயிற்றுக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்திய கிரியைகள் 14.01.2020 செவ்வாய்க்கிழமை அன்னாரது இல்லத்திலும் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்களும் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

பொன்னகர் மத்தி,
கிளிநொச்சி.

மனைவி
திருமதி சு.பரஞ்சோதி

## மரண அறிவித்தல்

### திருமதி தவேஸ்வரி மகேஸ்வரன்



வீமன்காமம் வடக்கைப் பிறப்பிடமாகவும் ஆடியபாதம் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவிலை வதிவிடமாகவும் கொண்ட திருமதி தவேஸ்வரி மகேஸ்வரன் நேற்று (11.01.2020) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிறிஸ்கந்தராசா மற்றும் தங்கச்சியம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற நடராசா மற்றும் பார்வதி தம்பதிகளின் (நெடுந்தீவு), (தற்காலிகம் ஒட்டங்குளம்) அன்பு மருமகளும் காலஞ்சென்ற நடராசா மகேஸ்வரனின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற கஜனி மற்றும் கேதுசன் ஆகியோரின் அன்புத்தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.01.2020) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று மு.ப 10.30 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஆடியபாதம் வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்

தகவல்: குடும்பத்தினர்
077 538 8197

### வீடு வாடகைக்கு

யாழ்.இந்துக்கல்லூரிக்கு அண்மையில் உள்ள ஓடை ஒழுங்கையில் சிறிய தனி வீடு. சிறு குடும்பத்திற்கு வாடகைக்குண்டு.

**077 244 5706**

### விற்பனையாளர் தேவை

படி வாகனம் அல்லது ஆட்டோவில் கப்யூஸ் கொண்டு விற்பனை செய்யக் கூடியவர்கள் தேவை.

**076 579 4090**

### அம்மா இல்லம்

முதியோர் நோயாளர் பராமரிப்பு டாக்டரின் கண்காணிப்பில் நவீன வசதிகளுடன் யாழ்ப்பாண நகரில் இயங்குகின்றது. சேவைக்கு

**077 712 6859/ 077 712 6857**

### வீடு விற்பனைக்கு

கொக்குவில் கிழக்கு கலைவாணி மில் ஒழுங்கையில் 2 பரப்புக் காணியில் அமைந்துள்ள வீடு விற்பனைக்குண்டு.

தரகர் தேவையில்லை.

**075 363 9762**

## வேலையாள்கள் தேவை

மேசன், தச்சன், குழாய் பொருத்துநர், மாபிள் வேலை செய்பவர்கள், இரும்பு அலுமினியம் (பொருத்துதல், ஒட்டுதல்), இயந்திர உபகரணங்கள் பொருத்துதலும், திருத்தலும் (CCTV, AC, Etc...), மின் வல்லுநர், வர்ணம் பூசுபவர், கூலி வேலையாள்கள், வாகனம் செலுத்துநர், வீட்டுப் பணியாள்கள், துப்புரவாளர்கள், மரம் வெட்டுபவர்கள், பழம் பிடுங்குபவர்கள் தேவை.

**(முற்பதிவு அவசியம்)**

தொழில் தெரிந்தவர்களும், தொழில் தேடுபவர்களும் தொடர்பு கொள்ளவும்.

**077 996 1468**
**077 440 1606**

(CS 30453) (14.17)

ASTP Tec Pvt Ltd, a well established computer and office automation products supplier and service provider in Northetn Province

STP
Your Partner in IT Solution

### VACANCY: ACCOUNTANT

Preferably 2-5 years experiences in handling Government/ Corporate customer and following attributes are encouraged to apply

1. Excellent knowledge of practices, Accounting, Auditing
2. Ability to implement Stock management and develop customers Account management
3. Good analytical, Interpersonal & Communication Skills
4. Age limit 22-40 Years

Send your CV along with experiences certificate latest by 16th January 2020 at: info@stpjaffna.com

*Team Leader*

ASTP Tec Pvt Ltd, 49, 1st Cross Street, Jaffna:0212222674

### காணி குத்தகைக்குத் தேவை

கொக்குவில், கோண்டாவில், இணுவில் பகுதியில் 3 பரப்புக்கு மேற்பட்ட காணி களஞ்சியசாலை அமைப்பதற்கு குத்தகைக்குத் தேவை.

**076 730 4470**









## மணிவிழா வாழ்த்து



எமது பாடசாலை ஆசிரியர்

**திருமதி கனகேஸ்வரி காங்கேசன்**

B.A (Hons) Dip. in Edu, M.phill

**சேவை விவரம் : (1989 - 2020)**

அவர்களுக்கு எமது மணிவிழா வாழ்த்துக்கள்

**பாடசாலைச் சமூகம்**

**யா/பன்னாலை சேர் கனகசபை அ.த.க. பாடசாலை**

**தெல்லிப்பழை**

(cs.30520) (13.

## STUDY IN MALAYSIA

வெளிநாட்டில் உயர் கல்வியை தொடர விரும்பும் மாணவர்களுக்கான விசேட இலவச கருத்தரங்கு முதன்முறையாக யாழில்

- ✓ Business & Accounting
- ✓ Creative Arts & Design
- ✓ Engineering & The Built Environment
- ✓ Health Science
- ✓ Information Technology

அனுமதி இலவசம்

Venue : Tilko Hotel, Jaffna
Date : 12th Jan 2020
Time : 3.00pm onwards

To reserve your free seat, please text/WhatsApp your name to
0761666630/ 0761666640

Braintree campus

## ஆத்மசாந்திப் பிரார்த்தனை

தோற்றம் 12 . 07 . 1950



மறைவு 13 . 12 . 2019

**அமரர் திருமதி**

**பாக்கியதேவி சுந்தரமூர்த்தி**

*எமக்கொரு தாய்போல் தனக்கில்லையே என்று*
*இறைவன் அழைத்தானோ !*
*அந்த தாய்மையைத் தந்த இறைவன் கூட*
*இனியிந்த தாய்போல் வருவானோ !*

இன்று(12.01.2020) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் ஆத்மசாந்தி பிரார்த்தனையில் கலந்து பிரார்த்தித்து மதிய போசனத்திலும் பங்கு கொள்ளுமாறு அன்புள்ளங்கள் யாவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(CS 30477) (14.17)

**சந்தை வீதி,**
**ஆவரங்கால்.**

**குடும்பத்தினர்.**

**077 4301975/ 077 6395747/ 021 2231930**

## உடல் எடை குறைய வேண்டுமா?

◎ எடை கூடுகிறதா?
◎ வயிறு. மார்பு குறைய வேண்டுமா?
◎ உடல் எடை குறைகிறதேயில்லை என்கின்ற கவலையா?

**பால்மா குளிசை** - வயிறு. மார்பு குறைக்கும் கிறீம் 15 நாள்களில் அற்புத மாற்றத்தை உணர்வீர்கள்.

## தலைமுடி நீளமாக வளர வேண்டுமா?

தலைமுடி வளரவேண்டுமா? பேன், பொடுகு தொல்லையா? ➤முடிகொட்டுகிறதா? ➤இளநரையா? ➤தலையிடியா? முடி அடர்த்தி இல்லையா?➤புதிதாக முடி முளைக்க வேண்டுமா?
➤பொன்னாங்காணி? கரிசலாங்காணி. இலாமிச்சை வேர். கருவேப்பிலை. வல்லாரை. நெல்லி சேர்த்துக்காய்ச்சிய எண்ணெய் குளிசை
இந்த எண்ணையைப்பாவித்து பயனடைய

**077 210 6155 221. நாவலர் றோட். யாழ்ப்பாணம்.**

## விற்பனைக்குண்டு

**Tvm Transport கட்டடப் பொருள்களான**

- Metal - 1", 1½" , ½", 9x6
- Chips
- Mix
- Dust
- Sand
- Block Stone

போன்ற பொருள்கள் குறைந்த விலையில் சிறந்த தரமான பொருள்களை எங்களிடம் பெற்றுக்கொள்ளலாம். (AVA/640)(11,17)

**TVM TRANSPORT**
**077 766 6620**

## வல்வை ஆண்கள் பெண்கள் முதியோர் இல்லம்

வல்வை ஆண்கள் முதியோர் இல்லம் முதியோருக்கான வசதிகளுடன் கூடிய புதிய இடத்துக்கு மாற்றப்பட்டுள்ளது.

ஊறிக்காடு வல்வெட்டித்துறையில் ஆண்கள் முதியோர் இல்லம், பெண்கள் முதியோர் இல்லம் ஆகியன தனித்தனியாக கடந்த சில ஆண்டுகளாக இயங்கிவருகின்றது.

நியாயமான மாதாந்தக் கொடுப்பனவு செலுத்தி இந்த இல்லத்தில் இணைய விரும்புவோர் தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கங்கள். (AVA/1084)(11,17)

**021 226 5551, 077 810 6857, 077 154 2067**
**ஊறிக்காடு, வல்வெட்டித்துறை.**

## மரண அறிவித்தல்



**திருமதி ரஞ்ஜி திஸ்சபாலசிங்கம்**

திருமதி ரஞ்ஜி திஸ்சபாலசிங்கம் கடந்த **(08.01.2020)** புதன் கிழமை அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் திஸ்சா சத்தியநாதன் அவர்களின் அன்பு மனைவியும். ரெபேக்கா. திலானி (கட்டார்) மற்றும் ரஜீவ் (அமெரிக்கா) ஆகியோரின் பாசமிகு தாயாரும். அன்டன் கலிஸ்டஸ் மொறாயஸ். ஜெனிபர் எலன் சத்தியநாதனின் மாமியாரும். ஆமொஸ். அன்ரூ. கேலேப். மேர்சி. ஜொசுவா. லில்லி. பீபி. மைக்கா. ஏஷர். க்ளோவி ஆகியோரின் அன்பு பாட்டியும். தேவி ராஜசூரியர் (போதகர் AG மானிப்பாய்). ஜானகி அமரசிங்கம். நந்தன் குணரட்ணம் (அவுஸ்ரேலியா). மோகன் குணரட்ணம் (லண்டன்). சாந்தி. பெர்ணான்டோ ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அலிஸ்விலா உரும்பிராய் இல்லத்தில் **13.01.2020** திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு இறுதி ஆராதனையின் பின். நல்லடக்கத்திற்காக கோப்பாய் பொதுமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர்கள். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: பாஸ்டர் சாம் ராஜசூரியர் (0777238300)**

## புலிகளின்...

ஒன்றிணைந்து செயற்படுவதற்கு நேற்று இணங்கியுள்ளன. 4 கட்சிகள், 3 கட்டமைப்புக்கள் நேற்றுமுதல் ஓரணியில் இயங்குவதற்குச் சம்மதித்துள்ளன.

இது தொடர்பான கலந்துரையாடல் வவுனியாவில் நேற்று இடம்பெற்றது. கலந்துரையாடல் முடிவில் வவுனியாவிலுள்ள தனியார் விடுதியில் ஊடகவியலாளர் சந்திப்பு இடம்பெற்றது. இந்தச் சந்திப்பில் ஊடகப் பேச்சாளர் க.துளசி தெரிவித்ததாவது:

தமிழீழ விடுதலை புலிகள் அமைப்பில் இருந்து போராடி மறுவாழ்வு பெற்ற போராளிகள் போருக்கு பின்னர் பல்வேறு தளங்களிலே செயற்பட்டிருந்தனர். விடுதலைப் புலிகளின் ஜனநாயக வெற்றிக்காக பல்வேறு தளங்களில் செயற்பட்டுக் கொண்டிருந்த அனைத்துப் போராளிகளும், சில கட்டமைப்புகளும் நேற்று முதல் ஒன்றிணைந்துள்ளனர்.

தமிழர்களது இனப் பிரச்சினைக்கு சாத்தியமான விடயங்கள் தொடர்பாக ஆராய்வது. அரசியல் கைதிகளின் விடுதலை. வேலை வாய்ப்பிலே போராளிகளை முன்னிலைப்படுத்துவது போன்ற விடயங்களை பிரதானமாக ஆராயவுள்ளோம். எங்களுடன் இருந்து. பயணித்த பல நண்பர்கள் இன்று காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். அவர்களது குடும்பங்களின் வலிகளை உண்மையாக உணர்ந்தவர்கள் நாங்களே. அவர்களது விடயம் தொடர்பாகவும் சாத்தியமான முறையில் நாம் ஆராய்வோம்.

இனப்பிரச்சினைக்கு 13ஆவது திருத்தத்தை அடைப்படைத் தீர்வாகக் கொண்டு செயலாற்றுவது சிறந்தது என்று கருதுகின்றோம். தமிழ் மக்களது அபிலாசைகள் தொடர்பாக இலங்கை அரசின் அனைத்துத்தரப்புகளுடனும் பேசுவதற்கு தயாராக இருக்கிறோம். இன்றைய சூழலில் 75. 80 வயதுக்கு பின்னரும் புதிய கட்சிகளை ஆரம்பித்து தேர்தலை நோக்கி பலர் பயணிக்கிறார்கள். இள வயதிலே தமிழ் மக்களுக்காக அவயங்களை இழந்த போராளிகள் ஜனநாயக வெற்றிக்காக ஒன்றிணைந்துள்ளார்கள். தேர்தலில் நிற்பது தொடர்பாக தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர் நாம் சிந்திப்போம்.

இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் தேசங்களின் விடுதலைக்காக ஆயுதம் ஏந்தி போராடிய அமைப்புகள் அத்தனையும் குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் ஆயுதம் போராட்டத்தை முடிவுக்கு கொண்டுவந்து நாடாளுமன்ற அரசியல் ஊடாக தமது நோக்கங்களினை நிறைவேற்றப் பயணித்திருக்கிறார்கள். அதில் இறுதியாக ஜனநாயக அரசியலை நோக்கி திரும்பியிருப்பது விடுதலைப் புலிகள் அமைப்பு. எமது பிரச்சினைகளை முடிவுக்குக் கொண்டுவர முடியுமா என்பதற்காக நாம் முனைப்புடன் செயுற்படுகிறோம் - என்றுள்ளது.

(ஒ,5,18,110)

## வீடு வாடகைக்கு

தெல்லிப்பழை புகையிரத வீதியில் புகையிரத நிலையத்துக்கும் மருத்துவ மனைக்கும் இடையே வீதியோரமாக வீடு வாடகைக்கு உண்டு.

**071 838 1077, 077 941 6393**

## உடனடி வேலைவாய்ப்பு

பிரபல்யமான கம்பனிக்கு யாழில் அலுவலக உதவியாளர் O/L தகைமையுடன் தேவை. A/L எடுத்தவர்களும் விண்ணப்பிக்கலாம். (ஆண்/பெண்)

**076 112 4145**

## வேலையாள்கள் தேவை

வடிவமைப்பாளர் (போட்டோசொப்). வரவேற்பாளர் தேவை

**ஈஸ்வா டியிற்றல் அச்சகம்**
**461, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்**
**077 165 9845**

# வீதி புனரமைப்பு

யாழ்ப்பாணம் ஜன.12

யாழ்ப்பாணம் தெல்லிப்பழை புற்று நோய் வைத்தியசாலையின் உள்ளக வீதி புனரமை க்கப்பட்டுள்ளது. தெல்லிப்பழை வைத்திய சாலையின் பிரதான வாயிலிலிருந்து ஏனைய விடுதிகளுக்குச் செல்லும் வீதியே இவ்வாறு புனரமைக்கப்பட்டுள்ளது. இந்த வீதி சேதமடைந்து பாவனைக்கு மிகவும் கடினமாயிருந்தமையினால் திருமதி. அருந்ததி எட்வேட்பிள்ளையின் வேண்டுகோளுக்கு இணங்க இராணுவத்தால் கொங்கிறீட் வீதியாகப் மீள் புனரமைக்கப்பட்டு நேற்று முன்தினம் யாழ். பாதுகாப்பு படைகளின் கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் ருவன் வணிகசூரியவின் தலைமையில் திறந்து வைக்கப்பட்டது.



இந்த நிகழ்விற்கு 51வது படைகளின் கட்டளைத் தளபதி இராணுவ உயரதிகாரிகள் திருமதி. அருந்ததி வடிவேல்பிள்ளை வைத்திய அதிகாரிகள் உள்ளிட்ட வைத்தியசாலை சமூகத்தினர் மற்றும் பிரதேச மக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

## ACCOUNTS EXECUTIVE PROCESSING PLANT - IYAKKACHCHI

Our Processing Plant situated at Iyakkachchi in Kilinochchi District, is engaged in the manufacture and packing of popular consumable products for world market.

We are looking for an ambitious, systematic young person to fill the above vacancy.

The successful candidate will match the following criteria

- Suitable Accounting Qualification.
- Have about 3 years' experience in preparing Accounts and Management Information timely in manufacturing environment.
- Ability to provide required Accounting Information regularly and timely and assist the operational team in achieving Company's Vision
- Be familiar with modern Accounting Packages & management tools
- Be between 25 – 35 years of age

All applications including names & contact numbers of two referees of good standing must reach us within 03 days of this advertisement by E-mail –

**mdheritagepremierfoods@gmail.com**

## சம்பந்தன்...

தமிழ் அரசு கட்சியின் மூத்த துணைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் வலியுறுத்தியுள்ளார்.

நாடாளுமன்றத் தேர்தலில் இரா.சம்பந்தன், மாவை சேனாதிராசா ஆகியோர் போட்டியிடாமலிருப்பதென்றும் அவர்கள் தேசியப் பட்டியல் ஆசனம் ஊடாக நாடாளுமன்றத்துக்குச் செல்லவுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியிருந்தன. இது தொடர்பிலேயே, சி.வி.கே.சிவஞானம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அனுபவம் வாய்ந்த தலைவர்களான இரா. சம்பந்தன், மாவை.சேனாதிராசா ஆகியோர் அடுத்த தேர்தலில் கட்டாயம் போட்டியிட வேண்டும். அனுபவம் வாய்ந்த தலைவர்களை ஒதுக்க முடியாது. அவர்கள் போட்டியிடா விட்டால் தமிழ் அரசு கட்சிக்கும், தமிழ் தேசிய கூட்டமைப்புக்கும் நிச்சயம் பாதிப்பு ஏற்படும்.

யாழ்ப்பாணத்தில் மாவை போட்டியிடா விட்டால் பெரும் பாதிப்பு ஏற்படும். அவர் மாவட்டத்தின் முதன்மை வேட்பாளராக போட்டியிட வேண்டும். இரா. சம்பந்தன் திருகோணமலையில் நிச்சயம் போட்டியிட வேண்டும். அவர் முழுமையாக செயற்பட முடியாத நிலை மை உருவாகினால், அவர் தமிழ் தேசிய கூட்டமைப்பின் பெருந்தலைவராக செயற்பட, மாவை சேனாதிராசா தலைவராக செயற்பட வேண்டும்.

தேர்தலில் போட்டியிட மாட்டார் என்ற செய்தி வெளியான போது, மாவை சேனாதிராசாவை நான் நேரில் கேட்டேன். தேர்தலில் போட்டியிடுவதா இல்லையா என்பதை தானே முடிவெடுப்பேன். ஏனையவர்கள் அந்த முடிவை எடுக்க முடியாது என அவர் தெளிவாக சொல்லியுள்ளார். அவர் தேர்தலில் போட்டியிடுவார். போட்டியிட வேண்டும். கட்சியின் மாவட்ட கிளையும் அதில் உறுதியான நிலைப்பாட்டை எடுக்கும் - என்றார். (ஒ.5)

## மரண அறிவித்தல்

தோற்றம்
20 . 04 . 1949



மறைவு
10 . 01 . 2020

### பொன்னுத்துரை பவானந்தன்

(ஓய்வுபெற்ற தபால் ஊழியர் காங்கேசன்துறை, தையிட்டி கணையாவிற் பிள்ளையார் கோவில் பொருளாளர்)

தையிட்டியை பிறப்பிடமாகவும் நெட்டிலிப்பாய் கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை பவானந்தன் (ஓய்வுபெற்ற தபால் ஊழியர் காங்கேசன்துறை, தையிட்டி கணையாவிற் பிள்ளையார் கோவில் பொருளாளர்) கடந்த (10.01.2020) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### திருமதி கமலேஸ்வரன் மகேஸ்வரி



ஏழாலை மேற்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி கமலேஸ்வரன் மகேஸ்வரி நேற்று **(11.01.2020)** சனிக்கிழமை இறைபதமடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் முத்துப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற கமலேஸ்வரன் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான ஞானம்மா, யோகம்மா, சிவபாதம், திலகமணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் லீலாவதி மற்றும் காலஞ்சென்றவர்களான கனகசுந்தரம், கந்தசாமி, கதிரவேற்பிள்ளை ஆகியோரின் மைத்துனியும் சரோஜினிதேவி (டென்மார்க்), புஸ்பதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும் பூலோகராஜா (டென்மார்க்), சிவராசா ஆகியோரின் பாசமிகு மாமியாரும் அசோத் (டென்மார்க்), கிருத்திகா, ரமணிகரன், அஸ்வதா (டென்மார்க்), சிமோன் (டென்மார்க்), ஆகியாரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று **(12.01.2020)** ஞாயிற்றுக்கிழமை முற்பகல் **9.00** மணியளவில் ஏழாலையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக ஏழாலை உசத்தியோடை இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஏழாலை மேற்கு, சுன்னாகம். தகவல்:- சி.ரமணிகரன் பேரன்.

தொடர்பு:- 0774235943

British BUSINESS COLLEGE
Where Students Come First

BBCஇன் புதிய அனுமதிகள்

BBC பாலர் பாடசாலையின்
20ஆவது வருடத்தில் சிறந்த கல்விச்சேவையுடன்
2020ஆம் ஆண்டிற்கான அனுமதிகள்

BBC
Early Learning Schools

சர்வதேச தரத்தினாலான Canada கல்லூரியின்
பயிற்றுவிப்பாளர்களினால்
பயிற்றுவிக்கப்பட்ட ஆசிரியர்கள்

- சர்வதேச அங்கீகாரம் பெற்ற நவீன கல்வித்திட்டம்
- ஆங்கிலமொழி மூல கற்கை வகுப்புக்கள்
- தமிழ் கட்டாய பாடம்
- மாதந்தோறும் செயற்பாட்டுத் திறனையும் அறிவையும் வெளிக்கொணரும் விஷேட சமூகம் சார் நிகழ்வுகள்
- விளையாட்டுடன் கூடிய கற்கைநெறிகள்

2 முதல் 5 வயது குழந்தைகளுக்கான கற்கைநெறிகள்

| பிரிவு | Play Group | Montessori | Pre School |
|---|---|---|---|
| வயது | $2^+$ முதல் 3 வரை | $3^+$ முதல் 4 வரை | $3^+$ முதல் 5 வரை |
| காலம் | 1 வருடம் | 1 வருடம் | 1 வருடம் |

No Admission Fees
No Monthly Fees



- வருடத்தின் எந்த மாதத்திலும் குழந்தைகளை சேர்க்கமுடியும்
- கற்கை முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்

வளாகங்கள்

நல்லூர் | யாழ்ப்பாணம் | மானிப்பாய் 1 | மானிப்பாய் 2 | சங்கானை
அளவெட்டி | மல்லாகம் | கோப்பாய் | புத்தூர் | பருத்தித்துறை | சாவகச்சேரி

தலைமையகம் : British Business College
இல.653, நாவலர் வீதி நல்லூர், யாழ்ப்பாணம். தொ.இல : 077 408 3656 / 077 468 2951

# வீட்டு வன்முறை

எஸ். கிசோபனா

இன்றைய காலத்தில் உலகில் பல்வேறு வன்முறைகள் காணப்படுகின்றன. யுத்தங்கள் வன்முறைகள் ஆர்ப்பாட்டங்கள் என்பன அவற்றில் சில. எனினும் இன்றைய காலப்பகுதியில் பெண்களுக்கெதிரான வன்முறைகள் குடும்பத்திற்குக் குடும்பம் அதிகரித்தவண்ணம் உள்ளதுடன் அதன் விளைவுகளும் அதிகரித்தவண்ணம் உள்ளன.

எமது சமூக அமைப்பினைப் பொறுத்தவரையில் பெண்ணிற்கு பாதுகாப்பு வழங்குபவர்களாக தந்தை, கணவன், மகன், மருமகன் என குடும்ப ஆண் உறுப்பினர்கள் காணப்படுகின்றனர். இள வயதிலே தந்தையின் ஆதிக்கத்திற்குள் அடங்கும் பெண், திருமணத்திற்கு பின்பு கணவனின் அதிகாரத்திற்குள் அடங்குகின்றாள். வயோதிப பருவத்தில் மகனின் ஆதிக்கத்திற்குள் அடங்கிப்போகின்றாள். எனவே குடுப்ப நிறுவனமானது பெண்களைப் பொறுத்தவரை ஒரு அடக்குமுறைக்குட்படுத்தும் அமைப்பாகவே காணப்படுகின்றது.

பொதுவாக இன்றைய காலத்திலே, குடும்பத்தைப் பொறுத்த வரை பெண் என்பவள் உடலியல், உளவியல், பொருளியல் மற்றும் பாலியல் ரீதியாக வீட்டு வன்முறைக்கு உட்படுத்துகின்ற போக்கு அதிகரித்துக் காணப்படுகின்றது. அதாவது இலங்கையில் குடும்ப வன்முறைகள் அதிகரித்துள்ளமையை ஆய்வுப் புள்ளிவிபரங்கள் மூலம் தெரிந்து கொள்ளமுடிகிறது. இவ்வகையில் 60 % க்கும் மேலான பெண்கள் வீட்டு வன்முறைக்கு உட்பட்டுள்ளமை தெரியவருகின்றது. வன்முறை என்பது 'மனிதனானவன் தனது அதிகாரத்தையும் ஆளுமையையும் பயன்படுத்தி தன்னைச் சார்ந்த மக்களையும் தன்னைச்சாராத மக்களையும் தனது ஆளுமைக்குள் உட்படுத்துவதே வன்முறை என்பர். அந்தவகையில் வீட்டுவன்முறை என்பதனை நோக்குகையில் 'கணவன் மனைவிக்கிடையில் பல்வேறு நிலைப்பாடுகள் தொடர்பிலான முரண்பாட்டுத் தன்மை வீட்டு வன்முறைக்கு வெளிப்படையாக அமைகிறது. அதாவது குடும்பத்திற்குள் ஏற்படுகின்ற உள்ளக மற்றும் வெளியக ரீதியிலான அனைத்து ரீதியிலுமான இம்சையைக் குறித்து நிற்கிறது.

இப் பெண்களுக்கெதிரான வன்முறை தொடர்பில் ஐக்கியநாடுகள் விசேட அறிக்கையாளரான ராதிகா குமாரசுவாமி என்பவர் குறிப்பிடுகையில் 'குடும்பத்தில் பெண்கள் கொண்டிருக்கும் நடிபங்கு காரணமாக அவர்களை இலக்கு வைத்துள்ள அல்லது குடும்பவட்டத்துள் நேரடியாகவோ மறைமுகமாகவோ பெண்கள்மீது தாக்கம் புரிவதை நோக்கமாகக் கொண்ட குடும்ப வட்டத்துக்குள் புரியப்படும் வன்முறையே ஆகும் என்றார்.

இந்நிலையில் ஐக்கியநாடுகள் பொதுச்சபை 1999 டிசம்பர் 17 ம் திகதி கூடியபோது ஆண்டு தோறும் நவம்பர் 25ம் திகதியை பெண்களுக்கான வன்முறை ஒழிப்பு சர்வதேச தினமாக பிரகடனம் செய்யும் தீர்மானத்தை நிறைவேற்றியது. இத்தீர்மானம் ஐக்கியநாடுகள் சபையின் 54 % 134 இலக்க பிரேரணையாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இலங்கையைப் பொறுத்தவரை, பெண்களிற்கெதிரான வன்முறை தொடர்பில் 1990களில் சிக்கல்கள் காணப்பட்டன. இலங்கை நாட்டினைப் பொறுத்த வரை 1993 - 1996 க்கும் இடைப்பட்ட காலத்தில் பொலிஸ் நிலையங்கள் பலவற்றில் சிறுவர் மற்றும் பெண் உத்தியோகத்தர்களும் கடமைக்கு அமர்த்தப்பட்டாலும் பெண்கள் மீதான வீட்டு வன்முறை தொடர்பில் கவனம் செலுத்தப்படவில்லை. வீட்டு வன்முறை என்பதனை தனிப்பட்ட பிரச்சினையாகவே கருதலாயினர். இருப்பினும் பெண்கள் அமைப்புக்கள், சட்டவல்லுனர்கள், அர்சசாரா அமைப்புக்கள் போன்றவற்றின் உந்தலினால் 2005ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் இலங்கைப் பாராளுமன்றம் 34ஆம் இலக்க வீட்டுவன்முறைத் தடைச்சட்டம் கொண்டு வரப்பட்டது.

இலங்கையிலே வீட்டுவன்முறை தொடர்பில் 60க்கும் மேற்பட்டோர் உடலியல், உளவியல், பாலியல் மற்றும் பொருளாதார வன்முறை என ஏதோ ஒரு வன்முறையால் பாதிக்கப்படுகிறார்கள். சிறுவர், பெண் பிரிவு அமைந்துள்ள பொலிஸ் நிலையங்கள் இருந்த 36 இடங்களில் 90 000 வன்முறை பதியப்பட்டுள்ளன (2018 ஆம் ஆண்டு மகளிர்,சிறுவர் தொடர்பான பொலிஸ் அறிக்கை). இதில் 773 சம்பவங்கள் பாரதூரமாகவும் பதிவுசெய்யப்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

மேலும் யாழ்ப்பணத்தினைப் பொறுத்தவரை பெண்களிற்கெதிரான வீட்டு வன்முறையின் தன்மை அதிகரித்த வண்ணம் காணப்படுகிறது. ஒரு மாதத்திலேயே 200 க்கு மேற்பட்ட வன்முறைகள் பதியப்படுவதாக மாவட்டச் செயலக அறிக்கைகள் வழியாக அறிய முடிகிறது.

அவற்றில் பெரும்பாலான வீட்டு வன்முறைகள் பின்வரும் வடிவங்களில் அமைந்து காணப்படுகின்றன. அவையாவன. காயம் ஏற்படல், உதைத்தல், குத்துதல் எனும் உடலியல் ரீதியான வன்முறைகளும் உளவியல் ரீதியாக அவமரியாதையாக நடத்தல், மற்றவர்கள் முன்னிலையில் கேலி செய்தல் முதலானவையும் , பாலியல் ரீதியாக : பாலியல் வல்லுறவிற்கு உட்படுத்தல், நோயுற்ற நிலையில் பாலுறவிற்கு கட்டாயப்படுத்தல் போன்றனவும் மற்றும் பொருளாதார ரீதியாக சீதனம் கேட்டுத் துன்புறுத்தல், வீட்டுச் செலவிற்கு போதிய பணம் கொடுக்காமை ஆகிய வீட்டு வன்முறைகளிற்குள் பெண்கள் உள்ளாக்கப்படுகின்றனர்.

இவ்வாறான வீட்டுவன்முறைகளிற்கு பல்வேறு மட்டக் காரணிகளும் செல்வாக்குச் செலுத்துகின்றன. அவற்றில் சமூகக் காரணிகளான பின்தங்கிய சூழலில் வாழ்தல், கல்வியறிவின்மை போன்றனவும் குடும்ப காரணிகளான புரிந்துணர்வின்மை திருமணத்திற்கு அப்பாலானபாலுறவு போன்றன காரணங்களாகவுள்ளன.

இவ்வாறான வீட்டு வன்முறைகளினால் பெண்கள் சமூகத்தில் இருந்து புறந்தள்ளப்படல், சமூகச் செயற்பாடுகளில் ஈடுபடமுடியாமை பேர்ன்றனவும் குடும்பப்பிரிவு, பிள்ளைகள் விலகல் நடத்தை நோக்கிச் செல்லல் போன்றனவும் மனச்சோர்வு , தூக்கமின்மை (உளவியல் ரீதியான பாதிப்பு), உடலியல் ரீதியான நோய்கள் என பல்வேறுமட்ட ரீதியில்பெரும் சவால்களை எதிர்கொள்கிறனர்.

இவ்வாறான வீட்டுவன்முறைச் சம்பவங்களானவை பெண்ணிற்கான உரிமை மீறல் செயற்பாடாக அமைகின்றன. எனவே இவ்வாறான வீட்டு வன்முறைகளிலிருந்து விடுபட்டு ஒரு பெண் சுதந்திரமாக வாழ வேண்டுமெனில் தேவை நாடும் மகளிர் அமைப்புஇ பொலிஸ் நிலையம் (சிறுவர் பெண் உத்தியோகத்தர்) சிறுவர் மற்றும் மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் (WDO) போன்றவற்றை நாடுவதனூடாக ஏற்படுத்திக் கொள்ளமுடியும்.

**யாழ் பல்கலைக்கழகம்**
**ஊடகக் கற்கைகள்**
**2ம் வருடம்**

# தமிழ் தெரியாதா?

ந.பரமேஸ்வரன்

அனைத்துலக தமிழியல் ஆய்வு மகாநாடு யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் நடைபெறுகிறதாம். அனைத்து உலகம் என்றால் என்ன அர்த்தம் என யாழ்ப்பாண பல்கலைக்கழக தமிழியல் விற்பன்னர்கள் விளக்கமளிப்பார்களா? யாரோ ஒரு புண்ணியவான் தமிழ் மீது கொண்ட பற்றின் காரணமாக தனது சொந்தப்பணத்தில் நடத்தும் மாநாட்டை நாங்கள் கொச்சைப்படுத்தவில்லை. ஆனால் இந்த மகாநாட்டுடனாவது இந்த அனைத்துலகம் என்ற சொல்லுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டும். முன்பு அனைத்துலகம் என்ற சொல்லுக்குப்பதிலாக சர்வதேசம் என்ற சொல் பாவனையிலிருந்து. சர்வம் என்ற சொல் வடமொழிச்சொல் என்று யாராவது விளக்கமளிக்கக்கூடும். அப்படியானால் இனி மேல் தனித்தமிழையா அமுல் படுத்தப்போகிறீர்கள். எனது சிற்றறிவுக்கு எட்டிய வகையில் உலகம் ஒன்று தான் இருக்கிறது.

பாதாள உலகம் சுவர்க்கம் நரகம் என்றெல்லாம் மதங்களில் சொல்லப்படுகிறது ஆனால் அப்படி எதுவும் இருப்பதாக விஞ்ஞானபூர்வமாக நிரூபிக்கப்படவில்லை. அப்படி நிரூபிக்கப்பட்டால் பாதாள உலகம், மேல் உலகம், கீழ் உலகம் என்பவற்றிலிருந்து தமிழ் அறிஞர்கள் வந்து கலந்து கொள்கிறார்கள் என்று சொல்லலாம். யாழ்ப்பாண பல்கலைக்கழக பேராசிரியர்கள் வேண்டுமானால் குண்டுச்சட்டிக்குள் குதிரை ஓடுபவர்களாக இருக்கலாம். ஆனால் தமிழ் என்றால் யாழ்ப்பாணம். யாழ்ப்பாணம் என்றால் தமிழ் என்பதை யாழ்ப்பாண பல்கலைக்கழகம் புரிந்து கொள்ள வேண்டும். யாழ்ப்பாணம் தமிழ் நாட்டிலிருந்து வந்து வீடு விசாரித்த புலவனுக்கு பாட்டிலேயே பதிலளித்த மாடு மேய்க்கும் சின்னத்தம்பி, பத்துப்பாட்டிற்பத்துப்பிழைகள் என மகாமாகோ உபாத்தியாயருக்கு கண்டனம் தெரிவித்த குமாரசாமி போன்றவர்கள் பிறந்த மண் எனபதை யாழ்ப்பாண பல்கலைக்கழகம் மறந்து விடலாகாது.

## கடற்படை...

தில் ஒருவர் உயிரிழந்தார். மற்றொருவர் படுகாயமடைந்த நிலையில் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவு வட்டுவாகல் பாலத்துக்கு அருகில் முல்லைத்தீவிலிருந்து சென்ற கடற்படையினரின் வாகனம் சப்த கன்னிகள் ஆலயத்துக்கு முன்பாக, முல்லைத்தீவு நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்றவர்களை மோதியது. இந்த விபத்தில் மல்லாவி துணுக்காயைச் சேர்ந்த அ. கேஜீவன் (வயது-32) உயிரிழந்தார். அவரது மனைவியான கே.வினுசா (வயது-28) படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். இவர்கள் திருமணமாகி மூன்று மாதங்களே ஆகின்றன என்று உறவினர்கள் தெரிவித்தனர்.

விபத்தை ஏற்படுத்திய கடற்படையினரின் வாகனத்திலேயே காயமடைந்த வினுசா மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார். அதன் பின்னர் வாகனத்துடன் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்திற்குச் சென்று சாரதி சரணடைந்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

(ஓ.5,19,246)

## சோறுதான்...

இராஜாங்க அமைச்சரும் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ அரசின் பேச்சாளருமான மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

சூரியன் எப்.எம். வானொலியில் நேற்றுக் காலை ஒலிபரப்பாகிய 'விழுதுகள்' அரசியல் விவாத நிகழ்வில் அவர் பங்கேற்றபோது எழுப்பப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

**கைவிடமாட்டோம்**

கோத்தாபய ராஜபக்ஷ சிங்கள மக்களுக்கு மட்டுமல்ல மூவின மக்களுக்கும் ஜனாதிபதிதான். சிங்கள மக்களின் வாக்குகளால் மட்டும் கோத்தாபய ஜனாதிபதி யாவார் என்று அவருக்கும் எங்களுக்கும் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னரே தெரியும். ஆனால், தமிழ் மக்களின் வாக்குகளும் தனக்கு வேண்டும் என்று கோத்தாபய எங்களிடம் சொல்லியிருந்தார். அதற்கான வேலைத்திட்டங்களை நாம் முன்னெடுத்திருந்தோம். ஆனால், தமிழ் மக்களில் கொஞ்சப் பேர்தான் கோத்தாபயவுக்கு வாக்களித்தார்கள். அதற்காக தமிழ் மக்களை நாம் கவனிக்காமல் இருக்கமாட்டோம்.

**பொய்யுரைக்கின்றனர் சம்பந்தன், சுமந்திரன்**

வடக்கு மக்களுக்கு அரசியல் தீர்வுதான் முக்கியம் என்று தமிழ்த் தலைமைகள் கூறுகின்றார்கள். அனால், அது பொய். சம்பந்தன், சுமந்திரன் பச்சைப் பொய்தான் கூறுகின்றார்கள். கடந்த நான்கரை ஆண்டுகளாக ரணில் அரசுடன் ஒட்டியிருந்ததால் சம்பந்தனுக்கு வாகனங்களுடன் கொழும்பில் பங்களா கிடைத்தது. சுமந்திரன் உள்ளிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் வெளிநாடுகளுக்குச் சுற்றித் திரிந்தார்கள். தங்களின் பிள்ளைகளை வெளிநாடுகளில் படிக்க வைத்தார்கள். பல வசதிகளுடன் வீடுகளை வாங்கினார்கள்.

இப்படியான கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள்தான் வடக்கு, கிழக்கு மக்களுக்கு தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வுதான் முக்கியம் என்று பொய்யுரைக்கின்றார்கள். உண்மையில் தமிழ் மக்களுக்கு சாப்பாடுதான் முக்கியம். அதாவது சோறுதான் மிக முக்கியம். அது கிடைக்காமல் வடக்கில் வசிக்கும் மக்கள் மிகவும் கஷ்டப்படுகின்றார்கள். ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் நான் கிளிநொச்சி மாவட்டத்தில் தங்கி நின்றேன். அங்குள்ள பல பகுதிகளுக்குப் போய் பார்த்தேன். அங்கு தண்ணீர் இல்லை, மின்சாரம் இல்லை, ஒழுங்கான வீதிகள் இல்லை. வேலைவாய்ப்பு இல்லை. பொருளாதார வசதி இல்லாததால் அங்குள்ள மக்கள் சாப்பிடக் கஷ்டப்படுகின்றார்கள்.

**வடக்குக்குச் செல்வோம்**

நாம் ஜனாதிபதி கோத்தாபயவுடன் இம்மாதம் வடக்குக்குச் செல்ல உள்ளோம். அங்குள்ள உண்மை நிலைவரங்கள் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் பேசுவோம். வடக்கு மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளை பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்க்கக்கூடிய வழிகளைச் செய்யவுள்ளோம். அங்கு தொழிற்சாலைகளை அமைக்கவுள்ளோம். சிங்கள மக்கள் வாக்களித்தமைக்காக தமிழ் மக்களுக்கு நாம் ஒன்றும் செய்யாமல் இருக்க முடியாது.

**இராணுவ முகாம்களை அகற்றவே மாட்டோம்**

வடக்கிலுள்ள இராணுவ முகாம்களை அக்கற்றமாட்டோம். இராணுவம் முகாம் அதிகமாக இருக்கும் காணிகளை மட்டும் அகற்றி அந்தக் காணிகளை உரிய மக்களிடம் மீளக்கையளிப்போம். சில நாள்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் இருந்து ஒருவர் என்னுடன் தொலைபேசியில் பேசினார். 'கோத்தாபய ஜனாதிபதியாக வந்தால் நாம் உயிருடன் இருக்க மாட்டோம் என்று பயந்தோம். ஆனால், அவர் நல்ல மனிதர்போல் இருக்கின்றார். அவரின் செயல்களை இப்போது வெளிப்படையாகப் பார்க்கும்போது புரிகின்றது. எனவே, அடுத்த தடவை அவருக்கு நாம் ஆதரவு வழங்குவோம்' என்று அந்த நபர் என்னிடம் கூறியிருந்தார். கோத்தாபய ஜனாதிபதியாக வந்தால் தமிழ் மக்களை அடிப்பார், துன்புறுத்துவார் என்று தேர்தல் காலத்தில் தமிழ்க் கட்சிகள் பொய்தான் சொன்னார்கள். அந்தக் கட்சிகளின் பொய்களை இனிமேல் எவரும் நம்பக்கூடாது.

**சமஷ்டிக்கு இடமில்லை**

நாம் அரசியல் தீர்வு குறித்து தமிழ்த் தரப்புடன் பேசுவோம். ஆனால், சமஷ்டியைக் கொடுக்கமாட்டோம். அதற்காக மக்கள் எமக்கு வாக்களிக்கவில்லை. ஒற்றையாட்சியைப் பாதுகாக்கவே மக்கள் வாக்களித்தார்கள். அரசமைப்பின் 13ஆவது திருத்தத்திலிருந்து நாம் பேச்சுக்களை ஆரம்பிப்போம். அதில் மூவின மக்களும் நன்மையடையும் பரிந்துரைகளை மட்டும் நடைமுறைப்படுத்துவோம். அதற்கு மேல் எம்மால் செல்ல முடியாது. மூவின மக்களும் நன்மையடையும் வகையில் தான் தீர்வை எம்மால் வழங்க முடியும்.

**ஜெனிவாவில் கால அவகாசம்**

நாம் புதிய அரசு. நாம் பதவிக்கு வந்து இப்போது இரண்டு மாதங்கள்தான் நிறைவடைகின்றன. மார்ச் மாதம் ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடர் நடைபெறும்போது எமது அரசு ஆட்சிக்கு வந்து நான்கு மாதங்கள் தான் நிறைவடையும். அதேவேளை, மார்ச்சில் நாடாளுமன்றத் தேர்தலும் நடைபெறவுள்ளது. எனவே, ஐ.நா. தீர்மான விவகாரம் தொடர்பில் பெப்ரவரி மாதத்துக்கிடையில் எம்மால் எதுவும் செய்ய முடியாது. எனவே, இந்த விவகாரம் தொடர்பில் ஜெனிவாவுடன் நாம் பேச கால அவகாசம் கேட்கவுள்ளோம். எனினும், இது தொடர்பில் ஜனாதிபதிதான் ஆளுங்கட்சி உறுப்பினர்களுடன் பேசி இறுதி முடிவெடுப்பார்.

**இணக்கத்துக்கு வருவோம்**

போரின்போது இரு தரப்பிலும் இழப்புக்கள் மற்றும் குற்றங்கள் இடம்பெற்றன. இந்த விவகாரம் நமது நாட்டுப் பிரச்சினை. எனவே, போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஜெனிவாவில் பேசத் தேவையில்லை. இங்கு தமிழ் மக்களுடன் பேசுவோம். ஓர் இணக்கத்துக்கு வருவோம்.

**தேசிய கீதம்**

தேசிய கீதம் சிங்கள மொழியில் மட்டும் பாடுவது தொடர்பில் இன்னமும் இறுதி முடிவை அரசு எடுக்கவில்லை. 2015 ஆம் ஆண்டுக்கு முன்னர் நடைபெற்ற சுதந்திர தின நிகழ்வுகளில் சிங்கள மொழியில் மட்டும்தான் தேசிய கீதம் பாடப்பட்டது. ஆனால், 2015ஆம் ஆண்டுப் பின்னர்தான் சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் தேசிய கீதம் பாடப்பட்டு வருகின்றது. எனவே, இரண்டு மொழிகளிலும் தேசிய கீதத்தைப் பாடலாமா அல்லது சிங்கள மொழியில மட்டும் தேசிய கீதத்தைப் பாடலாமா என்று அரசு இனித்தான் இறுதி முடிவை எடுக்கும் - என்றார்.

(ஓ.5,22)

## ஆட்டையைப்...

பாருங்கோ. முந்தி இருந்த மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்களுக்குப் பதிலா இனிமேல் மாவட்ட ஒருங்கிணைப்பு அதிகார சபைகள் தான் இயங்கப் போகுதாம். அதில வடக்கின்ர ஒரு மாவட்டத்துக்குத் தலைவரா எங்கட பெற்றோல் செற் எம்.பியைத்தான் போட்டிருக்காம்.

வர்த்தமானியில பேர் வந்த உடன துள்ளிக் குதிச்சுக் கொண்டு ஆள் கச்சேரிக்குத்தான் ஓடிச்சாம். அதிகார சபைத் தலைவர் என்றுறதால தனக்கு ஒரு அறை கச்சேரியில வேணுமென்டு பாய் படுக்கையோட போட்டாராம். அதிகாரியளுக்கு என்ன செய்யிறதென்டு தெரியாம, கையைப் பிசைஞ்சு கொண்டு வேற வழியில்லாம ஒரு அறையை ஒதுக்கிக் குடுத்திருக்கினம். அங்க இருந்து கொண்டு ஒவ்வொரு அதிகாரிக்கும் , கனவு கண்டு எழும்பிட்டு , ஒவ்வொரு வேலையைச் செய்யச் சொல்லி ஓடர் போடுறாராம். அப்பிடிச் செய்விக்கிற வேலையள் எல்லாமே தேவையே இல்லாத ஆணியள் என்டுறது வேற கதை. அதைவிட உந்தப் புது அதிகார சபைக்கு என்ன அதிகாரம், என்னென்ன செய்ய வேணும், எந்தெந்த அதிகாரிகள் உள்வாங்கப்பட வேணும் என்டுறது கூட இன்னும் அரசாங்கம் தெளிவாச் சொல்லேலை.

ஆனா பெற்றோல் செற் எம்.பி, ஆட்டை அறுக்க முதல் நாக்கை அறுத்த கதையா அவசரப்பட்டுக்கொண்டே இருக்கிறார். உதைவிடவும் ஒரு முசுப்பாத்தி நடந்திருக்கு.

லைசென்ஸ் எடுக்கிறதுக்கு, மெடிக்கல் வாங்கச் சனம் விடியப்பிறமே கியூவில நின்டு கஷ்டப்பட்டதுகள். இதுக்கு என்ன மாற்றுவழி என்டு பெற்றோல் செற் எம்.பி, கச்சேரி அதிகாரியளிட்ட கேட்டிருக்கிறார். அவையும் மூளையைக் கசக்கிப் பிழிஞ்சு மெடிக்கல் தேவையென்டு விண்ணப்பிக்கேக்கையே எப்ப மெடிக்கல் எடுக்கோணும் என்டு ஒரு திகதியைக் குடுத்தால், பிரச்சினை தீர்ந்திடும் என்டு ஐடியா சொல்லியிருக்கினம். விடுவாரா எங்கட எம்.பி? அடுத்தநாளே அதே ஐடியாவை தானே சொந்தமா யோசிச்சுக் கண்டுபிடிச்சது போல ஊடகங்களுக்கு அறிக்கை விட்டு, நடைமுறைக்கும் கொண்டு வந்திட்டார். அடுத்தவன்ர ஐடியாவை ஆட்டையைப் போட்டு அதைத் தன்ர என்டு பப்ளிக்காச் சொல்லுறதுக்கும் ஒரு தைரியம் வேணும் தானே?

## கோத்தா...

பதி கோத்தாபய தனது பயணத்தை மேற்கொள்ளவுள்ளார். முன்னதாக ஜனவரி மாதம் முதல் வாரம் இந்தப் பயணத்தை மேற்கொள்வதற்கு பீஜிங் பரிந்துரைத்திருந்தது என்றும், பின்னர் மீளாய்வு செய்யப்பட்டு, 14, 15ஆம் திகதிகளில் பயணத்தை மேற்கொள்வதற்கு இணக்கம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. நவம்பர் மாதம் ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னர் கோத்தாபய மேற்கொள்ளவுள்ள இரண்டாவது வெளிநாட்டுப் பயணம் இதுவாகும். அவர் நவம்பர் 28 தொடக்கம் 30 வரை இந்தியாவில் உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொண்டிருந்தார்.

இதேவேளை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ எதிர்வரும் பெப்ரவரி 8 ஆம் திகதி இந்தியாவுக்கான பயணத்தை மேற்கொள்ளவுள்ளார். பிரதமராக பதவியேற்ற பின்னர் மஹிந்த மேற்கொள்ளும் முதலாவது வெளிநாட்டுப் பயணம் இதுவாகும். புதுடில்லியில் இந்தியப் பிரதமர் மோடி மற்றும் உயர்மட்ட அரசியல் பிரமுகர்களை மஹிந்த இந்தப் பயணத்தின் போது சந்திக்கவுள்ளார்.

(ஓ.5)

## தீயில்...

கொக்குவில் அரசடிப் பகுதியைச் சேர்ந்த மகேஸ்வரன் தவேஸ்வரி (வயது-48) என்பவரே இவ்வாறு தீயில் எரிந்து சாவடைந்துள்ளார்.

சம்பவம் தொடர்பாக தெரிய வருவதாவது: குறித்த பகுதியில் வசிக்கும் 18 வயதுடைய மாணவி ஒருவர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக கடந்த புதன் கிழமை மீட்கப்பட்டிருந்தார். மகள் இறந்த நிலையில் பொலிஸார் விசாரணை மேற்கொண்டிருந்த போது குறித்த தாய், வீட்டு அறையினைப் பூட்டிவிட்டு தனக்குத்தானே மண் எண்ணெய் ஊற்றி தீ மூட்டியுள்ளார். அவர் தீயில் எரிவதைக் கண்ட பொலிஸார் அறையின் கதவினை உடைத்து தீயினைக் கட்டுப்படுத்தியதுடன் எரிகாயங்களுக்குள்ளான தாயை மீட்டு அம்புலன்ஸ் மூலம் யாழ்ப்பாணம் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். எனினும் பலத்த எரிகாயங்களுக்கு உள்ளான அவர் சிகிச்சை பலனளிக்காத நிலையில் நேற்று சாவடைந்துள்ளார். திடீர்இறப்பு விசாரணை அதிகாரி நவசிவாயம் பிறேமகுமார் இறப்பு விசாரணைகளை மேற்கொண்டார்.

(ந- 26)

## இன்னொரு...

மான பொ.ஐங்கரநேசன் தெரிவித்தார். முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தலைமையிலான புதிய கூட்டணியில் இணைவதற்கு, தமிழ்த் தேசிய பசுமை இயக்கம் இன்னமும் சம்மதம் தெரிவிக்கவில்லை. இதுவரை ஏன் இணையவில்லை என்று பொ.ஐங்கரநேசனிடம் கேட்டபோதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் தமிழ் அரசு கட்சி பெரியண்ணன் மனோபாவத்தில் நடப்பதாலேயே, தமிழ் தேசிய கூட்டமைப்பிலிருந்து கட்சிகள் வெளியேறுகின்றன. இது புதிய கூட்டணியிலும் நடக்கக் கூடாது. இந்த கூட்டணி சந்தர்ப்பவாதக் கூட்டணியாக அல்லாமல், கொள்கைக் கூட்டணியாக அமைய வேண்டும். இப்படியான சில விடயங்களை அவருக்கு நான் தெரிவித்திருக்கிறேன். அவரிடமிருந்து இன்னும் பதில் வரவில்லை, அதற்காக காத்துக் கொண்டிருக்கிறேன்.

தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவராகச் செயற்படும் விக்னேஸ்வரன், சிவில் அமைப்பான தமிழ் மக்கள் பேரவையின் தலைமையை வகிக்க முடியாது என்பதை நான் ஆரம்பத்திலிருந்தே வலியுறுத்தி வந்தேன். எழுக தமிழ் ஏற்பாட்டு குழு கூட்டத்திலும் அதை வலியுறுத்தினேன். இப்படியான சம்பவங்களால்தான் எனக்கும், அவருக்குமிடையில் முரண்பாடு இருப்பதாகச் சிலர் கருதுகிறார்கள். நான் கொள்கை அடிப்படையில் சொல்ல வேண்டியவற்றை நேரடியாக சொல்லியிருக்கிறேன். அவ்வளவுதான், என்றார். (ஒ.5)

## இந்தியாவின்...

உலகத் தமிழ் வம்சாவளி அமைப்பின் ஏற்பாட்டில் சென்னை கலைவாணர் அரங்கத்தில் நடைபெறும் ஆறாம் ஆண்டு உலகத் தமிழர் திருநாள் விழா, உலகத் தமிழ் வம்சாவளி ஒன்றுகூடல் நிகழ்வு நேற்று ஆரம்பமானது. இன்றும் நடைபெறுகிறது. இந்த நிகழ்வில் நேற்று சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றியபோதே இதனைத் தெரிவித்தார்.

அவர் தனது உரையில் முக்கிய மாகத் தெரிவித்ததாவது:

**இனக் கலவரம்**

தற்போதைய ஜனாதிபதி இலங்கை ஒரு சிங்கள -பௌத்த நாடு என்று கூறுவதில் உறுதியாகவுள்ளார். ஒருவேளை விரைவில் வரப்போகும் நாடாளுமன்றத் தேர்தலில் பெரும்பான்மை சிங்கள மக்களின் வாக்குகளைப் பெற அவர் அவ்வாறு கூறி வருகின்றாரோ நாம் அறியோம். மீண்டும் ஒரு கலவரம் 1958, 1977 மேலும் 1983ல் வந்தது போல் இனியும் வருமோ என்ற பயத்தில் தமிழ் மக்கள் இருக்கின்றார்கள். சென்ற ஏப்ரல் 21ஆம் திகதியன்று தடம்புரண்ட சில இஸ்லாமியர்களால் ஏற்படுத்தப்பட்ட தாக்குதல்கள் இஸ்லாமியச் சகோதரர்களையும் மனக் கிலேசத்தில் ஆழ்த்தியுள்ளது. ஆகவே இலங்கையில் தமிழ்ப் பேசும் இனம் இன்று மிக மோசமான ஒரு சூழலை எதிர்கொண்டுள்ளது. முள்ளிவாய்க்கால் படுகொலைகளை நிகழ்த்திய அகந்தையோடு சிங்கள -பௌத்த விரிவாக்கமானது முன்னெப்போதும் இல்லாதளவில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

**மதிக்காத இலங்கை**

தமிழர் நிலமெங்கும் தீவிரப்படுத்தப்படும் ஆக்கிரமிப்புக்கள் தமிழ் மக்கள் மீதான தொடர்ச்சியான இனவழிப்பு நிகழ்ச்சிநிரலை உறுதி செய்து நிற்கின்றன. தமிழ் மக்கள் தமக்கு இழைக்கப்பட்டுவரும் அநீதிகளுக்கான நீதியையும் அவை மீள நிகழாமைக்கான உறுதிப்பாட்டையும் வேண்டி சர்வதேசத்தின் முன்னிலையில் தொடர்ந்தும் போராடி வருகின்றனர். இந்நிலையில் ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைச் சபை தமிழ் மக்களை திருப்திப்படுத்தாத தீர்மானங்களை தமிழ் மக்களின் பலமான எதிர்ப்பின் மத்தியிலும் முன்வைத்து அதனை நடைமுறைப்படுத்தக் கோரி இலங்கை அரசுக்கு இரண்டு தடவைகளாக நான்காண்டு கால அவகாசத்தை வழங்கியிருந்தும், அதனைக்கூட கிஞ்சித்தும் மதிக்காத இலங்கை அரசு மாறாக சர்வதேச சமூகத்துக்கே சவால் விடும் வகையில் போர்க் குற்றவாளிகளையே மிக உயர் பதவிகளுக்கு நியமித்து வருகின்றது.

**தீராத பிரச்சினை**

இலங்கைத் தீவின் சிங்கள- பௌத்த அரசக் கட்டமைப்பு போர்க்குற்றங்கள் சம்பந்தமாகப் பொறுப்புக் கூறத் தயாரில்லை. எனவே சர்வதேச விசாரணையைத் தவிர எமக்கு வேறு வழியில்லை. இதனைச் சர்வதேச சமூகம் உணர்ந்து கொள்ள வேண்டும். எமது உலகளாவிய உறவுகளான நீங்களும் புரிந்து கொள்ள வேண்டும். போர் முடிவுக்கு வந்து பத்தாண்டு காலத்தின் பின்னரும் அரசியல் கைதிகளுக்கு தீர்வு கிடைக்கவில்லை. பயங்கரவாத தடைச்சட்டம் உள்ளவரை அரசியற் கைதிகளுக்கு நீதி கிடைக்கப் போவதில்லை. பயங்கரவாத தடைச்சட்டத்தை ஒரு கருவியாகக் கையாண்டு தமிழ் சிவில் எதிர்ப்புக்களை - தன்னெழுச்சியான மக்கள் போராட்டங்களை அரசு அச்சுறுத்தி வருகின்றது.

**காணாமல் ஆக்கப்பட்டோர்**

வட்டுவாகல் மற்றும் ஓமந்தைச் சோதனைச் சாவடிகளில் தமது உறவுகளை இராணுவத்திடம் கையளித்த பெற்றோரும், வாழ்க்கைத் துணைகளும், சகோதரர்களும், உறவினர்களும் இன்றும் கண்கண்ட சாட்சிகளாக இருக்க, அவர்களுடைய சாட்சியங்களின் அடிப்படையில் உண்மைகளைக் கண்டறிந்து இப்பிரச்சினைக்கு நீதியான தீர்வை வழங்குவதற்கு மறுத்து வருகின்ற இலங்கை அரசு தற்போது காணாமல் போனோர் அலுவலகங்களைத் திறந்து பாதிக்கப்பட்ட மக்களையும் சர்வதேச சமூகத்தினையும் தொடர்ந்தும் ஏமாற்றி வருகின்றது.

**இராணுவ மயமாக்கல்**

இலங்கை அரசானது இராணுவ மயமாக்கலின் ஊடாக தொடர்ந்தும் தமிழ் மக்களது காணிகளைச் சுவீகரித்து வைத்திருப்பதன் மூலம் உல்லாச விடுதிகள், விவசாயப் பண்ணைகள், இதர வர்த்தக நடவடிக்கைகளைத் தாமே மேற்கொண்டு மக்களின் வாழ்வாதாரத்தைப் பறிப்பதுடன் தொடர்ந்தும் பொதுச்சேவை நிர்வாக விடயங்களிலும் தலையீடு செய்து வருகின்றது. வடகிழக்கு தமிழர் தாயகப் பகுதிகளிலே தொடர்ந்தும் மேற்கொள்ளப்படுகின்ற சிங்களக் குடியேற்றங்கள் மற்றும் பௌத்த மயமாக்கல் செயற்பாடுகளுக்கு பூரண அனுசரணையையும், பாதுகாப்பையும் வழங்குவதினூடாக இலங்கை இராணுவம் தமிழர்களின் இருப்பை மலினப்படுத்துகின்றது.

**அரசியல் தீர்வு**

தமிழ் மக்களுக்கான அரசியற் தீர்வு விடயத்தில் தமிழ் மக்களுக்கான பாதுகாப்பு என்பது அவர்களை சுயநிர்ணய உரிமையுடன் கூடிய ஓர் தேசிய இனமாக அங்கீகரிக்கப்பட்ட அடிப்படையில் அமைந்தாலே ஒழிய எமது பாதுகாப்புக்கு இடமில்லை என்பதை தொடர்ச்சியான வரலாறும் தொடரும் நிலைமைகளும் மீண்டும் மீண்டும் இடித்துரைத்து நிற்கின்றன. இலங்கையில் தமிழ் மக்களுக்கான எந்தத் தீர்வுத் திட்ட முயற்சியும் பிரிக்கப்பட முடியாத வடக்குக் கிழக்குத் தாயகத்தில் தமிழ்த் தேசத்தை உறுதிப்படுத்துவது, அதனுடைய இறைமை அங்கீகரிக்கப்படுவது, சுயநிர்ணய உரிமை அடிப்படையிலான சமஷ்டித் தீர்வை அமைப்பது போன்ற விதத்திலேயே அமைய வேண்டும் என்பதை மீண்டும் ஒரு முறை சர்வதேச சமூகத்திற்கும் எமது வெளிநாட்டு உறவுகளுக்கும் கூறிவைக்கின்றேன்.

நடைபெறும் நிகழ்வுகளைப் பார்த்தால் எதிர்காலத்தில் இலங்கைத் தீவில் தமிழர்கள் வாழ்ந்தார்கள் என்பதற்கான தடங்களைத் தேடவேண்டிய நிலையே ஏற்படப் போகின்றது என்று எண்ண வேண்டியுள்ளது. இதனை தடுத்து நிறுத்த வேண்டுமாயின் உலகின் பல்வேறு நாடுகளிலும் வாழும் தமிழ் மக்கள் 'தமிழ்' என்ற அடையாளத்தின் கீழ் ஒன்றிணைந்து எமக்காக குரல்கொடுப்பதுடன் உரிய செயற்பாடுகளில் இறங்க வேண்டும்.

**ஒற்றையாட்சி**

இன அழிப்பில் இருந்து எம்மை பாதுகாத்துக்கொள்வதற்கு சுயநிர்ணயத்துடன் கூடிய சமஷ்டிக் கட்டமைப்பு ஒன்றே பாதுகாப்பான தீர்வாக அமையும். இதை பெற்றுக்கொடுக்கும் பாரிய கடப்பாடு பாரத மக்களிடையே இருக்கின்றது. ஒற்றையாட்சிக்குள் ஏற்படுத்தப்படும் எந்தத் தீர்வும் தீர்வாகாது என்பதற்கு இந்தியாவால் கொண்டுவரப்பட்ட 13வது திருத்தச் சட்டமே சான்றாக அமைந்திருக்கின்றது. இலங்கை ஆட்சியாளர்கள் அன்று இந்தியாவைத் தீர்வு என்ற மாயைக்குள் சிக்கவைத்து இந்தியாவையும் எமது இளைஞர்களையும் மோதவைத்து பல கசப்பான சம்பவங்களை ஏற்படுத்தியதுடன் பின்னர் மிகவும் தந்திரமாக 13வது திருத்தத்தில் உள்ள மிகமுக்கிய சரத்துக்களையும் நீக்கிவிட்டு இன்று அதனை முற்றுமுழுதாக குப்பைக்குள் எறிவதற்குத் தயாராகி வருகின்றனர்.

இலங்கையில் எந்தளவுக்கு தமிழ் மக்கள் ஒடுக்கப்படுகின்றார்களோ, எந்தளவுக்கு அவர்களின் பூர்வீக வடக்குகிழக்கு தாயகம் ஆக்கிரமிக்கப்படுகின்றதோ அந்தளவுக்கு அது இந்தியாவின் பாதுகாப்புக்கு ஆபத்தானது என்பதை மறந்து விடாதீர்கள். அதாவது இந்தியாவின் பாதுகாப்பு இலங்கையில் தமிழ் மக்களைப் பாதுகாப்பதில் தங்கியுள்ளது. இதனை இந்தியக் கொள்கை வகுப்பாளர்கள் புரிந்து கொள்ள வேண்டும். எமது நாட்டின் சிங்களத் தலைவர்களிடையே இந்தியா மீது பற்றோ பரிவோ இல்லை என்பதை நீங்கள் தயவுசெய்து புரிந்துகொள்ளுங்கள்.

**கட்டமைப்புத் தேவை**

அடுத்து எமது தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுக்கும் வகையில் புத்திஜீவிகளைக் கொண்ட ஒரு மூலோபாய கட்டமைப்பை ஏற்படுத்தி நீங்கள் செயற்படவேண்டும். தென் இந்தியாவில் மாநிலங்களுக்கு இடையே அரசியல் வேறுபாடுகள் இருந்தாலும் எமது பிரச்சினைகள் தொடர்பில் ஏனைய மாநிலங்களின் சட்டமன்றங்களையும் ஒரு பொதுக் கொள்கையின் கீழே கொண்டுவந்து எமது உரிமைகளை வென்றெடுப்பதற்காக மத்திய அரசினுடாக நீங்கள் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று தமிழ் நாட்டு சகோதர சகோதரிகளிடமே வேண்டிக்கொள்கின்றேன். இலங்கையில் தமிழ் மக்கள் எந்தளவுக்கு உயர் அதிகாரத்துடன் இருக்கின்றார்களோ அந்தளவுக்கு இந்தியாவின் தென்கோடி பாதுகாப்பாக இருக்கும் என்று எடுத்துச் சொல்லுங்கள். எமக்கு கிடைக்கக்கூடிய உயர் அதிகாரங்கள் எந்தவிதத்திலும் இந்தியாவின் மாநில சுயாட்சிக்கு அச்சுறுத்தலாக அமையாது.

இங்கு இருக்கக்கூடிய அரசியல் வேறுபாடுகளைப் புறந்தள்ளி ஒருங்கிணைந்து தமிழக அரசியல்வாதிகள் இந்த விடயத்தில் செயற்படுவார்கள் என்ற நம்பிக்கை எமக்கு இருக்கின்றது. இறுதியாக, 2009ம் ஆண்டு முள்ளிவாய்க்காலில் பல்லாயிரக்கணக்கில் எமது மக்கள் உயிர்துறந்து இனவழிப்புக்கான பரிகார நீதி எனும் போராட்ட வலுவை எமக்கு ஏற்படுத்தியுள்ளனர். வடக்கு மாகாண சபையில் இது தொடர்பாக இன அழிப்பு தீர்மானம் ஒன்றையுங் கொண்டுவந்துநிறைவேற்றியிருக்கின்றோம். இதனை சர்வதேச அளவில் கொண்டு சென்று நீதியை வென்றெடுப்பதற்கு இங்குள்ள தமிழ் உறவுகள் அனைவரும் உதவவேண்டும் - என்றார். (ஒ.5)

## குட்டி...

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணியிலுள்ள பங்காளிக் கட்சித் தலைவரான மனோகணேசன் பகிரங்கமாகத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தனது முகநூலில் பதிவிட்டுள்ளதாவது,

ஐக்கிய தேசியக் கட்சியுடன் கூட்டணியில் இருப்பதாலும், 'எடுத்தேன், கவிழ்த்தேன்' என்ற முதிர்ச்சியற்ற அரசியலை எப்போதும் செய்யாததாலும் இது பற்றி நாமும் அக்கறை கொள்ள வேண்டியுள்ளது. இல்லா விட்டால் 'சரிதான் போங்கடா' என்று நாம் சும்மா இருக்கலாம்.

இப்போது இவர்களில் சிலர் இரகசியமாக ஆளும் கட்சியுடன் உறவாடி அரசுக்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மை பெற்றுத்தர திட்டமிட்டுச் செயற்படுவதாகவும் தெரிகிறது.

'பங்காளிச் சிறுபான்மைக் கட்சிகள் தேர்தலில் தனித்துப் போட்டியிட வேண்டும். நாம் ஐக்கிய தேசியக் கட்சியாகத் தனித்துப் போட்டியிடுகிறோம்' என்று நவீன் திஸாநாயக்க சொல்லிப் பார்க்கிறார். 'அப்படிச் சொல்ல வேண்டாம்' என நவீனை திருத்த ரணில் விக்கிரமசிங்க தயாராகவுமில்லை.

எல்லோரும் தனித்துப் போட்டியிட்டால், ஆளும் கட்சிக்கு மூன்றிலிரண்டை சுலபமாகப் பெற்று தரும். இது ஆளும் கட்சியின் இரகசிய திட்டம்.

இப்படி ஐக்கிய தேசியக் கட்சிக்காரர்கள் இரகசியமாக உறவாடுவது, செயற்படுவது, சில சிறுபான்மை பங்காளி கட்சிகள் மத்தியில் ஆளும் கட்சியுடன் பகிரங்கமாகவே பேசுவோம் என்ற எண்ணத்தை ஏற்படுத்துவதை என்னால் உணர முடிகிறது, என்று குறிப்பிட்டுள்ளார். (ஒ.5)

## காய்ச்சல்...

ணம் கந்தர்மடத்தைச் சேர்ந்த சுப்பிரமணியம் சற்குணதேவா (வயது-48) என்ற 3 பிள்ளைகளின் தந்தையே என்பவரே இவ்வாறு இறந்தவராவர். கடந்த ஒரு வாரமாக குறித்த நபருக்கு காய்ச்சல் மற்றும் வயிற்றோட்டம் காணப்பட்டதால் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்தார். இந்த நிலையில் நேற்று மதியம் உணவு உட்கொண்ட பின்னர்அவர் வாந்தி எடுத்த பின் மயக்கமுற்றுள்ளார். மருத்துவமனைக்கு கொண்டு சென்றபோது அவர் முன்பே இறந்தவிட்டதாக அங்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. ந. பிறேமகுமார் இறப்பு விசாரணைகளை மேற்கொண்டார். (ந- 26)

ராசி அதிர்ஷ்டம்
திகதி 11.01.2020 | வெற்றி வாரம் 2735 | வர்ணம் இளநீலம்
மகரம்
வெற்றி இலக்கங்கள் 19 24 37 49
ஞாயிற்றுக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 34, 04, 186/=
12.01.2020ம் திகதி ஞாயிற்றுக் கிழமை ஊதா நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.

கோடிபதி கப்ருக
சீட்டிழுப்பு வாரம்: 544
திகதி: 2020 ஜனவரி 10
வர்ணம்: பச்சை
வெள்ளி
Z 11 17 22 33
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 84,933,120/-
மஞ்சள், இளஞ்சிவப்பு மற்றும் பச்சை நிற டிக்கட்டுகள் முறையே ஞாயிற்றுக்கிழமை, செவ்வாய்க்கிழமை மற்றும் வெள்ளிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றிபெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>KK என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1107
சீட்டிழுப்பு திகதி 2020.01.11 சனிக்கிழமை
W 22 26 51 54
ஊதா, பச்சை, நீலம், சிவப்பு நிற டிக்கட்டுகள் முறையே திங்கட்கிழமை, வியாழக்கிழமை, சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றிபெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.



# 204 ஓட்டங்களால் வெற்றி பெற்ற மன்னார் சித்தி விநாயகர் இந்து

யாழ்ப்பாணம், ஜன.12

இலங்கை பாடசாலை துடுப்பாட்டச் சங்கத்தினால் நடத்தப்படும் 19 வயதிற்குட்பட்டவர்களுக்கான 2 நாட்கள் கொண்ட டெஸ்ட் துடுப்பாட்ட போட்டி இன்னிங்ஸ் மற்றும் 204 ஓட்டங்களால் மன்னார் சித்தி விநாயகர் இந்துக்கல்லூரி அணி வெற்றி பெற்றது.

மன்னார் சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி அணிக்கும் வவுனியா புதுக்குளம் மகாவித்தியாலய அணிக்கும் இடம்பெற்ற ஆட்டத்தில்,முதலில் துடுப்பெடுத்தாடிய மன்னார் சித்தி விநாயகர் அணி 47 பந்துப் பரி மாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 302 ஓட்டங்களை பெற்றது. அணி சார்பில் அனோஜன் 107 ஓட்டங்களையும், கதுசன் 70 ஓட்டங்களையும், பகீர்த்தனன் 44 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர்.பந்து வீச்சில் லதுஜன் 3 இலக்குகளையும், சானுஜன் 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

தனது முதலாவது இன்னிங்ஸுக்காகத் துடுப்பெடுத்தாடிய வவுனியா புதுக்குளம் மகாவித்தியாலய அணி 20.3 பந்துப் பரிமாற்றங்களில் 37 ஓட்டங்களுக்குள் சகல இலக்குகளையும் இழந்து. அதிகபட்சமாக தேவிகன் 9 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் கிஷாந் 3 இலக்குகளையும், கிதுசன் 3 இலக்குகளையும் சாய்த்தனர்.

265 ஓட்டங்கள் பின்னிலையில் இருந்த புதுக்குளம் மகாவித்தியாலய அணிக்கு "பொலோ ஒன் " வழங்கப்பட்டது. அதன்படி தனது இரண்டாவது இன்னிங்ஸுக்காகத் துடுப்பெடுத்தாடிய அந்த அணி 20.3 பந்துப் பரி மாற்றங்களில் 61 ஓட்டங்களுக்குள் சகல இலக்குகளையும் இழந்தது. பந்து வீச்சில் லிவான்சன் 4 இலக்குகளையும், அனோஜன் 3 இலக்குகளையும் கைப்பற்றினர். (23)

# ஆண்,பெண் வீதி ஓட்டப் போட்டி முடிவு





கரணவாய், ஜன.12

யாழ். மாவட்ட ரீதியாக நடத்தப்பட்ட வீதி ஓட்ட நிகழ்வில் 20வயதுக்குட்பட்டோருக்கான நிகழ்வில் மானிப்பாய் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த சுஜீகரனும் 20 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான நிகழ்வில் கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த மகிழனும் முதலாமிடத்தைப் பெற்றனர்.

யாழ்.மாட்டச் செயலகமும் யாழ். மாவட்ட அமெச்சூர் மெய்வன்மைச் சங்கமும் இணைந்து நடத்திய 15கிலோமீற்றர் வீதியோட்ட நிகழ்வு நேற்று கரவெட்டி பிரதேச செயலகத்தின் முன்பாக இடம்பெற்றது.

கரவெட்டி பிரதேச செயலகத்தில் இருந்து ஆரம்பமான இந்த வீதியோட்டம் நெல்லியடிச் சந்தியூடாக வதிரிச் சந்தி, உடுப்பிட்டிச் சந்தி, நாலாம் சந்தி, வல்லைச் சந்தி, யாழ். பருத்தித்துறை வீதியூடாக மீண்டும் போட்டி ஆரம்பமான இடத்தில் நிறைவடைந்தது.

இதில் 20 வயதுக்குட்பட்டோருக்கான நிகழ்வில் மானிப்பாய் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த எஸ். சுஜீகரன் 57 நிமிடங்கள் 11 செக்கன்களில் ஓடிமுடித்து முதலாமிடத்தையும், அண்ணாசிலையடி இளைஞர் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த எஸ்.அபிசன் ஒரு மணித்தியாலயம் 7செக்கன்கள் 4வினாடிகளில் ஓடி இரண்டாமிடத்தையும் அதே கழகத்தைச் சேர்ந்த வை.ஆகாஷ் ஒரு மணித்தியாலம் 7 செக்கன்கள் 6 வினாடிகளில் ஓடி மூன்றாமிடத்தையும் பெற்றனர்.

**20 வயதுக்கு மேற்பட்டோருக்கான போட்டி**

20 வயதுக்கு மேற்பட்டோருக்கான போட்டியில் கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த எம்.மகின் 57 நிமிடங்கள் 58 செக்கன்களில் ஓடி முதலாமிடத்தையும், சோழங்கன் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த எம். அனோஜன் ஒரு மணித்தியாலயம் 04 நிமிடங்கள், 3செக்கன்களில் ஓடி இரண்டாமிடத்தையும், நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த எஸ். கஜருபன் ஒரு மணித்தியாலயம் 7நிமிடங்களில் ஓடி மூன்றாமிடத்தையும் பெற்றனர்.

**20வயதுக்குட்பட்ட பெண்களுக்கான போட்டி**

20வயதுக்குட்பட்ட பெண்களுக்கான வீதி ஓட்ட நிகழ்வில் இளவாலை திருக்குடும்ப கன்னியர் பாடசாலையைச் சேர்ந்த எல். மேரி விதுஷாவும் 20வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான போட்டியில் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த எஸ்.சியானாவும் முதலாமிடத்தைப் பெற்றனர்.

**பெண்களுக்கான10 கிலோமீற்றர்**

பெண்களுக்கான10 கிலோமீற்றர் வீதியோட்டநிகழ்வு நேற்று கரவெட்டி பிரதேச செயலகத்தின் முன்பாக இடம்பெற்றது. கரவெட்டி பிரதேச செயலகத்தில் இருந்து ஆரம்பமான இந்த வீதியோட்டம் நெல்லியடிச் சந்தியூடாக வதிரிச் சந்தி, உடுப்பிட்டிச் சந்தி, நாலாம் சந்தி, உப்பு வல்லைச் சந்தி. யாழ். பருத்தித்துறை வீதியூடாக மீண்டும்



போட்டி ஆரம்பமான இடத்தில் நிறைவடைந்தது.

இதில் 20 வயதுக்குட்பட்டோருக்கான நிகழ்வில் இளவாலை திருக் குடும்ப கன்னியர் பாடசாலையைச் சேர்ந்த எல்.மேரிவிதுஷா ஒரு மணித்தியாலம் 13நிமிடங்கள் 6 செக்கன்களில் ஓடிமுடித்து முதலாமிடத்தையும், அதே பாடசாலையைச் சேர்ந்த எஸ்.கீர்த்திகா 1 மணித்தியாலம் 16 நிமிடங்கள் 5 செக்கன்கள் ஓடி இரண்டாமிடத்தையும், தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியைச் சேர்ந்த எஸ் .சுவர்ணா 1 மணித்தியாலயம் 16 நிமிடங்கள் 2 செக்கன்கள் ஓடி மூன்றாமிடத்தையும் பெற்றனர்.

20வயதுக்கு மேற்பட்டோருக்கான போட்டியில் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த எஸ்.சியானா ஒரு மணித்தியாலம் 7நிமிடங்கள் 6 செக்கன்களில் ஓடி முதலாமிடத்தைப் பெற்றார். (108)

# இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்.ஜன.12

தெல்லிப்பழை பிரதேச பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டிகள் இடம் பெற்று வருகின்றன.

இதில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு இடம் பெறும் ஆண், பெண் இருபாலாருக்குமான எல்லே போட்டி வசாவிளான் மத்திய கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ளது. (23)

யாழ்ப்பாணம்.ஜன.12

மருதங்கேணி பிரதேச செயலக பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான நடப்பு ஆண்டுக்கான விளையாட்டு போட்டி வரிசையில் ஆண், பெண் இருபாலாருக்கு மான கால்பந்தாட்டப்போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் பாரதி, உதயசூரியன் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெறவுள்ளது. (23)

யாழ்ப்பாணம்.ஜன.12

கரவெட்டி பிரதேச செயலக பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான நடப்பு ஆண்டுக்கான விளையாட்டு போட்டி வரிசையில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு ஆண்.பெண் இருபாலாருக்குமான கரம் போட்டி கரவெட்டி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம் பெறவுள்ளது. (23)

யாழ்ப்பாணம், ஜன.12

யாழ். கால்பந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் யாழ்ப்பாணம் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத்தினால் நடத்தப்படும் கால்பந்தாட்ட தொடரின் ஆட்டங்கள் இன்று ஞாயிற்றுக் கிழமை அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் ஆரம்பமாகிறது.

இதில் பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து திருக்குமரன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

மாலை 4.45 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சென்.மேரிஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (23)

வலிகாமம் கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் குப்பிளான் விக்கினேஸ்வரா விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 11 பேர் பங்கு பற்றும் கால்பந்தாட்ட சுற்றுப்போட்டித் தொடரின் ஆட்டங்கள் கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.

இதில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் குப்பிளான் குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (23)

## கோக்லி புதிய மைல்கல்

இலங்கைக்கு எதிரான இறுதி ரி-20 போட்டியின்போது கேப்டனாக விராட் கோக்லி 11 ஆயிரம் ரன்களை எட்டி சாதனை படைத்துள்ளார்.

இந்தியா - இலங்கை அணிகள் மோதும் 3ஆவதும், இறுதியுமான ரி-20 ஓவர் போட்டி நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இதில் கேப்டன் விராட் கோக்லி புதிய சாதனையை படைத்தார். சர்வதேச போட்டிகளில் ஒரு கேப்டனாக 11 ஆயிரம் ரன்னை எடுத்து சர்வதேச போட்டியில் 6ஆவது வீரராக இணைகிறார். ஒட்டு மொத்தமாக சர்வதேச போட்டியில் கேப்டனாக 11 ஆயிரம் ரன்னை 5 பேர் எடுத்துள்ளனர். அந்த வரிசையில் இவரும் இணைந்துள்ளார்.

ஒட்டு மொத்தமாக விராட் கோக்லி டெஸ்டில் 7202 ரன்னும், ஒரு நாள் போட்டியில் 1609 ரன்னும், 20 ஓவர் போட்டியில் 2663 ரன்னும் எடுத்து உள்ளார்.



### ஒக்லாந்து கிளாசிக் ரென்னிஸ்

# செரீனா வில்லியம்ஸ் காலிறுதிக்குத் தகுதி

ஒக்லாந்து கிளாசிக் ரென்னிஸ் போட்டியின் 2ஆவது சுற்றுப் போட்டியில், அமெரிக்க வீராங்கனையான செரீனா வில்லியம்ஸ் வெற்றி பெற்று காலிறுதிக்கு முன்னேறினார்.

ஒக்லாந்து கிளாசிக் ரென்னிஸ் போட்டிகள் ஒக்லாந்து நகரில் நடைபெற்று வருகிறன. இதில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற 2ஆவது சுற்றுப்போட்டியில், அமெரிக்க வீராங்கனையான செரீனா வில்லியம்ஸ், சக நாட்டைச் சேர்ந்த கிறிஸ்டியானா மெக்ஹேலை எதிர்த்து ஆடினார். இப்போட்டியில் முதல் செற்றை 3:6 என்ற கணக்கில் இழந்த செரீனா வில்லியம்ஸ், அடுத்த 2 செற்களையும் 6:2, 6:3 என்ற கணக்கில் கைப்பற்றி காலிறுதிக்கு முன்னேறினார். காலிறுதியில் அவர் ஜேர்மன் வீராங்கனை லாரா சிகமெண்டை எதிர்த்து ஆடவுள்ளார்.


## ரியல் மட்ரிட், அத்தி. மட்ரிட் இன்று மோதல்

ஐரோப்பியக் கழகங்களுக்கு இடையில் இடம்பெற்று வரும் லா லிகா தொடரில் இன்று இடம்பெறும் போட்டியில் ரியல் மட்ரிட், அத்திலட்ரிக் மட்ரிட் அணிகள் மோதுகின்றன.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற போட்டியொன்றில் ரியல் மட்ரிட் அணி 3:1 என்ற கணக்கில் வலன்சியா அணியை வீழ்த்தி வெற்றி பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் ரியல் மட்ரிட் அணி இன்று இலங்கை நேரப்படி இரவு 11.30 மணிக்கு இடம்பெறும் போட்டியில் அத்திலட்ரிக் மட்ரிட் அணியை எதிர்கொள்கின்றது. இரு அணிகளும் பலமான அணிகளாகக் காணப்படுகின்றமையால் இந்தப் போட்டி ரசிகர்களுக்கு விருந்தாக அமையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.





# ஐயனார் வி.க. மகுடம் சூடியது

யாழ்ப்பாணம், ஜன.12

புங்குடுதீவு இறுப்பிட்டி சனசமூக நிலையத்தின் 70ஆவது ஆண்டு நிறைவு மற்றும் பொங்கல் விழாவை முன்னிட்டு புங்குடுதீவு இறுப்பிட்டி சனசமூக நிலையம் இறுப்பிட்டி விளையாட்டுக் கழகம் இணைந்து தீவக ரீதியாக நடத்தும் விளையாட்டுக்களின் வரிசையில் ஆண்களுக்கான கரப்பந்தாட்டச் சுற்றுத் தொடரில் செட்டிப்புலம் ஐயனார் விளையாட்டுக் கழக அணி கிண்ணம் வென்றது.

புங்குடுதீவு இறுப்பிட்டி விளையாட்டுக் கழக மைதானத்தில் மின் ஒளியில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் செட்டிப்புலம் ஐயனார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வேலணை மகேஸ்வரி விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் செட்டிப்புலம் ஐயனார் விளையாட்டுக் கழக அணி 2 : 1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (23)



### மலேசியா மாஸ்டர்ஸ் பேட்மிண்டன்

# சாய்னா நேவால் காலிறுதிக்கு தகுதி



இந்திய வீராங்கனை சாய்னா நேவால் தென் கொரிய வீராங்கனையை நேர்செட் கணக்கில் வீழ்த்தி காலிறுதிக்கு முன்னேறினார்.

மலேசியா மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் தொடரில் இந்தியாவின் சாய்னா நேவால், காலிறுதிக்கு முந்தைய ஆட்டத்தில் தென் கொரியாவைச் சேர்ந்த அன் சே யங்கை எதிர்கொண்டார். இதில் சாய்னா நேவால் 25:23, 21:12 என்ற நேர்செட் கணக்கில் வெற்றிபெற்று காலிறுதிக்கு முன்னேறினார். இவர் காலிறுதியில் ஒலிம்பிக் சம்பியனான கரோலினா மரினை எதிர்கொள்கிறார்.

**உடனடி வாடகைக்கு மல்லாகம்**
புகையிரத நிலையத்திற்கு அருகில் சகல வசதிகள் கொண்ட சுற்று மதிலுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.
(CS 30532)(14.17)
077 777 8860/ 077 199 9255

**வீடு வாடகைக்கு**
நல்லூரில் தனி அறை, இணைந்த குளியலறை, சிறிய சமையலறை, ஹோல் உடன் அனெக்ஸ் பெண்களிற்கு மட்டும் வாடகைக்கு உண்டு
070 287 7082

**North and East Engineering**
**வேலையாள்கள் தேவை**
பெயின்டிங் வேலை அனுபவம் உள்ளவர்களும், பழக விரும்புபவர்களும் தொடர்பு கொள்ளவும்.(மாதம் அல்லது கிழமை சம்பளம் வழங்கப்படும்) (CS/30538)(11.17)
075 814 5804/ 077 524 4177

**பயிற்சி வகுப்பு**
தையல், ஆரி எம்புரோடறி
(CS/30537)(11.17)
075 898 3021

**அறை வாடகைக்கு**
யாழ் நகரில் கச்சேரி, பொஸ்கோ பாடசாலை அருகில் இணைந்த குளியல் அறை மற்றும் சகல வசதிகளுடன் கூடிய அறை வாடகைக்கு விடப்படும். பெண்கள் மட்டும்.
(CS 30456)(14.17)
077 3496085/ 077 3643975

**IELTS CLASSES**
யாழ் நகரில் கொழும்பு பல்கலைக்கழகம், ஆசிரியரினால் A1 exam (வாழ்க்கைத்துணையுடன் இணைவதற்கான பரீட்சை) வெளிநாடு செல்வோருக்கான IELTS (Academic & General English Grammar & Spoken English) கற்பிக்கப்படுகின்றது.
புதிய பிரிவுகள் 18.01.2020 சனிக்கிழமை ஆரம்பமாகும்.
Guranteed for 7.5 in IELTS Exam
Pass in A1 Exam
(CS 30446)(14.17)
IELTS EXAM CENTRE
Please Contact :
077 780 3970/ 078 521 1351

**பணியாளர் தேவை**
யாழ்.நகரில் பிரபல கையடக்கத் தொலைபேசி நிலையத்துக்கு
1) மடி கணினி திருத்துநர் (Lap Top)
2) கையடக்கத் தொலைபேசி திருத்துநர்
3) விற்பனையாளர்
4) பழக விரும்புபவர்
வயது 18 தொடக்கம் 25 வரை
சம்பளம் - 20,000/= To 30,000/=
அண்மையில் வசிப்போர் விரும்பத்தக்கது.
(CS/30551)(11.17)
077 419 2275,
077 199 6117

**காணி விற்பனைக்கு**
தாவடி வடக்கு வன்னியசிங்கம் வீதிக்கும், அரசடி லேனுக்கும் இடைப்பட்ட 1(ஒரு பரப்பு) காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்புக்கு: 077 172 5450

**வாடகைக்கு**
யாழ் வெலிங்ரன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகில் 378/1-B மணிக்கூட்டு வீதியில் 1500 சதுர அடி கொண்ட களஞ்சியம் சிறிய வாகன தரிப்பிடம் வாடகைக்குண்டு.
(cs 23473)(13.17)
077 271 8458

**Personal Class & Group Class**
Maths Grade
6 - 11
(CS 30501)(4.17)
077 641 3873

**இரசாயனவியல் A/L 2020**
அலகு ரீதியான மீட்டல்களுடன் கடந்தகால வினாக்களும் செய்விக்கப்படும். தனியாகவும், குழுவாகவும் கற்பிக்கப்படும்.
(CS 30308)(4.17)
077 074 7906

**வேலையாள்கள் தேவை**
திருநெல்வேலியில் இயங்கிவரும் உணவகத்திற்கு ரொட்டி, Rice, கொத்து தயாரிக்க தெரிந்தவர்கள் தேவை. சம்பளமும், நேரமும் நேரில் தீர்மானிக்கப்படும்.
தொடர்புக்கு - 076 878 3734

**வேலையாள்கள் தேவை**
யாழ் நகரில் இயங்கி வரும் உற்பத்தி தொழிற்சாலை (Factory) ஒன்றுக்கு பின்வரும் வேலையாள்கள் தேவை.
01. அரிசி ஆலை வேலைக்கு (நெல்வேலை) நாள் ஒன்றுக்கு சம்பளம் 2000(பகல், இரவு)
02. கனரக வாகன சாரதி (CS 30366)(4.17)
076 943 5080

**சிறுநீரகம் தேவை**
O+ இரத்த வகையைச் சேர்ந்த சிறுநீரகம் தேவை. தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
(CS 30519)(4.17)
077 4469371/077 2128907

**பிரத்தியேக வகுப்புக்கள்**
தரம் - 4,5,6 மாணவர்களுக்கான விசேட வகுப்புக்கள் மிகவும் நுட்பமான முறையில் கற்பிக்கப்படும். மாதத்தில் 8 வகுப்புக்கள். முதல் மாத நிறைவில் உங்கள் பிள்ளைகளின் கல்வியில் முன்னேற்றம் காண்பீர்கள். வீடுகளுக்கும் வந்து கற்பிக்கப்படும்.
076 133 9628
அத்தியடி, யாழ்ப்பாணம்.

**விஸ்டம்** தொழில் நுட்பக் கல்லூரி
ஆரம்பமாகி விட்டது
தொழினுட்பப் பிரிவு
புதிய பிரிவு A/L 2022
DAY CLASS A/L 2020
அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளுங்கள் 077 248 7774



கோப்பா டெல் றே போட்டிகளுக்காக போர்த்துக்கல், றியல் பெட்டிஸ் அணிகள் பயிற்சிகளில் ஈடுபடுகின்றனர்.

# நானும் களத்துக்கு திரும்பியுள்ளேன்

## தவான் சூசகம்

ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் வரிசையில் நானும் களத்திற்கு திரும்பியுள்ளேன் என இந்திய கிரிக்கெட் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் ஷிகர் தவான் சூசகமாக தெரிவித்துள்ளார்.

ரோகித் சர்மா - ஷிகர் தவான் ஆகியோர் இந்திய ஒருநாள் மற்றும் ரி-20 கிரிக்கெட்டில் தொடக்க பேட்ஸ்மேன்களாக விளையாடி வந்தனர். தவானுக்கு காயம் ஏற்பட்டதால் லோகேஷ் ராகுல் தொடக்க வீரராக களம் இறங்கி ஆடிவருகிறார். இதற்கிடையே காயத்தில் இருந்து குணமடைந்துள்ள தவான் சமீபத்தில் இலங்கைக்கு எதிரான தொடரில் சிறப்பாக விளையாடினார்.

தொடக்க ஆட்டக்காரராக லோகேஷ் ராகுலும் சிறப்பாகவே ஆடிவருவதால் இந்த ஆண்டிற்கான சர்வதேச ரி-20 அணியில் இருவரில் யாரை தேர்ந்தெடுப்பது என்ற குழப்பம் தேர்வுக்குழுவிற்கும், கேப்டன் விராட் கோக்லிக்கும் இருந்து வருகிறது.

இந்த நிலையில், இலங்கை அணிக்கெதிரான இறுதி ரி-20 போட்டியில் அதிரடியாக ஆடி அரைச்சதம் கடந்தார் தவான்.

இது குறித்து தவான் தெரிவிக்கையில்; கடந்த ஆண்டு ரோகித் சர்மாவிற்கு மிகச் சிறந்த ஆண்டாகும். ராகுல் 2 மாதங்களாக சிறப்பாக செயற்பட்டு வருகிறார். அவர் ஒரு நல்ல வீரர். அதேபோல் நானும் இறுதிப் போட்டியில் களத்தில் சிறப்பாக செயற்பட்டேன்.

அணியில் யார் தேர்ந்தெடுக்கப்படுவார் பற்றி நான் யோசிக்கவில்லை, ஏனென்றால் அந்த விடயம் என் கைகளில் இல்லை. சிறப்பாக செயல்படுவதும் விளையாடுவதும் மட்டுமே என் கைகளில் உள்ளது- என்றார்.

**Vacancies - Field officers**
A/L படித்த கணினி மற்றும் ஆங்கில அறிவுடைய பணியாளர்கள் தேவை. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி: NALTC,134, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
மின்னஞ்சல் naltcjaffna@gmail.com
T.P: 0770385584

**மணமகள் தேவை**
யாழ் இந்து கௌரவ குடும்பத்தை சேர்ந்த லண்டன் பிரஜா உரிமை பெற்ற 1978 ல் பிறந்த அச்சுவினி நட்சத்திரம் 4ஆம் பாதம் கிரகபாவம் 53, 8ல் ஆட்சி பெற்ற செவ்வாய் உடைய மணமகனுக்கு மணமகள் தேவை.
077 129 8159

**புலமைப்பரிசிலும் தொழிற்பயிற்சியும்**
கடந்த 2000 ஆம் ஆண்டு முதல் ஐ.நா. அபிவிருத்தி திட்ட உதவியுடன் அரச திணைக்களங்களை கணினிப்பயிற்சியை வழங்கிய யாழ். MCS IT CAMPUS நிறுவனம் தனது 20 ஆண்டுகள் பூர்த்தியை முன்னிட்டு வடபிராந்திய தகவல் தொழில்நுட்ப சம்மேளனத்துடன் இணைந்து மாணவர்களுக்கு புலமைப்பரிசிலும் தொழிற்பயிற்சியும் வழங்க தீர்மானித்துள்ளது. Bachelor in Information Technology (BIT) கொழும்பு பல்கலைகலைக்கழகம், CIMA UK, Computer Engineering –USA ,மூன்றாம் நிலை தொழிற்கல்வி ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்ற CAA மற்றும் ஆங்கிலம் ஆகிய கற்கை நெறிகளை பயில அரிய சந்தர்ப்பம்.! 100% இலவச கற்றலுடன் முழுநேர தொழில் பயிற்சியும் வழங்கப்படும்.!! புலமைப் பரிசில்கள் க.பொ.த உயர்தர பெறுபேற்றின் அடிப்படையிலும் ஏனையவர்களுக்கு நிறுவனத்தினால் நடத்தப்படும் பரீட்சைகளின் அடிப்படையிலும் வழங்கப்படும்!!!

**புலமைப்பரிசிலிற்கு உங்கள் பெயர் முகவரி பிறந்த திகதி என்பவற்றை 772395895 என்ற எண்ணிற்கு SMS செய்யவும்.**

**கடை வாடகைக்கு**
**Jubilee - Bazar (City Bus stand பின்பக்கம்)**
யாழ்.நகரின் மத்தியில் மேல்மாடி கடைத்தொகுதி வாடகைக்குண்டு. வியாபார ஸ்தாபனமாகவும் களஞ்சியமாகவும் பயன்படுத்தக்கூடியது.
(CS/30551)(11,17)
077 784 7155

**ALLIANCE FRANCAISE DE JAFFNA**
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி
- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSY கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANCAISE மட்டுமே.
- அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம்.



www.ambafrancelk.org
021 222 8093 17, Kandy Road, Jaffna



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 12.01.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.